புதுமை

961

961
4-57

2 - DEC 1957
MADRAS

197689

25 நயா பைசா

PUTHUMAI டிசம்பர் 1, 1957

உலகப் பிரசித்திப்பெற்ற

டாடா - மெர்ஸிடிஸ் பென்ஸ்

டீஸல் டிரக் - பஸ் சேஸிஸ்

உலகத்தின் முதலாவது டீஸல்

இன்ஜின்

ஜெர்மனி தேசத்தின் டெய்ம்லர்

பென்ஸ் தயாரிப்பு

மாடல் LP 5200/48—5 டன்

"புல் பார்வார்ட்" கண்ட்ரோல் சேஸிஸ் 190" W. B.

பஸ் சொந்தக்காரர்களுக்கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கும்

உகந்தது.

எல்லா மேக்குகளுக்கும் மாற்றி அமைக்க

தனி டீஸல் இன்ஜின்களும் கிடைக்கும்.

மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு

அதிகாரம்பெற்ற டீலர்ஸ்:

பாண்டியன்

ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட்,

5, ஸ்காட் ரோடு : : மதுரை.

DPF TEXTILES (PRIVATE) LTD
DPF
TEXTILES
METTUPALAYAM ROAD COIMBATORE
மகிழ்ச்சியான
செய்தி!
தங்கமீன் மார்க்
(CONES & HANKS)
20ம்.நெ
சிறந்த பஞ்சு நூலை
நாங்கள் தயார்செய்கிறோம்
விபரங்களுக்கு:
போன் நெ 1134
DPF டெக்ஸ்டைல்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
மேட்டுப்பாளையம் ரோடு - G.N.மில்ஸ் P.O - கோயமுத்தூர்.
V.S.V.

நேயர்கள், ஏஜண்டுகள், அன்பர்கள் கவனிக்கவும்!

நமது அலுவலகங்களின் புதிய முகவரி

202, ஜான் ஜானி கான் ரோடு,
(ஜாம் பஜார் தபால் நிலயத்திற்கு எதிரே)
சென்னை-14.

புதுமை
மோகன் ராம் பிரஸ்
கலைவாணி பப்ளிகேஷன்ஸ்

போன் : 1259 தந்தி : "FASHION" தபால் பெட்டி நெ. 16

கலை நிரம்பிக் காண்பதற்கு இனிதாகி
மலர்க்கொடியாள் மனதினை மகிழ வைத்து,
தளிர்மேனி செவ்விதழாள்
மலர்க்கண்ணைத் தன்னகத்தே ஈர்த்து
அழகொளியை அள்ளி வீசும்,

எமது கோயமுத்தூர்

சௌடாம்பிகை

சேலைகளை

வாங்கி கைத்தறியை ஆதரியுங்கள்.

தயாரிப்பாளர்கள்

ஸ்ரீ சௌடாம்பிகை தேவாங்க நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனை சொசைட்டி லிட்.,
நெ. K. 1517 ; கோயமுத்தூர்.

தலைமை ஆபிஸ்:	**விற்பனைக் கிளைகள் :**	**ஸ்டாக்கிஸ்டு:**
& சாயச்சாலை :– 22/307 ரங்கே கவுடர் வீதி, கோவை.	11/47, சுக்ரவார்ப்பேட்டை, கோவை.	நியூ ராதா ஹால்,
	56, பெரியதெரு, திருவல்லிக்கேணி, சென்னை.	பஜார் தெரு, சேலம்.

தலைவர் : **A. K. பழனிசாமி.**

பொருளடக்கம்

"மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை அமரர்க ளாக்குவோம்"

மணி 1 | டிசம்பர் 1957 | ஓசை 5

பக்கம்

அரசியல் :

நந்தி, நகராயோ!	...	4
நிர்வாகத்தை நேராக்குக!	...	5
செயற்கைச் சந்திரனும், செகத்தின் சமாதானமும்!	...	9
சட்டசபை அரங்கில்......	...	11

தொடர் கதைகள் :

காமனை வென்ற கண்	சுகி	...	18
வள்ளியின் உள்ளம்	கு. ப. சேது அம்மாள்	...	76

கதைகள் :

பாசம்	க. நாராயணன்	...	41
தனி வீடு எதற்கடி?	ஏ. வி. எஸ். ரமணி	...	49
யார் தவறு?	விமலா ரமணி	...	65
புன்னுகவராளி	இரா. சுப்பிரமணியம்	...	87
மூளைக்குப் பணம்	ரஞ்சனி	...	95

கவிதை :

காற்றே கேள்	குமரி அ. அனந்தன் எம்.ஏ.	...	39

நாடகம் :

வாராயோ செங்கிலாவே!	ராஜன்	...	33

சிறுவர் பகுதி :

சின்னப் பொண்ணு	ஜாய்ஸ் பொன்னையா	...	56
சாய்ந்தாடு	தே. ப. பெருமாள்	...	58

கலைப்பகுதி :

'மகாதேவி'	ஆர். எஸ். எஸ்.	...	60
நாட்டியம்	ரஞ்சன் பி.ஏ. எம்.லிட்.	...	62

'புதுமை'யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

நந்தி, நகராயோ !

புதுமை

ஆசிரியர் :
கோசல்ராம்.

நிர்வாக ஆசிரியர் :
P. X. ரங்கசாமி, B.A.

சென்னை — மார்கழி–கார்த்திகை — டிசம்பர்

நிர்வாகத்தை நோக்குக!

“ஐந்தாண்டுத் திட்டங்கள் தான் நாட்டின் எதிர்கால நல் வாழ்வை உருவாக்குகின்றன. வறுமையை எதிர்த்துப் பொறுமையோடு பொருளாதார விடுதலைக்காகப் போராடும் காலத்தில் இன்று நாம் இருக்கின்றோம்”—இது நாட்டை ஆளும் காங்கிரஸ் கட்சிக்காரர்களின் நம்பிக்கை. “இந்தத் திட்டங்கள் காகிதத் திட்டங்கள்; சுபீட்சம் சுதந்திரத்திற்குப் பிறகு வரவில்லை; ஆனால் நேர்மை இன்மையும், இலஞ்ச ஊழலும் தான் பெருகிவிட்டன” இப்படி எண்ணுகின்றார்கள் காங்கிரஸல்லாதார். உண்மை என்ன?

பல பிரச்னைகளில் கூறப்படுவதைப்போல, உண்மை இரண்டிற்கும் இடையிலே இருக்கின்றது. அதாவது, இந்த இரண்டு வாதங்களிலும் உண்மை ஓரளவு இருக்கின்றது; அத்துடன் பிரச்சார நோக்கிற்காக அதை அ[illegible] தங்கள் தங்களு[illegible] சொல்லுகின்ற தன்மையும் இவற்றிலே மிளிர்கின்றது! ஐந்தாண்டுத் திட்டச் சிற்பிகளின் நல்லெண்ணத்தில் யாரும் அவநம்பிக்கை கொள்ள முடியாது; வறுமையை ஒழிக்க, மகாத்மா காந்தியின் கிராம ராஜ்யத்தை அமைக்க அவர்கள் கொண்டுள்ள உறுதியையும் நாம் சந்தேகப்பட முடியாது. புள்ளி விவரங்களை முழுவதும் நம்ப முடியா விட்டாலும், நாட்டிலே ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியைக் காணமுடியாத கருத்துக் குருடர்களாகவும் சோஷலிஸ சமுதாயம் காண இயற்றப்பட்டுள்ள சட்டங்களைப் புரிந்துகொள்ளாதவர்களாகவும் இருக்க முடியாது.

ஆனால்...நாட்டின் நலன் கருதி நமது அரும்பெரும் தலைவர்கள் சிந்தனையில் உருவாகியுள்ள திட்டங்களில் பலவும் காங்கிரஸல்லாதார் பலர் கூறுவதைப் போல ஏட்டுத் திட்டங்களாய் நேர்மை இன்மையை, இலஞ்ச

197689

ஊழலைப் பெருக்கும் திட்டங்களாய், திரிந்துள்ள அவலநிலையையும் புதிய புரட்சிகரச் சட்டங்கள் ஏட்டளவில் இருப்பதையும் கண்டிக்காமல் இருக்கவும் முடியாது! ஏன் இந்த நிலை ?

நல்லெண்ணத்துடன் திட்டப் பெற்ற திட்டங்களில் ஊழலும், ஒழுக்க மின்மையும் ஏன் தாண்டவ மாடுகின்றன? உண்மையிலேயே திட்டத்தின் குறைபாடுகளை எப்படி நீக்கலாம்?—இது தான் நமது கேள்வி !

நல்ல ஏட்டுத் திட்டங்கள் நாட்டிலே ஏன் நனவாக முடியவில்லை?

நாம் சொல்லுகின்றோம் : நிர்வாக இயந்திரம் நேராக இல்லை; இயக்குகின்ற பெருந்தலைவர்களிடம் புரட்சிகரமான கண்ணோட்டத்திற்குப் பஞ்சம்; அரசாங்கத்தின் உண்மை எஜமானர்களாகிய பொது மக்களின் விழிப்புணர்ச்சி போதிய அளவுக்கு இல்லை !

இந்த முப்பெரும் காரணங்களே, திட்டங்களின் பலனை நூற்றுக்கு நூறு நாம் பெற முடியாமல் செய்கின்றன.

முதலில் நிர்வாக இயந்திரத்தைப் பார்ப்போம். அது முழுவதும் 'ரிப்பேராகிக்' கிடக்கின்றது!

அதை உருவாக்கியது யார் ?

நம்மைச் சுரண்டுவதற்காக, வெற்றிகரமாக அதிக பட்ச அளவிற்குச் சுரண்டுவதற்காக, ஆளவந்த ஆங்கிலேயர்கள் அமைத்துத் தந்த இயந்திரம் அது !

சுதந்திரத்திற்குப் பிறகு நிர்வாகத்தின் இலட்சியமே சுரண்டுவதை ஒழித்து சோஷலிஸ அமைப்பு காணும் எதிர் திசைக்கு மாறிவிட்டது.

ஆம்; இலட்சியம் மாறிவிட்டது; ஆனால் சாதனம் மாறவில்லையே!

முன்னேற்றப் பாதையில் ஆயிரம் மைல்வேகத்தில் போக ஜெட் விமானம் தேவை—இது இலட்சியம், கையிலிருக்கும் 'சிவப்பு நாடா' நிர்வாகம், கட்டை வண்டி வேகத்தில் செல்கின்றது—இது நடைமுறை !

பிரதமர் ஜவஹர்லால் நேரு இதை உணர்ந்தே பலமுறை பேசுகின்றார். 'மக்களுக்கு அதிகாரிகள் பணியாட்கள்' என்று. இதனை ஒப்புக்கொள்ள எவ்வளவு அதிகாரிகள் தயாராக உள்ளார்கள் ?

பல திட்டங்கள் பலனற்றுப் போவதற்குக் காரணம், மக்கள் சேவைதான் தங்கள் இலட்சியம் என்பதை மறந்த அதிகாரிகள், தாங்கள் நிறைவேற்ற வேண்டிய திட்டங்களில் தாங்களே நம்பிக்கை வைக்காதவர்கள்—இவர்கள் தானே ?

'மதுவிலக்கை' நிறைவேற்ற நியமிக்கப்பட்டு உள்ள அதிகாரிகளில்பலருக்கு அதில் நம்பிக்கை கிடையாது—அப்படி இருந்தால் கூடப் பரவாயில்லையே!

சிலர் வேலியே பயிரை மேய்வது போலவும் நடந்து கொள்கிறார்களே! 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்றுபேசப் படுகின்றது. 'கூட்டுறவு காமன் வெல்த்' என்று காங்கிரஸ் அரசியல் சட்டம் கூறுகின்றது. சென்னை ராஜ்யமே கூட்டுறவுத் துறையில் முதன்மையாக இருப்பதாக மேடைகளில் முழங்குகிறார்கள் !

நாம்கேட்கின்றோம்: 'உண்மையில் சில பெரியதனக்காரர்கள் நாட்டில் எத்தகையைமாறுதலும் கூடாதென விவாதிக்கும் திறமை படைத்தவர்களிடம் கூட்டுறவு இயக்கம் "நல்ல கூட்டுறவாக" அமைந்திருப்பதைக் காண்கிறோம். பொதுமக்களிடையே தவிர பொதுமக்களிடையே கூட்டுறவு முறை கொண்டு வந்திருக்க வேண்டிய நாட்டுயர்வு வந்திருக்கிறதா?

திட்டங்களில் நம்பிக்கை இல்லாத, பழைய அதிகார போதை மாறாத அதிகாரிகளும் இதற்குப் பெரும்பாலும் காரணம் என்றும் கூறுகின்றோம். அதிகாரபோதை தான் மாறவில்லை; போகட்டும். 'நேர்மை'யாவது இவர்களிடம் இருக்கின்றதா? **மோகன்லால் சாக்சேனா, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் எக்கனமிக் ரெவியூவில் எழுதுகின்றார்:** 'எனது நண்பர்களில் ஒருவர் (சமுதாயஊழியர்) சமுதாயத்தின் பல துறைகளில் உள்ளவர்களாகிய நீதிபதிகள், வக்கீல்கள், வியாபாரிகள், வைத்தியர்கள், அரசாங்க ஊழியர்கள் மற்றும் பொதுஜன ஊழியர்களிடம், இலஞ்ச ஒழிப்பு பற்றிக் கேட்டு அவர்கள் அபிப்பிராயத்தை அறியச் செய்த விசாரணைக்குப் பிறகு, என்னிடம் அவர்களில் ஒருவர் கூட, இலஞ்ச ஊழல் குறைவதாக அபிப்பிராயப் படவில்லை என்று கூறியுள்ளார். உண்மையில் அவர்களில் பலர் இலஞ்ச ஊழல் பெருகி வருவதாகவும், நியாயமாக நடக்கின்ற அதிகாரிகளை 'முட்டாள்களாக' அவர்களுடைய 'அதிக புத்திசாலிகளான' இலஞ்சம் வாங்கும் அதிகாரிகள் கருதுவதாகவும் கூறுகின்றார்கள்!"

எப்படி இருக்கிறது பார்த்தீர்களா? இலஞ்சம் வாங்கத் தெரியாதவர்கள் முட்டாள்களாம்!

x x x

அதிகாரிகள் இப்படி என்றால், அதிகார பீடத்தில் அமர்ந்திருக்கும் தலைவர்கள் நிலை என்ன?

பழைய ஏகாதிபத்திய உலையில் உருவாக்கப்பட்ட அதிகாரிகளை மாற்றி, சேவையில் இன்பமும், நாட்டுப்பற்றில் நாட்டமும் கொண்ட இளைஞர்களை நிர்வாக இயந்திரத்தில் அமர்த்த எத்தனை மந்திரிகளுக்குத் துணிச்சல் இருக்கின்றது?

தவறு செய்பவர்களை மக்கள் மன்றத்தில் கொண்டு வரும் தைரியம் கொண்டவர்கள், இவர்களில் எத்தனை பேர்?

இலஞ்சம் வாங்குபவர்களை, நேர்மையில்லாதவர்களை தூக்கிலிட வேண்டாம்; நேரு கூறியதைப் போல நாற்சந்தியில் நிறுத்திச் சவுக்கால் அடிக்கக் கூட வேண்டாம். அதிகாரபூர்வ நடவடிக்கையாவது எடுக்க வேண்டாமா?

எடுக்கப்படவில்லை என்பதற்கு நூறு நூறு உதாரணங்கள் நாம் தர முடியும்! ஸ்ரீமோகன் லால்சாக்சேனாகூறுகிறார்: தேசிய முக்யத்வம் வாய்ந்த நேரத்தில் ஓர் மிக முக்கியமான அதிகாரி கண்ணியக் குறைவாக நடந்து ஓர் தவறான பில்லைக் கொடுத்தார். அவரைக் கூண்டிலேற்றப் பிரதம மந்திரியே தலையிட்ட பிறகுதான் முடிந்தது!

இந்தக் குறைகள் எல்லாவற்றிற்கும் அடிப்படை ஸ்ரீமான் பொது ஜனத்தின் அக்கறை இல்லாத போக்கு!

பொதுமக்களும் 'குறை' கண்ட இடத்துக் கொதித்தெழ வேண்டும்; அதே நேரத்தில் நிறை கண்டு பாராட்டவும் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

திட்டங்கள் வெற்றி பெற நிர்வாகத்தை நேராக்குங்கள். காலத்திற்கேற்ற கருத்துக்களோடு செயல்படுங்கள். 'வீட்டு நலனைவிட நாட்டு நலன் பெரிது'—என்று கருத ஆட்சி பீடத்திலுள்ளவர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

அபிவிருத்தி திட்டங்களில் நம்பிக்கையுடன், தேசீய மனப்பான்மையுடன் சேவை செய்ய முடியாத நிலையிலுள்ள பெரிய அதிகாரிகளை உடனடியாகக் கட்டாய ஓய்வு பெறச் செய்யுங்கள் என்றும் யோசனை கூறுகின்றோம்.

'தரத்தையும், பண்பாட்டையும் உயர்த்துவோம் வாரீர்!' என்று பொதுமக்களுக்கு அழைப்பும் விடுகின்றோம்!

நமது புதிய காரியாலயம்

202, ஜான் ஜானி கான் ரோடு, சென்னை-14. என்ற முகவரிக்கு மாற்றப் பட்டுள்ளது. தயவு செய்து இந்த மாற்றத்தைக் குறித்துக்கொள்ளக் கோருகிறோம்.

—**ஆசிரியர்.**

அட்டைப் பட விளக்கம்

"குழல் இனிது யாழ் இனிது என்பர் தம் மக்கள், மழலைச் சொல் கேளாதவர்."

யாழில் பல வகை உண்டு. கடைச் சங்க காலத்திலும் அதற்கு முன்னும் தோன்றிய சான்றோர் செய்யுட்களிலுள்ளே **வில்** யாழும் **சீறி** யாழும், **பேரி** யாழும் குறிக்கப் பட்டிருக்கின்றன. **மகர** யாழும் **சகோட** யாழும், **செங்கோட்டி** யாழும் சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும், பெருங் கதையிலும், சீவக சிந்தாமணியிலும் காணப்படுவன.

பால் போல் நில வொளி வீச, நீரோடையின் பக்கம் வீற்றிருக்கும் ஆரணங்கின் பிஞ்சு விரல்கள் பட்டு யாழினின்றும் எழும் நெஞ்சை அள்ளும் இன்னிசையில் மெய் மறந்து காணப்படுகின்ற தல்லவா அட்டைப் படத்தில் காணப்படும் வெண்ணுடை போர்த்த அன்னப் பறவை ?

செயற்கைச் சந்திரனும், ...
.... செகத்தின் சமாதானமும்!

சென்ற சில வாரங்களாக, இரஷ்யா பறக்க விட்டுள்ள செயற்கைச் சந்திரன்களைப் பற்றிய செய்திகளே உலகெங்கிலும் கேட்டன.

பத்திரிகைகளும் பல ரசமான செய்திகளைப் பிரசுரித்தபடி இருந்தன.

தங்கள் தங்கள் கோணங்களில் இருந்து, பலப்பல விசித்திரமான விமர்சனங்கள் வெளிவந்தன.

இரஷ்யச் சார்பு நாடுகளில் குதூகலம் கொந்தளிக்க, அமெரிக்கர்களிடையே ஆத்திரம் பொங்கியது.

'அழிவுப் போட்டியை விடுத்து ஆக்கப் போட்டிக்கு அடிகோலுக'' என அழைப்பு விடுத்தார் குருச்சேவ். சுதந்திர உரிமைகளைப் பறித்து, அரசாங்க எதேச்சாதிகாரத்தால் கட்டுப்படுத்துவதால் தான் இரஷ்யர்கள் ஒரே மனிதனைப் போலச் செயல் படுகிறார்கள் என்று குற்றம் கூறினார் ஐஸன்ஹோவர்.

அமெரிக்க மக்கள் தங்கள் உரிமைகளில் சிலவற்றை விட்டுக் கொடுத்து அரசாங்கத்தோடு ஒத்துழைத்தால் தான், அமெரிக்கா இரஷ்யாவுடன் வானவெளியில் போட்டியிட முடியும் என்று அபிப்பிராயப்பட்டார் டல்லஸ்.

அமெரிக்கா, இரஷ்யாவுடன் இந்தத் துறையில் போட்டியிட இங்கிலாந்தால் முடியாது என்று அங்கலாய்த்தார் மாக்மில்லன்.

செயற்கைச் சந்திரனைக் கீழே இறக்கும் வழியைக் காணவில்லையே என்றுசோவியத்விஞ்ஞானிகள் வெட்கப்பட, பறக்க விடத் தெரியாவிட்டாலும், இறக்கும் வழி எங்களுக்குத் தெரியும் என மார் தட்டினார்கள் அமெரிக்க விஞ்ஞானிகள்.

'இரஷ்யச் சந்திரனைச் சுட்டு வீழ்த்தினால் என்ன?' என்று கேட்டார் ஓர் பித்துக்குளி செனட்டர்!

இவ்வளவு விமர்சனங்களுக்கிடையிலும் இரண்டு செயற்கைச் சந்திரன்களும் வான வெளியில் தங்கள் பிரயாணத்தைத் தொடர்ந்து நடத்திக் கொண்டுள்ளன! வானவெளியில் இரஷ்யா நடத்தும் இந்த அற்புதங்களின் அரசியல் உட்கருத்துக்களை உலகம் எதிர்காலத்தில் தான் அறியமுடியும்!

எப்படி இருந்தாலும் சரி, ஒன்று தெளிவாகிவிட்டது— உலகம், கிரகங்களுக்குப் பிரயாணம் செய்யும் காலத்தை எட்டிவிட்டது!

x x x

ஆனால் ...?

விஞ்ஞானிகள் படைத்துள்ள இந்த விந்தைகள், ஆக்கவேலைகளுக்குப் பயன் படுத்தாமல், அழிவு வேலைகளுக்கு உபயோகமானால் மனித வர்க்கத்தின் கதி என்ன?

சந்திரனையும், செவ்வாயையும் அடைவதற்குப் பதிலாக இந்த ராட்சத ராக்கெட்டுகள், உலக வல்லரசுகளால் பலப் பரீட்சை செய்யப் பயன் படுத்தப்பட்டால், உலகம் என்னவாகும்?

இந்தப் பிரச்னையைத் தீர்க்க, உலக சமாதானத்தைக் காக்க, தனக்கே உரிய தனி வழியில், நம் ஒப்பற்ற தலைவர் ஸ்ரீ ஜவஹர்லால் நேரு, ஹாங்காங் வரவேற்பில் பேசியிருக்கிறார்.

"அணுக்குண்டுகளைக் கூட பழைய ஆயுதங்களாக ஆக்கி, மின்னல் வேகத்தில் முன்னேறும் விஞ்ஞானத்தினால் எழுந்துள்ள பிரச்னைகளைத் தீர்க்க வேண்டுமானால், மனிதனுடைய மனத்தில் புதிய ஓர் வளர்ச்சி வேண்டும். அந்த வளர்ச்சி ஆத்மிக வளர்ச்சி. விஞ்ஞான முன்னேற்றமும், செயற்கைச் சந்திரனும், பிரச்சினைகளை ஆத்மிக ரீதியில் அணுகும் வழியை அடைத்து விடவில்லை. எல்லா விஞ்ஞான முன்னேற்றங்களும் நன்மையைத் தீமையாகவோ, தீமையை நன்மையாகவோ மாற்றவில்லை. உலகம் படிப்படியாக நாகரீகம் அடையும் என்று நாம் நம்புவோமாக! உண்மையில் உலகம் இன்று நாகரீகம் அடையவில்லை. தொழில் நுட்பத்துறையிலும். விஞ்ஞானத் துறையிலும் உலகம் மிகவும் முன்னேறியிருந்தாலும், அது நாகரீகமடையவில்லை. இந்த முன்னேற்றங்கள், மனித வர்க்கத்தின் அழிவிற்கன்றி, மனித வர்க்கத்தின் முன்னேற்றத்திற்காக உபயோகப்படுத்தும் பொழுது உலகம் நாகரீகம் அடையும். விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் பிரமிக்கத் தக்க வேகத்தில் முன்னேறுகின்றன. ஆனால் அந்த வேகத்தோடு இயங்கும் வகையில், மனித மனத்தின் சக்தியால் முடியாது போய், அது பின் தங்கியுள்ளது.

ஆகவே புதியதோர் பாதையில் நாம் வாழும் இந்தப் புதிய நாளில், அணுசக்தி நாளில், கிரகங்களிடையே பிரயாணம் நடக்கவிருக்கும் காலத்தில், அதற்கு ஏற்றபடி நம் மனங்கள் பண்பட வேண்டும். அப்படி நாம் செய்யா விட்டால், படுமோசமான அழிவுதான் விளையும்."

ஸ்ரீ நேருவின் நேரிய உரை உலக மக்களின் உள்ளத்திலே பதிய வேண்டும்.

கருமுகிலிடையே ஒளி மின்னலென அவரது பேச்சு உற்ற நேரத்தில் ஒளிர்ந்துள்ளது.

செயற்கைச் சந்திரனை விட்டுள்ள பெருமை ஒருபுறமிருக்க, அது செகத்தின் சமாதானத்தை வளர்க்கும் கருவியாக இருக்கட்டும் என்ற ஆத்மீக வளர்ச்சி ஏற்படவேண்டும்.

'யங் இந்தியாவில்' தந்தை காந்தி, 1928-லேயே, சுதந்திரத்தின் உண்மையான அர்த்தம், மனது சீராக நமது சக்தியைச் செலவிடுவது தான் என்று எழுதினார்.

'மனதி லுறுதி வேண்டும்
வாக்கினிலேயினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட
வேண்டும்!'

என்ற மணிவாக்கின்படி, மனித வர்க்கம், ஆத்மீக வளர்ச்சி பெற்று சமாதானப் பணியில் ஈடுபடுதலே இன்றைய அவசர, அவசியத் தேவை!

ஸ்ரீமதிகள்:

சௌந்திரமும், சத்தியவாணியும்!

எப்பொழுதுமில்லாத விறு விறுப்பு சட்டசபை இந்த முறை கூடு முன்பாகக் காணப்பட்டது.

சட்டசபை கூடப் பத்து நாட் களிருக்கும் போதே கோட்டை யிலுள்ள காரியாலயங்களில் 'டானிக்குகள்,' எதிர் கட்சி வாதங்களுக்கு 'மாற்று மருந்துகள்', புதிய உண்மை களென்ற 'இன்ஜெக்‌ஷன்கள்' ஆகியவை சர்க்கார் தரப்பில் பரிமாறிக் கொள்ளப்பட்டன!

x x x

கடைசியிலே, அந்த நாளும் வந்தது.

எதிர்க் கட்சிகள் சார்பில் ஸ்ரீமான் கலியாண சுந்தரம் அரசாசாங்கத்தின் மீது நம்பிக் கையில்லாத் தீர்மானத்தைக் கொணர்ந்தார்.

ஸ்ரீமான் கலியாண சுந்தரம் தனது கட்சியை நல்ல முறை யிலே வாதிக்க எண்ணினுலும், அவர் உள்ளத்திலிருந்து வராத பேச்சு என்பதால் அதில் எதிர் பார்த்த வேகம் காணப்பட வில்லை!

ஸ்ரீமான் உ. மு. தேவரின் பிரதம சீடர் என்று அழைக்கப் பட நூற்றுக்கு நூறு தமக்குத் தகுதியுண்டு என்று ஸ்ரீ சசிவர் ணத் தேவர் நிரூபித்துக் கொண் டார்! அஞ்சாது எதையும்விளைவு கருதாது வீசிப் பேசும் 'தேவர் பாணி' அவர் பேச்சிலே காணப் பட்டது.

அரசாங்கத் தரப்பிலும் பல ஆணித்தரமான பிரசங்கங்கள் செய்யப்பட்டன. ஆனால் உண்மையிலே கேட்டவர்கள் அனைவரும் கண்ணீர் வடிக்கும் படியாக மிக உருக்கமாகப் பேசியவர்கள், ஸ்ரீமதிகள் சௌந்திரம் இராமச்சந்திரனும், சத்தியவாணிமுத்துவும் என்று கூறினுல் அது உண்மை, வெறும் புகழ்ச்சி யில்லை!

x x x

ஸ்ரீமதி சௌந்திரம் அம்மா ளின் உடை வெளுப்பு...ஸ்ரீமதி சத்தியவாணி முத்துவின் உடையோ கருப்பு!

முன்னவர் காங்கிரஸ் கட்சிக் காரர்... பின்னவர் தி. மு. கழ கத்தினர்...

ஒன்று வடதுருவம்... மற்றது தென் துருவம்...

கருத்திலே, கட்சியிலே இலட்சியத்திலே இவ்வளவு வேறுபாடுகள் பெற்றிருந்தும், இருவருக்கும் ஒன்று பொது வாக இயற்கையிலே அமைந் திருக்கிறது!

அதுதான் 'தாய்மை' உள் ளம்... கருணை ததும்பும் 'அன்னை' நெஞ்சம்...... கொடுமை கண்டு கொதிக்கும் பண்பு... அதன் விளைவாக, பாதிக்கப்பட்டோர் பால் பொங் கும் அன்பு...

"பூமியினும் பொறை மிக்கு
டையாள் பெரும்
புண்ணிய நெஞ்சினள் தாய்—
எனில்
தோமிழைப் பார்முன் நின்றிடுங்
காற்கொடுந் துர்க்கை யனை
யவள் தாய்"

என்ற பாரதி இலக்கணத் தின் இலக்கியமாக இருவரும் இலங்கினர்கள்!

'கட்சி' என்ற காழ்ப்பை ஒதுக்கி, நடு நிலை நின்று பேசினார்கள் இந்த அம்மையார்கள்!

x x x

ஸ்ரீமதி சௌந்திரம் இராமச்சந்திரன், தான் காங்கிரஸ்காரி என்ற முறையில் பேசவில்லை என்றும், கலவரம் நடந்தபிறகு மாத்திரம் அங்கே சென்றுள்ள தலைவர்களை விடத்தனக்கு முதுகுளத்தூர் பற்றிய விவரங்கள் நன்கு தெரியும் என்று கூறினார்கள்.

நடு நிலை நின்று ஸ்ரீமதி சௌந்திரம் அம்மையார், ஸ்ரீசசிவர்ணத் தேவரின், 'தேவர் பாணிப்' பிரசங்கத்திற்குப் பதில் சொல்லிப் பொய்ப் பிரசங்கம் பலவற்றை அம்பலப்படுத்தினார்.

புயல் நிவாரணத்தோடு, சாந்தி சேனைப் பணி ஆகியவற்றின் அநுபவம் அவருடைய பேச்சிலே தெளிவாக வெளியாயின. 'தாய்மை' உள்ளத்தோடு, கலவரத்தால் பாதிக்கப்பட்ட ஹரிஜனங்கள் நிலை பற்றி அவர் பேசியபோது எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கண்ணீர் விடா விட்டாலும், கண் கலங்கவாவது செய்தார்கள்!

ஸ்ரீமதி சத்திய வாணிமுத்து அம்மையார், மற்றோர் கோணத்தில் நின்று நிலைமையை விமர்சித்தார்கள். ஸ்ரீ. உ. மு. தேவர் 1937ம் வருஷத்திலிருந்தே ஹரிஜனங்களைக் கொடுமைப் படுத்தி வந்துள்ளார் என்று உதாரணத்துடன் பல நீதிமன்ற தீர்ப்புகளைப் படித்து விளக்கினார்கள். ஊழியர் இமானுவேல் சேகரன் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து உடனடியாக ஸ்ரீ உ. மு. தேவரையும், மற்றவர்களையும் அரசாங்கம் ஏன் கைது செய்யத்தவறியது? என்று கேட்டார்கள்.

கீழத்தூவல் சம்பவம் பற்றிய நீதி விசாரணையை உடனடியாக அரசாங்கம் ஏற்பாடு செய்ததால் போலீஸார் பரமக்குடியில் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டியிருந்தது என்றும், அப்படிச் செய்யாமலிருந்தால் பல கலகங்களைத் தவிர்த்திருக்க முடியுமென்றும் சொன்னதுடன், நீதி விசாரணை எதுவும் இனித் தேவையில்லை என்றும், அத்தகைய விசாரணைகள் பாதகமாக பலனையே ஏற்படுத்தும் என்றும் முழங்கினார்கள்!

மேலும், முதுகுளத்தூர் வட்டாரத்தில் ஹரிஜனங்களுக்கு மாத்திரம் என்ன... போலீஸ் காரர்களுக்கே பாதுகாப்பில்லையே! மரியாதை அணிவகுப்பு நடத்தவா இராணுவம் இருக்கிறது! ஏன் அரசாங்கம் இராணுவத்தை முதுகுளத்தூருக்கு அனுப்பத் தவறியது என்று அவர்கள் பேசியதைக் கேட்டு, போலீஸை வாபஸ் பெறவேண்டும் என்று பேசியவர்களில் பலருக்கு மூச்சே திணறிவிட்டது!

x x x

இவ்வாறு ஸ்ரீமதிகள் சௌந்திரமும், சத்தியமும் சட்டசபை அரங்கிலே 'தாய்மை' உள்ளத்தோடு உண்மைகளை வெளியிட்டார்கள் ...

இருளைக் கிழித்து ஒளி பிறக்க உதவியதில், சென்ற 'புதுமை' இதழ் தலையங்கமாகிய 'முதுகுளத்தூர் முனிபுங்கவருக்கும்' கணிசமான பங்குண்டு என்பதை அடக்கமாகச் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகின்றோம்!

திருப்பாச்சேத்தியில் ஹரிஜன வீடுகளைத் தீயிடும் பொழுது போலீஸாரால் சுடப் பட்ட ஒருவர் தனது மரணவாக்குமூலத்தில், தான் ஒரு ஹரிஜன் என்றும், தேவர்கள் மீது பழி சுமத்தி தான் தன் வீட்டையே தான் கொளுத்தியதாகவும் கூறிக் கொண்டாராம்...ஆனால் அவர் இறந்த பிறகு தேவர்களாகிய அவருடைய உறவினர்கள் வந்து, 'அவர் தங்கள் உறவினர்' என்று கையொப்பமிட்டு உடலைப் பெற்றுச் சென்றார்களாம்!

எப்படி இருக்கிறது...கலவரத்தை நடத்திய கும்பலின் கல்நெஞ்சம் ...இவர்கள் கதைக்கிறார்கள், அரசாங்கம் கட்டிவைத்துச் சுட்டதென்று! ஒரு பானை சோற்றுக்கு ஒரு பருக்கைதானே பதம் பார்க்க வேண்டும்!

ஆனால்... கெட்டிக் காரர்கள்கூட எட்டு நாள்தானே புளுக முடியும்! அரசாங்கம் நிலை குலைந்து விடும் என்று எண்ணினார்கள்! பாவம், அவர்கள் கனவு 'வெடிக்காத வேட்டாய், ஒன்பது ரூபாய் நோட்டாய்' புதுமையான உவமையிலே சொல்ல வேண்டுமென்றால் 'பறக்க முடியாது தவிக்கும் அமெரிக்கச் சந்திரனாய்' போய் விட்டது!

ஆண்டவன் அருளட்டும்!

இன்றைய நிலையில் ஒரு பத்திரிகை நடத்துவது எத்துணை அரிய காரியம் என்பதை நாம் நன்கறிவோம். இத்துணை அரிய நிலையிலும் பத்திரிகை நடத்துகின்ற உள உறுதிப்பாடுடைய உங்களை வாழ்த்துவதோடு, எல்லாம் வல்ல இறைவனையும் வேண்டிக் கொள்கின்றோம். அவன் உங்களின் புது முயற்சிக்கு உறுதுணையாக இருக்கும்படி இறைஞ்சுகின்றோம்.

வெங்கடேசன்,
திலிட்டில்பிளவர் கம்பெனிக்காக.

விஞ்ஞானக் கட்டுரை வேண்டும்!

'புதுமையில்' கதை கட்டுரைகளே வருதல் "பழகப் பழகப் பாலும் புளிக்கும்" என்பது போல் இருப்பதால், விஞ்ஞானத் தொடர்புடைய கட்டுரைகள் வெளியிடுதல் நலம்.

'ரமன்'
ஹன்டர்ஸ்ரோட்,
புரசவாக்கம்,
சென்னை.

நடையை உயர்த்துக!

சிறுகதைகள் அவ்வளவு சிறப்பாக இல்லை. தமிழ் நடை யுயர்த்தும் அளவாகச் சிறந்த எழுத்தாளர்களுக்கு வாய்ப்பு அளிக்கலாம்.

சித்திரா பால் டிப்போ,
சென்னை 17.

சாதனைக் கட்டுரைகள்!

புதுமையில் எல்லாம் இருந்தும், ஏதோ ஒன்று குறைபாடுடையதாய்த் தென்படுகிறது. அக்குறைபாட்டை நீக்க, 'தொழில் வளர்ச்சி' சம்பந்தமான கட்டுரைகளை வெளியிடுதல் சாலச் சிறந்தது. அதனால் குறை நீங்கி நிறைவுறும்.

சையத் முகம்மது,
சென்னை-5

தனிப்பெரும் தொண்டு!

'முதுகுளத்தூர் முனிபுங்கவர்' தலையங்கத்தை அப்படியே சிறிய புத்தக ரூபத்தில் அச்சிட்டுத் தமிழ் நாடு எங்கும் விநியோகிக்கும் பொறுப்பையும் மேற்கொள்ளுவீர்களானால் தமிழ் நாட்டிற்கே தனிப்பெரும் தொண்டாற்றியதாக கருதப்படும்.

வே. முத்துராமலிங்கம்,
பழநி

வாழ்க புதுமை!

"முதுகுளத்தூர் முனிபுங்கவர்
உருவங் காட்டி
முற்றுமவர் புரிந்துள்ள
லீலை காட்டி
புதுமையாய்த் தலையங்கம்
வளர்ந்த உங்கள்
'புதுமை'யிதழ் பல காலம்
வாழ்க மேலாய்!"

மு. சுப்பிரமணியன்
கலைக்கூடம், வெள்ளூர்,
தஞ்சை மாவட்டம்.

கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் !

உலகம் உய்ய உதித்த உத்தமன் !

உலகமெலாம் பாவ இருள் உமிழ்ந்து நின்ற வேளை
ஒடுக்க அதைக் கன்னிவயிற் றுதித்த பர ஒளியே !

இலகுடுக்கள் நீபிறந்த இடங்குறிக்கக் கலைஞர்
ஏகி உன்றன் அடிவணங்க இன்பமருள் சேயே!

கலகமன வேந்தாட்சி கலகலத்து வீழக்
கடலுலகில் அருளாட்சி கால்கொண்ட அரசே!

அலகையினை அதட்டியதன் சோதனையை வென்ற
ஆண்டகைமை வீரகுரு அடியை யடைந்தேனே.

—திரு. வி. க.

போன் : 2257

தீ பாலராமவர்மா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்.,

செங்கோட்டை.

தற்சமயம் உள்ள கதிர்கள் : 14,384

மேற்கொண்டு நிர்மாணிக்கும் கதிர்கள் : 3,472

★

கைத்தறித் தொழிலின் மகோன்னத வளர்ச்சி உயர்ந்த ரக நூலேயும், மிக நேர்த்தியான துணியையும் பொறுத்திருக்கிறது.

எங்கள் ஆலே மிக நேர்த்தியான உயர்ரக நூல்களே விநியோகிக்கிறது.

மானேஜிங் ஏஜண்டுகள்:

மெஸர்ஸ் கரையாளர் & ரங்கசாமிநாயுடு ஸன்ஸ் கம்பெனி

த. பெ. நெ. 297

S. சந்தோச நாடார் லிமிடெட்

இறக்குமதியாளர்களும் மொத்த வியாபாரஸ்தர்களும்

83-85, குமாரவீதி :: கொழும்பு-11.

—:●:—

அலுமினிய பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள், எனுமல் பாத்திரங்கள், பீங்கான் வகைகள், போத்தல்கள், கடிகாரவகைகள், விளையாட்டுச் சாமான்கள், வாசனைத் திரவியங்கள், பவுண்டன் பேனு, சிலேட் பென்சில் வகைகள், சாப்பு சாமான்கள், மற்றும் உணவு சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விலை சகாய மாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிராஞ்சு:

போன்: 333

19, கொட்மலே ரோடு

நாவலப்பிட்டிய.

—:●:—

ஏஜன்ட்ஸ்:

போன்: 3262 த. பெ. நெ. 2345

S. சந்தோச நாடார் & சன்

1/4. ஈவனிங் பஜார் :: :: P. T. மதருஸ்.

&

37, ஹைரோடு

திருநெல்வேலி ஜங்ஷன்.

தொடர் நாவல்

காமனை வென்ற கண்

'சுகி'

அத்தியாயம் 5.
பிரிவுத் துயர்

மானும் மங்கையும் மிரள மிரள விழித்தனர்; யாருடைய கண் அழகுடையதென்று முத்தையன் பார்த்தான். செண்பகத்தின் கண் போலவே மானின் கண்ணும், மானின் கண் போலவே, அவள் கண்ணும் இருப்பதை நோக்கி, "இப்பதான் அம்மா சொல்லுச்சு" என்றான். காரின் கதவோரமாக மான் குட்டியை இடுப்பில் இடுக்கிய படியே நெருங்கி வந்தாள். மான் கண்ணில் இன்னும் பயம் துள்ளிக் கொண்டிருக்கிறது. அவள் கண்ணிலே இருந்த ஒளி அவனை மிரள வைக்கிறது.

"அம்மா என்ன சொல்லுச்சு...கண்ணு மண்ணு தெரியாமல் காரை ஓட்டச் சொல்லுச்சா ?"

"இருட்டிலே கார் வருதுன்னு தெரிஞ்சும் தெருவிலே கிளியங் தட்டு ஆடுகிறீர்களே ?"

"ஆடுறுங்க.........நீங்க பக்க மேளம் தட்ட வர்றீங்களா ?"

இருவரும் கலகலவெனச் சிரித்தனர். செண்பகம் சற்றுத் தொலைவிலுள்ள குமரர் கோவி

வில், அன்று கடைசி வெள்ளியாகவே ஏதோ பாட்டுக் கச்சேரி—அதனைக் கேட்கப் புறப்பட்டாள். கார் குறுக்கே வரவே அருகாக வந்த மான் குட்டி வெளிச்சத்தைக் கண்டு மிரண்டு மயிரிழையில் உயிர் தப்பிற்று.

“நீ ஆட ஆரம்பித்தால் நான் பக்க மேளம் தட்ட வேண்டியது தானே. உன் பேச்சுக்கு நான் தாளம் போட்டது போதும்; பாட்டுக்குத் தாளம் போட மான் குட்டியைப் பழக்கு.”

“அட ஊருக்குத்தான் இதைக் கண்டா கண்ணைக் கரிக்குது. உனக்கும் கூடவா?”

“பேசுருங்களே. மான் குட்டி செண்பகமுன்னு!”

சிரித்த புருவங்கள் நெரிந்தன. “எவன் நாக்கு மேல் பல்லுப் போட்டு இதைச் சொன்னவன்? கொண்டா என் முன்னுலே, விரலை ஒடிச்சு விறகுச் சுள்ளி ஆக்கறேன். சொல்

லுவானே ?" என்று சீறினாள்.

"அட நம்ம ஊரிலே ரெண்டு செண்பகம் இருக்கிறதாலே உன்னை மான் குட்டிச் செண்ப கம் என்று பெயர் சொல்றாங்க."

"எங்காதிலே விழற மாதிரிச் சொல்லணும். அப்போதுதான் இருக்கு வேடிக்கை."

"நானே சொல்கிறேன் என்ன செய்வாயாம் ?"

"விளையாட்டு போதும். உங்க அம்மா என்ன சொல் லுச்சு ?" பேச்சை வேறு பக் கம் திருப்பினாள்.

"புலி நடமாட்டம் இருக்குது. கவனமாக யிரு முத்தையா என்று இப்பத் தான் சொல்லி வாய் மூடலை. நீ வந்து சேர்ந் தே."

"அட என் சூரப்புலியே."

"குமரர் கோவிலிலே கச் சேரிக்கு யார் யார் போகிறார்கள்?"

"அக்கம் பக்கம் ஆட்கள் வருது......எதுக்காக"

"புலி நடமாட்டம் குற்றாலத் திலே மட்டும் இல்லை. காஸ் மிஸ்வரம் இங்கேயும் இருக்கு தாம், போதாக் குறைக்கு மான் குட்டியும் கையுமாக இருக் கிறே. மானைக் கண்டா, புலிக்கு எப்படித் தெரியுமா ? உன்னைக் கண்ட நான் போல."

சர்ரென வண்டி கிளம்பி விட் டது. சிகப்பு வெளிச்சம் மறை யும் வரை பார்த்து நின்றவள், மெதுவாக நடக்க ஆரம்பித் தாள் நிலாக்காலம். கச்சேரி கேட்க ஆங்காங்கே ஆணும் பெண்ணுமாக வந்து கொண்டி ருந்தார்கள்.

மான் மீது இருக்கும் புள்ளிக் கோலம் போல சாலையில் ஒளி யும் நிழலும் கோலமிட்டுக் கொண்டிருந்தன. யாரோ தெம் மாங்குப் பாடல் ஒன்றைப் பாடிக்கொண்டு போகிறான். அந்தப் பாட்டின் கருத்திலே மனசைப் பறி கொடுத்த செண் பகம் உற்றுக் கேட்டாள்.



மானே மயிலோ
மயக்கும் கிளி
தானோ?
தேனே தினையோ
தெவிட்டா
தேனருவியோ ?

உருகியோடும் வெள்ளியோ டைகள் போல சலசலத்துக் கொண்டு போகும் நீரோடை களுக்கு அப்பால் தலை சாய்ந்து கிடக்கும் கதிர்கள் அனைத்தும் பொன் மயமாகத் தோன்றின. பாடலுக்குள் குழைந்து வந்த கற்பனை அவளைத் தேனருவிக் குள் ஐக்கியமாக்கி விட்டது. கட்டுச்சாத மூட்டையோடு தேனருவிக்கு முத்தையாவு டன் போக வேண்டுமென்ற திட்டம் உடனடியாக நிறை வேறுமா ? மனக் கண்முன். இராக் காலத்து நிலவில் விழு கின்ற அருவியின் கண் கொள்

ளாக் காட்சி அவள் உள்ளத்தே திண் திண் என்று விழுந்து கொண்டிருந்தது. மெல்லிய பூங்காற்று இழைந்து வரவே தான் நடப்பது குமரர் கோயில் பாதை யென்பதனை மறந்து, தேனருவிப் பாதையில் நடப்ப தாக எண்ணினாள்.

பகலில் காணும் குற்றாலம் வேறு, இரவில் காணும் குற்றாலம் வேறு தானே. அதிலும் சாரல் கட்டி, மழையும் பன்னீர் தெளிக்க ஆரம்பித்து விட்டால், தளிர்கள் பசுமை கொப்புளித்து, கணுவுக்குக் கணு பூவும் அரும்பும் உலுக்கிக் கொண்டு வண்டுகள் கீதம் பாட வானுலகம் போல மண் வாசனை வீசும் அந்தப் பகுதியை இரவில் பார்த்தால் இன்ப புரியாகத் தோன்றும். பகலில் கண்ணுக்கு மட்டும் தான் விருந்து இரவிலே கண்ணுக்குப் பாதி விருந்து; காதுக்கும் சில வண்டுகளின் விருந்து; மூக்கிற்கோ எத்தனையோ ஆயிரம் விருந்துகள். விதவிதமான காட்டுப் பூக்களின் கனல் மணக்கும் வாசனைக் கதம்பங்கள். மலையில் மட்டுமா? மலையோடை, வீட்டோரம், சாலை வழியாக எங்கேயும் செடிகள், கொடிகள், அவை தருகின்ற பசுமை கலந்த இன்ப வாசனைகள். கண்ணும், காதும், தெளிந்த கூர்மையான நாசியும் படைத்த மனிதப் பிறவிகள் அனுபவிக்க வேண்டிய இன்பங்கள்; எத்துணை முறை அனுபவித்தாலும் அலுக்காத இன்பங்கள்; அங்கேயே பிறந்து அங்கே வளர்ந்து விட்ட செண்பகம் ஆடி யசைந்து கொண்டு நடந்தாள்.

“மான் குட்டிச் செண்பகம்!” என்ற குரல் கேட்டுத் திரும்பினாள். குரல் கொடுத்தவன் யாரென்று தெரிந்து விட்டது. ராமையா! அவளுக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. ராமையாவின் போக்கு, அதுவும் இரவு நேரத்தில் கச்சேரி கேட்டு விட்டுத் திரும்புகாலில் எப்படி இருக்குமோ? தான் போவது யாருக்கும் தெரியாதென்று அவள் எண்ணிக் கொண்டிருந்த போது, ராமையா வந்திருக்கிறான்.

விருவிருப்பாக அவள் அருகாக வந்தான். உடம்பு நடுங்கிற்று. ராமையாவின் வரவைத் தடுக்க முடியாது. அவன் வருமுன்னதாகவே, கள்ளின் நாற்றம் முன்னதாக வந்து கட்டியம் கூறிற்று. தெய்வமே என்று ஓட ஆரம்பித்தாள்.

‘அட ஏன் ஓடறே?’

‘நான் இங்கே போறதே தப்பு.’

‘செண்பகம். நான் இலஞ்சிக்கு ஒரு காரியமாகப்

போகிறேன். நீ எங்கே போகி றயோ அங்கே கொண்டு வந்து விட்டுப் போகிறேன்.'

'உன் துணையே வேண்டாம்.'

நீதான் 'பிகு' பண்ணிக் கொள்ளுகிருய். உன் மான் குட்டியை விலைக்குக் கொடு. சொன்னல் கேள், நிஜமாக நீ கேட்கும் விலை தருகிறேன்.'

'முடியாது.' என்றவள் ஓட்ட மும் நடையுமாக தன் வீடு நோக்கி போய்க் கொண்டிருந் தாள். எதிரே வந்த ஒரு சிலர், "ஏனம்மா ஓடுகிறே ?" என்ற தற்குப் பதில் சொல்லவில்லை. சற்றுப் பொறுத்து அவர்கள் எதிரே ராமையாவைக் கண்ட தும், செண்பகத்தின் மான் பாய்ச்சலுக்குக் காரணம் புரிந்து கொண்டார்கள்.

"என்ன ராமையா, மான் குட்டி ஓடுதா ?"

"விலைக்குக் கேட்டா கொடுக் கத்தானே செய்யணும் ?"

"என்ன விலை கொடுப்பே. நாங்கள் ஒரு மான்குட்டி தரு கிறோம்."

"அட போய்யா, செண்பகம் மான் குட்டி அழகு உங்கள் வீட்டிலே உண்டா ?" அவன் கேட்ட கேள்விக்கு எல்லோரும் கொல்லெனச் சிரித்தனர். ராமையா, தப்பி ஓடிய செண் பகத்தின் பின் தொடராமல் குமரர் கோவில் ரசிகர்களோடு திரும்பிப் போய்க் கொண்டிருந் தான்.

வீட்டிற்குள் வந்தும் செண்ப கத்தின் மனசிலே ராமையா வின் பேச்சும் உருவமும் நிழலா டிக் கொண்டிருந்தது. உடல் நடுங்கிற்று. முன்பே எச் சரிக்கை செய்திருக்கிருன் முத் தையன். அந்த வார்த்தைகள் நினைவில் எழுந்தன.

"யாரிடம் விளையாட்டுப் பேச்சு வைத்தாலும் அந்த நல்ல பாம்பிடம் மட்டும் வேண்டாம். அவன் பெரிய விஷப் பாம்பு. தொலைவில் இருந்தாலே விஷ மூச்சு."

"ஏன் அத்தான் அப்படிச் சொல்லுறீங்க ?"

"பெண் பிள்ளை, எவ்வளவு சாமர்த்தியம் உள்ளவளாக இருந்தாலும் உடல் வலுவிலே மட்டந்தான். மதிமயங்கிய ஆணுக்கு, நியாய அநியாயம் தெரியாது. ஆயிரம் யானைப் பலம் வரும், ராமையா போன்ற முரடனுக்கு."

"அப்படியா ?"

நாலு மாதத்திற்கு முன்பு. யாரோ ஒரு பெண் தற்கொலை செய்து கொண்டதாக—கிணற் றில் விழுந்து மாண்டுபோனதா கச்—சென்னர்கள். கன்னிப் பெண் மாண்டு போனதற்குக் காரணம் பின்னரே தெரிந்தது. ராமையா சோளக் கொல்லை யில் பம்மி யிருந்து அப்பெண் ணைக் கெடுத்து விட்டானும். அவமானம் தாங்காத பெண் இறந்து விட்டாள். அந்த காட்சியின் நிகழ்ச்சி செண்பகத் தின் மன அரங்கில் நிகழ்ந்தன. அந்த பயமே வீட்டிற்குத் துரத்தி வந்தது.

வந்ததும் வராததுமாக மான் குட்டியைக் கட்டி விட்டு விரிப்பை விரித்தாள்.

"ஏன் செண்பகம், கச்சேரிக் குப் போகவில்லையா ?" என்று தாய் கேட்டபோது, "இல்லை யம்மா, திரும்பி வந்து விட்

டேன்'' என்றுள். இப்போதும் அவள் குரலில் நடுக்கம்.

"எதை யாச்சும் கண்டு பயந்து வந்தியா?"

"இல்லேம்மா."

ராமையாவின் உருவத்தைக் கண்டதால் அவள் மறந்து போனது தன்னை மட்டுமல்ல, தன்னருமை மான் குட்டியையும் தான். என்றோ ஒரு நாள் காட்டில் பிடிபட்டதைக் கொண்டுவந்து எத்தனை அன்போடும் ஆசையோடும் முத்தையன் கொடுத்தான். கண்ணுக்குக் கண்ணுக அதை வளர்த்தாளே. அதற்கு விதி இப்படியா வர வேண்டும்?

நேரம் ஓடிக் கொண்டிருந்தது. நிலா அவ்வப்போது பூமாதேவிக்கு ஒளிப் பவுடர் ஒற்றிக் கொண்டிருந்தது.

உச்சியில் ஓங்கி அடித்தாற் போல மான் குட்டியின் கதறல் கேட்டது. சாவின் பயங்கர ஒலி எத்தனை பீதி நிறைந்தது?

பதறி விழித்தாள் செண்பகம்.

ஆங்காங்கே, 'புலி, புலி' என்ற ஆரவாரம். எங்கும் கூக்குரல். 'பிடி', 'பிடி' என்ற கோஷங்கள். மனிதர்கள் விழித்துக் கொண்டனென்ன?

கைவிளக்கோடு, திண்ணைக்கு வந்த செண்பகம், மான் குட்டியின் ரத்தச் சொட்டுகள் இங்கொன்றும் அங்கொன்றுமாகக் கிடப்பதைக் கண்டாள்,

மறு கணம்... "ஐயோ அம்மா ...போச்சே...மான் குட்டி" என்று மயங்கி அம்மயிலனை யாள் விழுந்தாள். அவள் மானை மறந்தாள். நினைவே கலங்கியது. கையிலிருந்து விளக்கும் விழுந்தது. பிரக்ஞையற்ற அவள் அருகாக விழுந்தது விளக்கு; அந்தச் சுடரொளி மெதுவாகச் சேலையின் முந்தாணையோடு ஐக்கியமாகத் தொடங்கியது.

இது காறும், அடங்கிக் கிடந்த காற்றும் மெதுவாக நகர்ந்து வர ஆரம்பித்தது......

அத்தியாயம் 6

அன்னையின் அன்பு

"ஐயோ ஸ்ரீவில்லிபுத்தூர் தாண்டிவிட்டதே", என்று கோபாலவாரியார் சொன்ன போதுதான் நானும் அவரும் இருப்பது ரெயில் வண்டி என்ற நினைப்பே வந்தது.

கதை கேட்கும் அவரது கண் என்மீது குத்திட்டு நின்ருலும் வெளியே சங்கரன் கோவில் கோபுரத்தைக் கவனித்துத் தாடையில் போட்டுக் கொண்டார். சங்கரன் கோவிலைத்

தாண்டி ஸ்ரீவில்லிபுத்தூரில் கோபுர தரிசனம் செய்ய முடியாமற் போகவே கதையை நிறுத்த வேண்டுமென எண்ணினேன்.

''ஆண்டாள் போல செண்பகம் சிரஞ்சீவியாக இருப்பாள்,'' என்ற கருத்தை மலையாளத்தில் சொல்லி நிறுத்தினர்.

நான், மெதுவாக என் நினைவு வலையைச் சுருக்கி, ரெயில் வண்டிக்குள் மனதை ஐக்கியப் படுத்திய சமயம்,

''மேலே என்ன, சொல்லுங்கள். மதுரையில் நான் இறங்கியாகவேண்டும். செண்பகத்தின் புடவையில் தீயின் கொழுந்து பற்றுகிறதே''

''பயப்படாதீர்கள். குறையும் சொல்லுகிறேன்.''

மீண்டும் என் மனம் குற்றாலத்துப் பிராந்தியத்துள் வட்டஞ் சுற்றியது. சுருங்கிய மன வலையை மீண்டும் எட்டி வீசினேன்.

∴ ∴ ∴

பாண்டித்துரையும், முத்தையனும் திருநெல்வேலிக்குப் போய்விட்டு, தென்காசிச் சாலையில் வந்து கொண்டிருந்தார்கள். கல்லாம் பறம்பின் காட்சி மாறி பசுமையின் விளிம்பு தெரிய ஆரம்பித்தது என்றால், ஆலங்குளம் வந்துவிட்டது என்பது பொருள். இங்கு காபி குடிக்க இறங்கியபோது அவர்கள் காதிலே பேச்சுக்கள்—வதந்திகள் - அளப்புகள் பல விழுந்தன.

''புலி யொன்று மான் குட்டியைக் கொண்டு போய் விட்டதாம்! ''

பஸ் - பிரயாணிகள், குற்றாலத்திலிருந்து வெளியூர் போகிறவர்களும் இதையே சொன்னார்கள். மான் குட்டி ஒன்றை வெகு பிரியமாக வளர்த்தாளாம் - அவள் பெயர் சகுந்தலையாம். அந்தப் பெண்ணுக்கும் சிறிது காயமாம். பெண் பிழைத்தாள். மான் குட்டி போச்சு... இது போன்ற சேதிகள் வந்ததை இருவரும் கேட்டபோது ஒருவாறு புரிந்து கொண்டார்கள்.

''முத்தையா, நீ பின் சீட்டில் போய் உட்கார்.''

''ஏன் ஜமீந்தாரய்யா ?''

''உன் முகமே பீதியாக இருக்கிறது.''

''எனக்கு எவ்விதமான கவலையும் இல்லை.''

''ஊருக்குப் போய் நேரில் விஷயத்தை ஆராய்ந்தால்தான் நிம்மதி வரும். சோகம், துக்கம், கவலை உள்ளவர்கள் கார் ஓட்டக் கூடாது.''

பாண்டித்துரை காரை ஓட்டினர். முத்தையாவின் உடல் காருக்குள்ளும் உள்ளம் காஸ்மிஸ்வரத்து செண்பகத்தின்

பிச்சைக்காரன்: சாமி! சாப்பிட்டு ஒரு வார மாச்சுதுங்க! ஏதுனச்சும் தர்மம் கொடுங்க!
மற்றவர் :......''??

வீட்டிற்குள்ளும் போய்விட்டது. குற்ருலத்துக்கு முகப்பிலேயே சிரங்குப்பாறையில் சிறு கூட்டம் கூடியிருந்தது. காலைப் பொழுது. அந்தக் கூட்டத்தில் சிறியவர்கள் யாரும் இல்லை. வயது வந்த இளங்காளைகளும் பெரியவர்களும் இருந்தார்கள். ஆல மரத்தடியிலே கூட்டம் நடக்கிறது.

புலியைத் தொலைக்கும் வழி வகைக்கு யோசனைகள்—யுக்திகள் வகுத்துக் கொண்டிருந்தார்கள்.

ஜமீன்தார் கார் வரவும், "ராஜா வருகிருங்க" என்ற மரியாதைக் குரல்கள் சொல்லின. ராஜா என்ற பாண்டித்துரைத் தம்பி காரை விட்டு இறங்கினர்.

"என்ன கூட்டம்?"

புலியின் அட்டகாசம் பற்றிச் சொல்லப்பட்டது. அவர்கள் பயந்தது போல ஆபத்தின் எல்லை இல்லை.

"செண்பகத்திற்கு ஆபத்து இல்லையே?"

"ஆபத்து இல்லை", என்று கூட்டத்தில் ஒரு குரல் சொல்லிற்று.

"ஆனல் இன்னும் பிரக்ஞை தெளியவில்லை."

"பிரக்ஞை ஏன் தெளியவில்லை?"

"அவள் தன்னுடைய மான் குட்டியைப் புலி கொண்டு போய்விட்டதைக் கண்டதும் மயங்கி விழுந்தாள். கைவிளக்கின் தீ புடவையில் பட்டது. நல்ல வேளையாக ஒரு குடம் தண்ணீரைக் கொட்டி விட்டார்கள். காயமின்றிப் பிழைத்தாள்."



'பெண்ணுக்கு பயந்த ஓவியர்!' ஓவியம் திட்டுகிருர்.

"பிழைத்துவிட்டாளா? ஐயா, நான் இப்படியே போகிறேன்," என்ருன் முத்தையன்.

"ஆபத்து ஒன்றும் இல்லை. என்னை வீட்டில் விட்டுவிட்டு நீ காரில் போகலாம். நாம் ஊருக்கு இரவில் பந்தோபஸ்து செய்ய வேண்டும். அங்கங்கே நெருப்பு வளர்த்து மாடு கன்றுகள் நிற்குமிடத்தைப் பாதுகாத்தால் போதும்."

"போதாது", என்ற குறும்புக் குரல் வந்தது. சொன்னவன் ராமையா.

"பெரிய ராஜா இருந்தால் வேட்டைக்குப் போவோம்," என்று சிரித்தான். சின்ன ராசா கையாலாகாதவர் என்று சொல்லவா வேண்டும்?

"முத்தையனும்கூட இருக்கிருன். நாமும் ஒன்று சேரலாம்," என்று மேலும் சொன்னன் ராமையா.

"நான் புலிவேட்டைக்கு வரவில்லை. எனக்கு அவசியமும் இல்லை. அந்தக் காலம் வேறு. இப்போதுள்ள காலம் வேறு. முத்தையனும் வேட்டைக்கு வரப்போவதில்லை. நூறு இருநூறு பேர் காட்டுக்குள் போய் வேட்டையாடலாம். சம்மதம் என்ருல் தலைக்கட்டுக்கு உட்பட்டு நானும் வருகிறேன்."

பாண்டித்துரை இவ்வாறு சொல்லிவிட்டு காரில் ஏறிக் கொண்டார்.

அந்தச் சமயம் கூட்டத்தில் ஒருவர், "வீட்டுக்கு ஒருவராகப் புறப்படலாமா?", என்று கேட்டார்.

"எல்லோருக்கும் சம்மதம் என்ருல் எனக்கும் சம்மதம்."

"சரி எங்கள் முடிவைச்சொல்கிருேம்", என்றனர்.

முத்தையன் வெளியூர் சென்றவன் வந்துவிட்டான்; கூட்டத்தில் நிற்கிருன் என்ற தகவல் கிடைத்ததும் அவன் தாய் அங்கு வந்துகொண்டிருந்தாள். கூட்டத்தின் ஒரு பகுதியில் நின்ற மகன் கையை வந்து பிடித்தாள்.

"முத்தையன், வீட்டிற்கு வர இருந்தான்," என்ருர் பாண்டித்துரை தம்பி.

"நானே அழைத்துப போகிறேன்," என்றவள் முத்தையனேடு நடக்க ஆரம்பித்தாள். கார் முந்திக்கொண்டது. தாயும் மகனும் மௌனமாகவே போய்க் கொண்டிருந்தார்கள்.

தண்ணீர் எடுத்துப்போன பெண் ஒருத்தி, "ஏம், முத்தையா அம்மா, உங்களுக்குத் தெரியுமா? செண்பகம் எப்படி இருக்குதாம்?", என்ருள்.

"என்னமோ எனக்குத் தெரியாது."

"நீங்கள் போய்ப் பார்க்கவில்லையா?"

"ஊஹும்"

தாய், செண்பகத்தின் வீட்டிற்குப் போக மாட்டாள் என்பது தெரியும். அதனல் பார்த்திருக்க முடியாது.

மேலும் நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அப்போது எதிர்க் கடையில் சுருட்டுப் பற்ற வைக்கப் போன பெரியவர், "அடடே, முத்தையா, வந்துவிட்டாயா? செண்பகம் மூர்ச்சை தெளியவில்லையாம். போய்ப் பார்த்தியா?", என்று ஆவலைத் தூண்டிவிட்டார்.

செண்பகம் ஆபத்தில் இருக்கும்போது, தாயின் பிடிவாதம் மனதில் முள்ளாகக் குத்திற்று. போதாக் குறைக்கு தன்னை நடுவழியிலே கண்டு கைப்பிடியாகக் கூட்டியும் வருகிருள். சொல்லவும் வெட்கம், பயமும் கூட.

"ஏம்மா, செண்பகத்திற்கு..?"

"வீட்டுக்கு வா......எல்லாம் பேசலாம். இது தெரு. தெருவழியாகப் பேச வேண்டாம்." பல்லைக்கடித்துக் கொண்டு விசுவாசமுள்ள நாயைப் போலத் தாயின் பின்னே போனுன்.

அப்பப்பா, வீடுதான் எவ்வளவு தொலைவில் இருப்பது போலத் தோன்றுகிறது. வேதனை நிறைந்த உள்ளம் விபரம் அறியத் துடிக்கும்போது, ஆபத்தில் சிக்கிய காதலிக்கு ஆறுதல் விழையும் போது, அம்மா குறுக்கிட்டாளே; பல்லைக் கடித்துக் கொண்டு நடந்தான். சொல்லாமலே ஓடி விடலாமா என்று எண்ணுவான். அம்மாவின் காலிலே சக்தியே இல்லையா? ஏன் மெதுவாக நடக்கிருள்?

ஒரு மட்டும் வீட்டின் திண்ணையில் வந்தமர்ந்ததும் அடக்கி வைத்த பொறுமையைக் கொட்டிவிட்டான்.

"அம்மா, நேற்றிரவு நாங்கள்

திருநெல்வேலிக்கு முக்கிய அலுவலாகப் போய்விட்டோம். திரும்பி வரும்போதே ஆலங்குளத்தில் சேதி கேட்டோம்.''

''போகட்டும். மான் குட்டியை நீ என்றைக்குக் கொண்டு வந்தாயோ அன்று முதல் எனக்குத் திக்திக்கென்றது. அது போக வேண்டிய இடத்திற்குப் போய் சேர்ந்தது.''

''ஐயோ அம்மா, அதனிடம் செண்பகத்திற்குக் கொள்ளை ஆசை...''

''நட்ட நடுநிசியிலும் மான் குட்டியைப் பிடித்து வீதி வலம் வரச் சொல்லுகிறதா? புலி நடமாட்டம் இருக்கும் போது, அதைத் திண்ணையில் கட்டலாமா? மான்குட்டி வாசத்திற்குப் புலி அடித்துப் போய் விட்டது.''

'' அப்படியா அம்மா? அவள் மயக்கம் போட்டு...''

'' விளக்கு விழுந்து நெருப்புப் பிடிக்கத் தெரிந்தது. நல்ல வேளை எரிந்து கருகாமல் பிழைத்தாள்.''

'' பிழைத்துக் கொண்டாளா?''

'' உன்னை அந்தக் கூட்டத்தில் தேடிப் பிடிக்க நான் எதற்காக வந்தேன் தெரியுமா?''

'' முதலில் செண்பகத்தைப் பார்க்கப் போவேன்.''

தாய், அன்பையும் பாசத்தையும் ஊட்டி வளர்த்தவள் பத்திரகாளியாக வீரப்பார்வை பார்த்தாள். முத்தையன் கலங்காத நெஞ்சம் கலங்கிற்று.

''நான் தான் உன் பின்னால் வந்துவிட்டேனே அம்மா.''

''சொல்வதைக் கருத்தாகக் கேள் முத்தையா. நேற்றும் அதன் முன்பும் ஒரு சில கன்று காலிகளைப் புலி கொண்டு போகவே, ஊரிலே வேட்டைக்கு ஆள் சேர்க்கும் பேச்சுக் கிளம்பிற்று. சாலையில் ஊர்க் கூட்டமாம். ராமையா வந்து சொன்னான்.''

'' அந்த அயோக்கியன் எதற்காக நம் வீட்டிற்கு வந்தான்'',

'' அவன் அயோக்கியனோ. நல்லவனோ? ஊரில் என்ன தீர்மானம் ஆனாலும் சரி, நீ வேட்டைக்கு போகப் போவதில்லை.'' கண்கள் இரண்டையும் மகன் முகத்தில் பதித்தாள்.

''ஐயோ அம்மா, நான் போவதில்லை. போவதில்லை. சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன்.''

'' நீ சத்தியம் செய்து கொடுத்தது இப்போது நினைவில் இருக்கிறதா?''

'' அம்மா, நான் வாக்கு மாறுவேனா? மாட்டேன். ராஜா அந்தக் கூட்டத்தில் சொன்னதைக் கேட்டீர்களா?''

'' என்ன சொன்னார்கள்?''

'' நூறு இருநூறு பேர்கள் வந்தால், வேட்டைக்குப் போகலாம். தனியாகப் போக முடியாது என்றார்கள்''.

'' அப்படி இரு நூறு பேர் வந்தாலும், நீ போகக்கூடாது. உனக்குக் காட்டில் வேலை இல்லை.'' கண்டிப்பும் கருரும் இணைத்து சீறினாள் பார்வதி.

'' ராஜா தன்னோடு வரும்படி என்னை வற்புறுத்தினால்?''

'' அப்போதும் வேண்டாமென்று சொல்லி நேராக இங்கே வந்து நில். உனக்கு மோட்டார் வேலை பெரிதில்லை.''

முத்தையன் மிரள மிரள,

விழிக்கவே பலத்த குரலில், "என்னடா விழிக்கிருய்? என்னை விட- பெற்றவளை விட- உங்கள் ஜமீன்தார் பெரியவரா? அடபாவி, உங்கப்பா என்னை இந்தக் கோலத்தில் தவிக்க விட்டு புலி வாயில் கடிபட்டு, இழுபட்டு, மலையுங்காடுந் தாண்டி, அரையுடலும் குறையுடலும் கண்டமாதிரி உன் வாழ்வும் போகணுமா?", என்று தன் துக்கம் தாங்காமல் தன் தலையில் படபடவென ஓங்கி அறைந்து கொண்டாள்.

ஒவ்வொரு அறையும் அவனுடைய நெஞ்சிலே சம்மட்டி கொண்டு ஓங்கி அறைவதாக விழுந்தது. "அம்மா, அம்மா நான் சத்தியம் செய்து கொடுத்தேன். என்னைப் படைத்த பிரம்மாவே வந்தாலும் புலி வேட்டைக்குப் போகப் போவதில்லை. இது சத்தியம்",என்று அழமாட்டாத குறையாக இரைந்தவன் தாயின் அன்புக் கரங்களைப் பற்றிக் கொண்டான்.

"என் தலையில் அடித்துச் சொல்."

அப்படியே தாயின் தலையில் கைவைத்து," அம்மா, நான் உன் பிள்ளை. யார் புலிவேட்டைக்குப் போனுலும் நான் போகமாட்டேன். சத்தியம்", என்றுஉணர்ச்சி வசப்பட்டுச் சொன்ன பிள்ளையின் கையை எடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொண்டாள். அவள் அடைந்த ஆனந்தம் கண்ணில் மிதந்தது. அவள் கொண்ட உற்சாகத்தில் ஓங்கி மகன் முதுகில் தட்டினுள். அன்பும் ஆசையும் கைவழியும் கண் வழியும் முத்தையன் மீது இறங்கின.

"அம்மா, என்னை நீ நம்பினையா?"

"கூட்டத்திலே நீ அசட்டுப் பிசட்டென்று வேட்டைக்கு வருவதாக வாக்கு கொடுத்து விடக்கூடாதே யென்று குடல் தெறிக்க ஓடி வந்தேன்."

"அட அம்மாவே...", என்று வாய்விட்டுச் சிரித்தான். அதே சமயம் அவன் வாயிலே கட்டி வெண்ணெய் ஒரு கவளம் விழுந்தது.

"என்னம்மா இது?"

"என் பிள்ளைக்குப் பரிசு, என் பேச்சைக் கேட்டதற்குப் பரிசு."

"உங்கள் உள்ளம், வெண்ணெய் மாதிரி அம்மா."

"உன் உள்ளம் பளிங்கு போல."

வீட்டிற்குள் காய்ந்து கிடந்த தோசைக் கல்லில் சுரீர் என்று கட்டி வெண்ணெய் உருகும் வாதமும் தோசை மாவு விடும் ஓசையும் கேட்டது. பசிக்கவா செய்கிறது, முத்தையனுக்கு?

தாயின் பாசத்திற்கும் சத்தியத்திற்கும் கட்டுப்பட்டுக் குளித்துவிட்டுச் சாப்பிட உட்காந்தான். தோசையின் முறுகல் மணம் கம்மென பரவ ஆரம்பித்தது. தோசையின் விள்ளலை வாயில் போடப் போன சமயம் சிரிப்பு கேட்டது. வந்தது ராமையா.

"என்ன பெரியம்மா."

"வாடா, ராமையா...சாப்பிட வாயேன்."

"இப்பத்தான் செண்பகம் வீட்டிலே காபி தந்தாள்."

முத்தையன் குடலே யாரோ முறுக்கிப் பிழிந்து வடிகட்டுவது போல உணர்ந்தான்.

"எப்படி இருக்கு அவளுக்கு."

"சிரிச்சுப் பேசிக் கொண்டிருக்குது. தம்பி முத்தையா இப்போதான் சாப்பிடுகிறுரா?"

இதற்கும் மேலாக சாப்பிடச் சொல்ல வில்லே யென்ருல் பண்பிற்கு எதிராகுமென்று, "சாப்பிட வாயேன், ராமையா", என்ருன் முத்தையன்.

"நீ சொல்லணுமா? தோசையின் மணமும் காபி ருசியும் வேறே எங்கே கிடைக்கும்? செண்பகம் வீட்டிலேயும் காபி கழிநீர் போல தோசை எருப் போல இருந்ததே", என்று சிரித்தான்; வாய் கிழியச் சிரித்தான். அவன் சிரிப்பின் வஞ்சனே அறியாத பெரியம்மா மகிழ்ந்து போய்விட்டாள்.

சைகிள் மணி கேட்டது. யாரோ ஒரு வேலேயாள், "டிரைவர் ஐயாவைக் கையோட கூட்டி வரச் சொன்னுங்க ராஜா... செங்கோட்டைக்குப் போக வேண்டுமாம்", என்ருன்.

"வருகிறேன். நான் அவசரமாகப் போகவேண்டும். அம்மா...காபி கொண்டுவா."

"அரண்மனேக்குத்தானே?"

"ஆமாம். அம்மா", என்றவன் சைகிளே வாங்கிக் கொண்டு' நீ நடந்து வா. நான் சைகிளில் போகிறேன்", என்ருன். பாண்டித்துரையின் வேலேயாளும் சைகிளேக் கொடுத்தான். சைகிள் பறந்தது. அரண்மனேக்கா? இல்லே!

செண்பகத்தின் வீடு நோக்கி முத்தையன் போய்க் கொண்டிருந்தபோது, "அத்தை? எங்கே உங்கள் பிள்ளேயை? அத்தான் எங்கே?", என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தாள் செண்பகம்.

"அரண்மனே உத்யோகம், செண்பகம். இப்போதுதான் திருநெல்வேலியிலிருந்து தம்பி முத்தையன் வந்தார். குளித்தார். அரை வயிறு சாப்பிட்டார். செங்கோட்டை போய்விட்டார்" என்று ராமையா பதில் சொன்னுன், தோசை யுத்தத்தோடு! அவனேயா கேட்டாள்?

ராமையாவை எரித்து விடுபவள் போல பார்த்து, "அப்படியா அத்தை?", என்று கேட்டதற்கு "ஆமாம்", என்று பதில் பார்வதி யிடமிருந்து வந்தது.

"பெரியம்மா, செண்பகத்தைச் சாப்பிடச் சொல்லுங்களேன்."

"சாப்பிடேன், செண்பகம்".

"வேண்டாம்......நான் வருகிறேன்...", என்று பின் வாசல் ஒத்தடித் தடம் வழியாக செண்பகம் ஓட்டமும் நடையுமாகப் போய்க்கொண்டிருந்தாள்.

வெறித்த இளமானேப் போல கண் இமைக்காது பார்த்தபடியே நின்ருள். சொல்லுக் கடங்காத சோகத்தி அவள் மனதை வெதுப்பிக் கொண்டிருந்தது. தனது மான் குட்டி பறிபோனது, தீப்பிடித்துத் தனக்கு நேரவிருந்த இடர், இவை யொன்றும் முத்தையனுக்கு முக்கிய மில்லேயா? எண்ண எண்ண அவள் இதயமே வெடிக்கும் போலிருந்தது.

அந்தச் சமயம் 'செண்பகம்' என்ற குரல் கேட்டது!

"யார்?" என்ற திகைப்பில் பார்த்தாள். (தொடரும்)

ஸ்ரீ வெங்டேசா மில்ஸ் லிமிடெட்

வெங்கடேசா மில்ஸ் போஸ்ட்

உடுமலைப்பேட்டை.

தந்தி : "VENKATESA" போன் : 66

எல்லா வகையிலும் முன்னணியில் நிற்கும்
ஒரு தென்னிந்திய பஞ்சாலை.

நூல் :— 20, 40, 60, 80 பருத்தி நூல்
2/40 செயற்கையிழை நூல்.

துணி:— '801' & '1001' மல்.
'SV 35' & 'SV 555' லாங்க்ளாத்

நிர்வாகப் பொறுப்பினர் :—

G. V. கோவிந்தசாமி நாயுடு & கம்பெனி

ஆலை நிர்வாகி:—

R. முத்துசாமி, B.A., B.Sc.(Tech) A.T.I.

30

ஆண்டுகளாக நாடெங்கும்

உழவர்கள் நம்பி வாங்குவது

PSG



பம்பிங் செட்

- குறைந்த செலவு
- சிறந்த உழைப்பு
- நீடித்த சேவை
- ஓசையில்லாத ஓட்டம்

விவரங்களுக்கு எழுதுங்கள் :



பி. எஸ். ஜி.

இண்டஸ்டிரியல்ஸ் இன்ஸ்டிடியூட்

பீளமேடு போஸ்டு, கோயமுத்தூர், தென் இந்தியா.

பொன்னையா சுவாமி துணை

TRADE MARK
Regd. No. 161859

மதுரை நாடார் கடை

M. N. P.

லிங்க மார்க்

சுருட்டுகள்

M. N. P. லிங்க மார்க் பட்டணம் பொடி, துண்டு, நைஸ், சிவபுரிபாளை தயாரிப்புகளை உபயோகித்து இன்புறுங்கள்.

M.N.P.N. & M.N.P.T.
மதுரை.

phone: 713 Tel. ANANDJOTHI

சிற்றுண்டிகளுக்குச்சிறந்த இடம்.

ஜோதி
ஆனந்த பவான்

காபி ஓட்டல் & போர்டிங் ஹவுஸ்

கீழமாசி வீதி, மதுரை.

N.B.—ஜோதி ஆனந்தா காபி ஒர்க்ஸ் காபி பவுடரையே உபயோகியுங்கள்.

தந்தி: 'குமரன்' டெலிபோன்: { மில் 98 / ஆபீஸ் 533 }

குமரன் மில்ஸ் லிமிடெட்,
பூளைமேடு P. O; கோயமுத்தூர்.

நிறுவப்பட்டுள்ள கதிர்கள்	...	19,044
மேற்கொள்ளப்பட்டுள்ள விஸ்தரிப்பு	...	5,900

நாங்கள் உயர்தரமான 20s 36s 40s 60s 80s நிர். பருத்தி நூலும், 20s நிர். ஸ்டேபிள் பைபர் நூலும் தயார் செய்கிறோம்.

எங்கள் நூலை
சென்னை, ஆந்திர மாகாணங்களில்
மிகுதியாக உபயோகப்படுத்துகிறார்கள்.

Sri. G. V. RAMASWAMY NAIDU &
Sri. G. V. MUTHUSWAMY NAIDU
Committee of Directors.

வாராயோ செந்நிலாவே

'ராஜன்'

(ஒரு பௌர்ணமி இரவு. அழகிய நந்தவனம். மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன.)

குமாரி : பௌர்ணமி இரவுகள் எத்தனே ! சிந்தனைக் குவியல்கள் எத்தனே ! தென்றல் சுமந்து வரும் நறுமணக் கூடைகள் தான் எத்தனே !

[குமார் வருகிருன்]

ஆடம்பர வார்த்தைதான் எத்தனே ! எல்லாம் வீண் ! வீண் !

குமார் : ஆகாயக் கோட்டைகள் எத்தனே ! நடத்த எண்ணிய குடும்ப வாழ்க்கைகள் தான் எத்தனே! தவறி விழுந்து அடிபட்ட காயங்கள்தான் எத்தனே ! எல்லாம் வீண் ! வீண் !

குமாரி : நீங்கள் யார் ?

குமார் : நானு ? பௌர்ணமி இரவுகளேயும் சிந்தனேக் குவியல்களேயும், நறுமணக் கூடைகளே யும் எண்ணிப் பார்க்காத கற்பனே யற்றவன் !

குமாரி : கற்பனே யில்லாதவர்கள் காரிய வாதிகளாக யிருப்பார்களே !

குமார் : காரியத்தில் இறங்கத் தான் வந்தேன்.

குமாரி : இந்த நந்தவனத்தில் அப்படிக் காரியம் என்ற பொங்கு மாங்கடல் இல்லேயே.

குமார் : குமாரி ! சுகுமாரி !

குமாரி : என் பெயர் உங்களுக்கு எப்படி தெரிந்தது ?

குமார் : இன்று நேற்று தெரியும் ? முந்நூறு ஆண்டுகளாகத் தெரியுமே ! முன்னம் உன்னே இமய மலேச் சாரலிலே......

குமாரி : ஐயையோ ! பைத்தியத்திடம் அகப்பட்டுக் கொண்டேனே...

[ஓடி விடுகிருள்]

குமார் : ஆஹா ! அவள் ஓட்டத்தில் தான் என்ன அசைவு ! என்ன இசைவு !

[மற்ருெரு பௌர்ணமி தினம்.]

குமாரி : நிலாக் கதிர்களே விழுங்கும் வித்தை கை வராதோ ? நிலாக் கற்றையைச் சிக்கெடுத்து நூற்று ஆடை நெய்ய அருள் கிட்டாதோ ? நிலா வெள்ளப் பரப்பைப் பாளம் பாளமாக வெட்டிக் குடிசை அமைக்கத் திறன் வராதோ ?

[குமார் வருகிருன்.]

நிலா வீசும் வெள்ளி முலாம் மேனி யெல்லாம் பரவாதோ?

குமார் : நிலாவையே சுரண்டியெடுத்து ஐஸ்கிரீம் செய்யலாமோ ?

குமாரி : ஐயோ! பைத்தியம் வந்து விட்டதே ! நிலா ராஜ்யத்தை சுரண்டுவதற்குத்தான் உங்களேப் போல மனிதர்கள் கிளம்பி விட்டார்களாமே !

குமார் : அதனுல்தான் சித்திரமே அதை ஐஸ்கிரீம் செய்யலா மென்று பார்க்கிறேன்.

குமாரி : குமார்! சுகுமார்!

குமார் : என் பெயர் உனக்கு எப்படித் தெரிந்தது ?

குமாரி : இன்று நேற்ரு தெரியும்! முந்நூறு ஆண்டுகளாகத் தெரியுமே! முன்னம் உங்களை கன்னியாகுமரித் தேவி கோவிலின் கிழக்கு வாசலிலே எதிர்பார்த்து எதிர்பார்த்து............ஓடிவிடாதிர்கள்.

குமார் : உன்னைப் போல் ஓட நான் என்ன பெண்ணு ?

குமாரி : பெண்களுக்கு ஓடத் தெரிவதால்தான் இன்றுவரையும் பெண்கள் பெண்களாக இருக்கிருர்கள். இல்லை யேல் ஆண்கள் அவர்களை எப்போதோ இட்லிக்குச் சட்னியாக்கி யிருப்பார்களே!

குமார் : வெகு அழகாக, நிலாவின் சிரிப்பைப்போல பேசுகிருயே...

குமாரி : நிலா சிரிக்குமா ? பைத்தியக்காரப் பேச்சு...

குமார் : நிலா பக்கத்திலிருக்கும் போது ஆண்களுக்குப் பைத்தியம் பிடிக்காமலிருந்தால்...

குமாரி : பக்கத்திலிருக்கிறதா ? வெகு தூரத்தில் இருக்கிறதே! அதோ... அதோ...

குமார் : இல்லை. வெகு சமீபத்தில் இருக்கிறது. இதோ...... இதோ...

[அவளைச் சுட்டிக் காட்டுகிருன்.]

குமாரி : அம்மாடி, பைத்தியம்!

[ஓடி விடுகிருள்.]

குமார் : ஆஹா! அந்த ஓட்டத்தில்தான் என்ன நெளிவு! என்ன சுழிவு!

[பிறிதொரு பௌர்ணமி நாள்.]

குமாரி. வாராயோ, வெண்ணிலாவே!

குமார் : வாராயோ, செந்நிலாவே!

குமாரி : என்னை ஏளனம் செய்யாவிட்டால் உங்களுக்குக் கண் உறங்காதோ ?

குமார் : இத்தனை பௌர்ணமி காலங்களிலும் என் அவயவம் எதுதான் தூங்கிற்று ?

குமாரி : பைத்தியம் பிடித்தவர்களுக்குத்தான் தூக்கம் வராதென்பார்கள்.

குமார் : உண்மை, உண்மை ; வாராயோ, செந்நிலாவே!

குமாரி : மறுபடியும் ஆரம்பித்துவிட்டீர்களே...

குமார் : உன்னைச் சொல்லவில்லை. அதோ, அதோ! வானத்திலே, வெண்ணிலாவின் அருகிலே...

குமாரி : ஆமாம்! அதென்ன ? ஐயோ, வெண்ணிலாவை முட்டிவிடப் போகிறது!

குமார் : முட்டவே முட்டாது. இது ஐநூறு மைல் உயரத்தில் தான் பறக்கிறது.

குமாரி: அடடே! அந்தச் செயற்கைச் சந்திரனு ?

குமார் : பிப்...பிப்....பிப்....பிப்... பிப்...பிப்...

குமாரி : [சிரிக்கிருள்]இது என்ன பாஷை ?

புதுமையும், பழமையும்!

—o—

மருமகள் புதுமை விரும்பி ; அருமையாகத் தனது சின்ன மகளை ‘லெய்கா... லெய்கா’ என்று கூப்பிடுகிருள்.

வயதான மாமியார் சொல்கிருள்: ‘அப்படிக் கூப்பிடாதே... குழந்தை அற்பாயுசாகப் போய்விடும்!

குமார் : செயற்கைச் சந்திரன் தன் ரோகிணியை அழைக்கிருன்.

குமாரி : அதற்கும் ரோகிணி உண்டா ?

குமார் : சந்திரன் என்ருல் ரோகிணி இல்லாமல் இருக்குமா ? எனக்கு நீ யிருப்பதுபோல......

குமாரி : [கோபத்தோடு] நந்தவனப் பேச்சு நாகரிகமாக யிருக்கட்டும், ஐயா !

குமார் : என் பேச்சில் நாகரிகக் குறைவு இருக்கிறதா, அம்மணி! பார்த்துவிட்டுப்போய்விடுகிருேம்.

நந்தவன காவற்காரன் : நேரமாச்சுது ! இப்படி அண்ணுந்து பாத்துக்கிட்டே போங்க.

குமார் : இந்த வெண்ணிலாவையல்ல, அப்பா ! செந்நிலாவை ! இன்னும் தொண்ணூற்றைந்து நிமிஷத்தில் வந்துவிடும். பார்த்துவிட்டுப் போகிருேம்.

நந்தவன காவற்காரன் : [கோபத்தோடு] இங்கே இன்னும் ஒரு நிமிஷமும் இருக்கக் கூடாதய்யா..

[நந்தவன காவற்காரன் வருகிருன்.]

நந்தவன காவற்காரன் : என்ன நீங்க ரெண்டு பேரு மட்டும் பேசிக்கிட்டு இருக்கீங்க. மணி பத்தாச்சு. வீட்டுக்கு போங்க... நந்தவனத்தை அடைக்கப் போறேன்...

குமார் : கொஞ்சம் இரு அப்பா ! சுவாரஸ்யமான கட்டத்தில் நுழைந்து விட்டாயே. இன்னும் ஒரு முறை அந்தச் சந்திரனைப் எல்லாம் வெளியே போய் பாத்துக்குங்க...என்ன, அம்மா நீங்களும் இப்படி நின்னு முடியுமா ? ஐயாவை அழைச்சிட்டுப் போங்க...

குமார் : சொல்லப்பா.......நீதான் சொல்லணும், என்னே இங்கே வரவழைத்ததும் அந்த அம்மா தான்.

குமாரி : இங்கே வந்த ஐயாவுக்கு

போகவும் வழிதெரியும்.நான் ஒன்றும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை.

நந்தவன காவற்காரன்: இது ஏதடா வம்பாயிருக்கு. நீங்க ரெண்டு பேரும் இப்போ வெளியே போறீங்களா, இல்லையா? என் நாயை அவுத்து விடட்டுமா?

குமார்: அவிழ்த்து விடேன். உன் நாயைப் போல எத்தனையோ நாய்களைப் பார்த்திருக்கிறேன். அசல் அல்சேஷியனைக் கூடப் பார்த்திருக்கிறேன். ஏன் உன்னையே நேரில் பார்த்துக்கொண்டு தானே நிற்கிறேன்!

நந்தவன காவற்காரன்: அப்படியா சங்கதி! கொஞ்சம் இருங்க, அப்போ தெரியும் சேதி.

[காவற்காரன் போய்விடுகிறான்.]

குமாரி: எனக்கு பயமா யிருக்கிறது. வாருங்கள், போய்விடுவோம், குமார். [கூறிவிட்டு உதட்டைக் கடித்துக் கொள்கிறாள்.]

குமார்: ஆஹா, என் ஜன்மம் சாபல்யமடைந்தது. எங்கே போகலாம், குமாரி?

குமாரி: [தடுமாற்றத்துடன்] எல்லாம் இந்தச் செந்நிலா செய்த வேலை.

குமார்: உன்னைப் பயித்தியமாக அடித்து விட்டதா? வாழ்க செந்நிலா!

குமாரி: இல்லை, இல்லை...நீங்கள் போய்விடுங்கள்; நானும் போகிறேன்.

குமார்: நீ போய்விட்ட பிறகு எனக்கு இங்கே என்ன வேலை? செந்நிலா இல்லாச் செவ்வானம் போல என் மனம் இருண்டு விடுமே!

[நாய் குரைக்கும் சப்தம்]

குமாரி: ஐயையோ! நாய் வருகிறது போலிருக்கிறதே!

குமார்: வந்தால் நானிருக்கிறேன். பயப்படாதே!

[நாய் நெருங்கிவர குமாரி குமாரை நெருங்கிக் கொள்கிறாள். குமாரியின் கையைப் பிடித்துக் கொண்டு குமார் வாசலை நோக்கி ஓடுகிறான். காவற்காரன் சிரிக்கிறான். நந்தவனத்திற்கு வெளியே வந்தவுடன்...]

குமாரி: [கோபத்தோடு] விடுங்கள் கையை...

குமார்: விட்டு விடுகிறேன். ஆனால் அந்தச் சிவப்பு நாய் இன்னும் துரத்திக் கொண்டு வருகிறதே...

குமாரி: அம்மாடியோ, வாருங்கள் ஓடலாம்!

குமார்: [பாட்டாக] வாராயோ செந்நிலாவே, பாராயோ செந் நாயை...யை...

[இருவரும் கைகோத்துக் கொண்டே தெருக்கோடியில் மறைகிறார்கள்.]

பிரசுரமாகாத, கதை, கட்டுரை, கவிதைகளை திருப்பிப் பெற விரும்புகிறவர்கள், போதிய தாபால் பில்லைகள் அனுப்ப வேண்டும்.

டெலிபோன் : 61　　　　தந்தி விலாசம் : "ஆண்டவர்"

பழனி ஆண்டவர் மில்ஸ் லிமிடெட்

உடுமலைப்பேட்டை

நேர்த்தியான பருத்தி
ஸ்டேபிள் பைபர் நூல்
உற்பத்தியாளர்கள்

20 நிர் முதல் 100 நிர் வரை

டெக்ஸ் மார்க்	634
இயங்கும் கதிர்கள்	47,600

மானேஜிங் ஏஜண்ட்ஸ்

பாக்ய லெக்ஷ்மி அண் கோ.,

உடுமலைப்பேட்டை.

தயாரிப்பாளர் ;

அரசினர் தீப்பெட்டி தொழிற்சாலை

பெரம்பூர், சென்னை.

வியாபார விஷயமாக விசாரிக்குமிடம் :

தொழில் & வர்த்தக டைரக்டர், சென்னை-5.

INSTALL

DPF

PUMPS

DHANDAYUTHAPANI FOUNDRY PRIVATE LTD.,
PAPPANAICKENPALAYAM,
COIMBATORE.

Phone : 219 - P. B. No. 278 - Grams : MOTORPUMP.

காற்றே கேள்

குமரி அ. அனந்தன் எம். ஏ.

எங்கிருந்து வந்தாயோ நானறியேன் காற்றே
எங்குமே செல்வாய் நீ நானறிவேன்—மங்காது
பொங்குகின்ற உள்ளத்தில் முளைத்தெழுந்தச் சொல்லிதனைத்
தங்காமல் எடுத்துச் செல் !

பண்புடைய தமிழ்மரபில் வந்த மக்கள்
புண்பட்டுப் புரையோடிப் போனவொரு—கண்ணில்லாப்
புன்னெறியைக் கடைப்பிடித்துப் புல்லராய் மல்லிழுத்து
மாண்டிடுதல் காணுவையோ சொல் !

தமிழன்னை பெற்றெடுத்தத் தவப்புதல்வர் இந்நாளில்
உமியெனவே சமநீதியூ தித்தள்ளி—தமக்குள்ளே
சாதிகளால் சண்டையிட்டு வீழ்ந்திட்டார் ஐயகோ
வீதியெல்லாம் தமிழ்த்தாயின் கண்ணீர்.

"சாதிகள் இல்லையடி பாப்பா" வென நற்றமிழில்
ஓதிவிட்டப் பொற்கவிஞன் கூற்றினையே—சாதியில்லை
நீதியிதே என்றெடுத்து அன்னார் காதில்
கோதில்லாத் தேனுக ஊற்று !

பின்னும் அன்னார் வாளெடுத்து மாளுவோம்
என்றால்; செந்நீர் வெள்ளம்—இன்னும்
கொட்டித்தான் பகைவளர்த்துத் தீயிடுவோம் சாதியுண்டு
தட்டாதே எனவுரைத்தால்; கேட்டிடு !

தென்றலாய், காற்றே, அவருடலிற் புகுந்துவிடு
பின்னால் நீ புயலாக மாறிடுவாய்—கனன்றிடு
சுழன்றிடு ! சுற்றிடு ! சுக்குசுக்காய் உடைத்திடு
கிழித்தெறிக அவருடலை ! பொடித்திடு !

உண்மையில் உறுதியாக,
குறைந்த செலவில்
உங்கள் வீட்டை கட்ட
இதோ நவீன முறை!



நிரந்தரமானது
இணைக்க சுலபம்
பார்வைக்கு
திருப்தி
கொடுக்கும்

சிக்கனமானது
ஜலம் உட்புகாது
தீயை தடுக்கக்
கூடியது

"EVEREST"
ASBESTOS CEMENT
TRAFFORD SHEETS



A.C. ட்ராபோர்டு &
ப்ளெயின் ஷீட்டுகள்

A.C. மழை ஜல பைப்புகள்

M. KUPPUSAWMY NAICKER

எம். குப்புசாமி நாயக்கர்

ஸ்டாக்கிஸ்டுகள்: ஆஸ்பெஸ்டாஸ் ஸிமெண்ட் லிமிடெட்

15, செம்புதாஸ் தெரு, சென்னை-1

பாசம்

க.நாராயணன்

அமைதி குடிகொண்டிருந்த அந்த அறையிலே கந்தசாமி படுக்கையில் படுத்திருந்தார். அவரது தலைப் பக்கம் உள்ள மேஜை மீது சில மருந்து பாட்டில்கள் அவர் நோய் வாய்ப் பட்டிருப்பதை விளம்பரப் படுத்திக் கொண்டிருந்தன. அவருடைய கால் பக்கம், சுவரின் மீது தொங்கும் அவருடைய மனைவி மீனாட்சியின் படம் அவரையே பார்த்துக் கொண்டிருந்தது. பக்கத்து 'ஸ்டூல்' மீது ஒரு அலாரம் டைம்பீஸ் கால தேவனின் வேகத்தைக் கணக்கெடுப்பது போல 'டிக்-டிக்' என்று அடித்துக் கொண்டிருந்தது.

கண் மூடி விழித்த கந்தசாமியின் பார்வை படத்திலிருக்கும் மீனாட்சியின் மீது நிலைத்து நின்றது. அவளுடன் வாழ்ந்த காலம், கனவு போல கந்தசாமிக்குத் தோன்றியது. எப்படியாவது தன்னுடைய குழந்தைகள் ராமுவும், சரோஜாவும் சிறந்த கல்வி பெற்று, நாட்டிலே நல்ல அந்தஸ்தைப் பெற்று வாழ வேண்டும் என்பதுதான் மீனாட்சியின் விருப்பம். அவள் அகால மரண மடைந்தாலும் மனம் கலங்காமல் வேறு பெண்களிடம் மனதைப் பறி கொடுக்காமல்—தன்னுடைய செல்வங்களைச் சீராட்டி வளர்ப்பதி

லேயே கண்ணும் கருத்துமாய் இருந்தார் கந்தசாமி. மனைவியின் எண்ணத்தை ஈடேற்ற, தன் வாழ்க்கையையே தியாகம் செய்தார். குழந்தைகளின் நன்மை தீமைகளில் தானும் பங்கெடுத்து, அவற்றிற்கு எந்தக் குறையும் இல்லாமல் செய்வதிலேயே தன் பொழுதை யெல்லாம் கழித்தார். தாயற்ற குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாக விளங்கி வந்தார்

கந்தசாமியின்விருப்பம் போலவே ராமுவும், சரோஜாவும் வளர்ந்து பெரியவர்கள் ஆனார்கள். ராமு வைத்தியக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். சரோஜா பத்தாவது வரை படித்து, தையல் வேலையைப் பழகிக் கொண்டிருந்தாள். இருவரும் ஒருவர் மீது ஒருவர் பாசமும் பற்றும் கொண்டு தந்தைசொல் தட்டாமல் நடந்து வந்தனர். இந்த நிலையில்தான் கந்தசாமியை க்ஷய ரோகம் என்ற கொள்ளை நோய் வாட்டியது; பார்க்காத வைத்தியம் இல்லை. ஓய்ந்த நேரத்தில் ராமு தன் தந்தைக்கு வேண்டிய பணி விடைகளைச் செய்து வந்தான். ஆயினும் கந்தசாமி தன்னுடைய அந்திய காலம் நெருங்கி விட்டது என்பதை அறிந்து கொண்டார். தன் பிள்ளைகளை அழைத்துத் தனது எண்ணத்தைத் தெரிவித்து விட ஆசைப்பட்டார். ஆனால் அந்த எண்ணம் அவர்களுக்கு அதிர்ச்சியைத் தரக்கூடாது என்ற காரணத்தால் இதுவரை பேசாமல் இருந்து விட்டார். இனியும் அவர் பேசாமல் இருக்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. மாதங்கள் நாட்களாகி, நாட்கள் மணியாகி இன்னும் சில மணி நேரங்களில் தனது உயிர் பிரிந்துவிடும் என்பதை அவர் தெளிவாகத் தெரிந்து கொண்டார்.

அன்று ராமுவும் சரோஜாவும் வீடு திரும்பியதும் தனது முடிவை அறிவித்துவிட எண்ணினார். இந்த எண்ணத்தில் கண்மூடி விழித்த கந்தசாமிக்கு, மனைவியின் உருவம் அவரை "வாருங்கள்", என்று அழைப்பதுபோலவே தோன்றியது. அதை ஆமோதிப்பது போல பக்கத்திலுள்ள கடிகாரமும் 'டிக் டிக்' என்று சப்தமிட்டு ஒரு பயங்கர ஓசையை எழுப்பிக் கொண்டிருந்தது.

எவ்வளவு நேரம் சிந்தனையில் கழித்தாரோ, அவருக்கே தெரியாது. மாலை மயங்கி இருள் சூழ்ந்து வந்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் அவருடைய வாழ்விலும் இருள் சூழத்தான் போகிறது. வேலைக்காரன் அங்கு வந்து விளக்கேற்றி, சூழ்ந்திருந்த இருளை ஓட்டிவிட்டுச் சென்றான். அதே நேரத்தில் ராமுவும் சரோஜாவும் அங்கு வந்தார்கள். அவர்களைப் பார்ததததும் பொங்கி வரும் துக்கத்தை அடக்கிக் கொண்டு மெதுவாகச் சிரித்தார். ராமு அவருக்கு அருகில் வந்து அமர்ந்து அவருடைய நாடியைப் பிடித்துப் பார்த்தான். ஏற்கெனவே தயாராக இருந்த காப்பியை எடுத்துக் கொண்டு சரோஜா அங்கு வந்து, "அப்பா! காப்பி சாப்பிடுங்கள்", என்று பரிவுடன் வேண்டினாள். அவர் அந்தக் காப்பியை வாங்கி, பக்கத்திலுள்ள ஸ்டூல் மீது வைத்துவிட்டு, அவளை அருகில் உட்காரும்படி சமிக்ஞை செய்தார். அவளும் தனது தமையனுக்கருகில் அமர்ந்தாள். இருவர் கரங்களையும் சேர்த்துப் பிடித்தவாறு, "உங்கள்

விசித்திர விளம்பரம்

ஒரு பஸ் கம்பெனி முதலாளிக்கு இந்தக் கடிதம் வந்தது.

"தங்கள் பஸ்களில் 'ஜேபடிக்காரர்கள் ஜாக்கிரதை' என்று எழுதியிருப்பதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றி. ஜாக்கிரதையாகத் தொழில் நடத்த எனக்கு அது மிகவும் உதவுகின்றது.

இப்படிக்கு
'ஜேபடி ஜாலி'

அம்மாவின் விருப்பம்போல உங்களை நல்ல முறையில் வளர்த்து, படிக்க வைத்து, தொழிற் கல்வியும் கற்றுக்கொள்ள ஏற்பாடு செய்து விட்டேன். நீங்கள் இருவரும் தொழில் செய்து நல்ல முறையில் வாழப் போவதை நான் பார்க்க முடியாது. அதோ உங்கள் அம்மா என்னை கூப்பிட்டுக் கொண்டேயிருக்கிருள். எனக்கு ஒரே ஒரு ஆசை. அதை நீங்கள் இருவரும் நிறைவேற்றி விட்டால் எனது ஆத்மா சாந்தியடைந்து விடும். ராமு ! உன் தங்கை சரோஜாவுக்கு எவ்விதக் குறைவு மின்றி, இன்று போல் என்றும் சந்தோஷமாக வாழ நீ தான் உதவியாக இருக்க வேண்டும். உன்னைத் தவிர அவளுக்கு வேறு யாரும் துணையில்லை. சரோஜா! உனக்கு ஒரே அண்ணன் ராமுதான். உன் வாழ்க்கைத் தீபத்தை எப்போதும் போற்றிக் காப்பவன். அவனுக்கு எந்த விதக் கஷ்டமோ, துயரமோ நேரிடாமல் கண்ணிமை போல் காப்பது உன் பொறுப்பு, அம்மா. இருவரும் பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தி வாழவேண்டும். இதுதான் என் ஆசைக் கனவு,'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது நெஞ்சடைக்க, இருமிக் கொண்டே திரும்பிப் பார்த்தார் கந்தசாமி. ராமுவும் சரோஜாவும் கண்ணீர் விட்டபடியே தந்தையின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தனர். அவருக்கு இருமல் வர ஆரம்பித்ததும் சரோஜா ஓடிச் சென்று அவரது தலையைத் தூக்கித் தன் மடிமீது வைத்துக் கொண்டு ஆசுவாசப் படுத்தினுள். எதிலும் மனம் செல்லாத ராமு, சாவி இல்லாததால் மெதுவாக ஓடிக் கொண்டிருந்த கடியாரம் நின்று போனதையறிந்து, அதைக் கையிலெடுத்து, அதற்கு உயிரூட்டுவது போல் சாவி கொடுத்துக் கொண்டிருந்தான். ஆனுல் அதே நேரத்தில் உயிர் பிரிந்த கந்தசாமிக்கு அவனுல் உயிரூட்ட முடியாமல் போய்விட்டது.

"அப்பா!'' என்று அலறித் துடித்துக் கொண்டு கந்தசாமியின் மார்பில் விழுந்து கதறினுள் சரோஜா.

கந்தசாமி இறந்து ஒரு மாதமாகி விட்டது. அவர் தன் பிள்ளைகளுக்காக வைத்துவிட்டுச் சென்ற சொத்து அந்த வீடு ஒன்று தான். எப்படியாவது தன்னுடைய தமையன் வைத்தியக் கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டால், எதிர்காலம் நன்ருக இருக்கும் என்று சரோஜா கருதினுள். அதற்காகத்தான் ஏதாவது வேலையில் அமர்ந்து, குடும்பத்தை நடத்தி வந்தால் ராமுவின் வைத்தியப் படிப்புக்கு உதவியாக இருக்குமென்று எண்ணினுள்.

ராமுவும் அதே மாதிரிதான் எண்ணினுன். தான் ஏதாவது ஒரு வேலையில் அமர்ந்து வருவாய் தேடினுல், தங்கையின் திருமணத்தை முடித்து விடலாம். அதன் பிறகு மேலும் தான் படிப்பதைப் பற்றி முடிவு செய்யலாம் என்று நினைத்தான்.

ராமு வேலைக்குப் போவதை சரோஜா விரும்பவில்லை. தந்தையின் விருப்பப்படி தான் அவனுக்கு உதவியாக இருக்க வேண்டுமென்று அவள் விரும்பினுள். சரோஜா வேலை பார்க்க விரும்புவதை ராமு எதிர்த்தான். இருவரும் ஒருவர் மீது மற்றவர் கொண்டிருக்கும் பாசத்தால் இம்மாதிரி நினைத்தார்கள். முடிவில் இருவரும் ஏகமனதாக ஒரு தீர்மானத்திற்கு வந்தார்கள்.

இருவரும் எப்போதும் போல் தொழிற் கல்வி பயின்று வருவது

என்றும், மீதி நேரத்தில், சரோஜா இரண்டொரு குழந்தைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பது மூலம் கிடைக்கும் வருமானத்தை குடும்பத்துக்கு உபயோகிப்ப தென்றும், அதே மாதிரி, ராமு ஓய்வு நேரத்தில் தனக்குத்தெரிந்தடாக்டர் ஒருவரிடம் வேலை செய்து ஏதாவது சம்பாதிப்ப தென்றும் முடிவு செய்தனர்.

மறு நாள் இரவு ஒன்பது மணி. ராமு ஏதோ பாட்டு ஒன்றை முணு முணுத்துக் கொண்டே வந்தான். சரோஜாவைப் பற்றி வேலைக்கார னிடம் விசாரித்தான். "இன்னும் வரவில்லை!", என்றான் வேலைக் காரன். தன்னுடைய கைகள் அழுக்குப் படிந்திருப்பது அப்போது தான் ராமுவின் கவனத்திற்கு வந்தது. சோப்பினால் கை, கால், முகத்தைச் சுத்தம் செய்தான். அப்போது சரோஜாவும் வந்து சேர்ந்தாள்.

"உன் வேலை எப்படி யிருக்கிறது?", என்று கேட்டான் ராமு.

"ஒரு பெரிய பணக்காரக் குடும்பம், நாலு குழந்தைகளுக்கு அங்கே பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும். கடைசிப் பையன் மகா போக்கிரி. அவனை எப்படிச் சீர்திருத்துவது என்பதுதான் எனக்குச் சிந்தனையாக இருக்கிறது", என்றாள் சரோஜா!

"நான் வேலை பார்க்கும் அந்த டாக்டர் நல்ல கை ராசிக்காரர். அவரிடம் ஏராளமானவர்கள் வைத்தியம் பார்த்துக் கொள்ள வருகின்றனர். அதனால் எனக்கும் ஓய்வில்லாத வேலை", என்றான் ராமு. இருவரும் கலகலப்பாகப் பேசிச் சிரித்துக்கொண்டே சாப்பிட்டனர்.

மாதம் ஒன்று முடிந்தது. அன்று இரவு வழக்கம் போல ராமு சீக்கிரம் வந்து விட்டான். கையிலிருந்த மணிப்பர்ஸை மேஜை மீது போட்டு விட்டு, கைகால் சுத்தம் செய்து கொள்ளப் போய்விட்டான். அப்போது சரோஜா வந்துவிட்டாள். மேஜை மீது கிடந்த மணிப்பர்ஸை எடுத்து, உள்ளே பார்த்தாள். அதில் நூறு ரூபாய்கள் இருந்தன. சரோஜா ஆச்சரியப் பட்டாள். இதைப் பார்த்தபடி சிரித்துக் கொண்டே வந்தான் ராமு.

"என்ன சரோஜா, அப்படிப் பார்க்கிறாய்?"

"நான் எதிர்பார்க்கவே இல்லை! நூறு ரூபாய் நல்ல வருமானந்தான் இதோ என் பங்கு" என்று தன்னுடைய மணிப்பர்ஸை ராமுவிடம் நீட்டினாள். அவன் அதில் இருந்த நோட்டுகளை எடுத்தான். ரூபாய் ஐம்பது இருந்தது. அவனும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தான்.

ஆண்டியும், அரசனும்

வட்டமேஜை மகாநாட்டிற்காகச் சென்றிருக்கையில் காந்திஜியை, ஐந்தாம் ஜார்ஜ் மன்னரும், இராணி மேரியும் பக்கிங்ஹாம் அரண்மனைக்கு விருந்திற்கு அழைத்தார்கள். இங்கிலாந்து முழுவதும் காந்திஜி அரண்மனை விருந்திற்கு எந்த உடையில் போவார் என்று பரபரப் படைந்திருந்தது. ஆனால் காந்திஜி வழக்கம் போல இடுப்பில் 4 முழத்துணி, ஊசலாடும் கெடிகாரம், மேலே ஓர் போர்வை, சாதாரணச் செருப்புகளுடன்தான் சென்றார்.

பிறகு அவரிடம், "தாங்கள் போதுமான அளவு உடை உடுத்தி இருந்தீர்களா?," என்று யாரோ கிண்டலாகக் கேட்டார்கள்.

காந்திஜி சிரித்துக் கொண்டே சொன்னார்: "எங்கள் இருவருக்கும் சேர்த்துப் போதுமான அளவிற்கு மன்னர்பிரான் அணிந்திருந்தார்!"

"இந்த நூற்றைம்பது ரூபாய் நம் குடும்பத்துக்குத் தாராளம் அண்ணு! இனி எந்த விதக் கஷ்டமும் இல்லே. நீங்கள் மட்டும் இந்த வருஷம் வைத்தியப் படிப்பை முடித்து விட்டீர்களானுல் இந்த வேலே நாம் செய்ய வேண்டிய தில்லே," என்ருள் சரோஜா.

"ஆம் சரோஜா! நீயும் தையல் தொழிலே இந்த வருஷத்துடன் கற்று முடித்துக் கொண்டாயானுல் அடுத்த வருஷம் உனக்குக் கல்யாணம். அப்போதுதான் அப்பாவின் ஆசையும் நிறைவேறும். என் கடமையும் முடியும்",என்ருன் ராமு. இருவரும் சிரித்துக் கொண்டே சாப்பிடச் சென்ருர்கள்.

இப்படியே இரு மாதங்கள் கடந்தன.

அன்று ராமு சீக்கிரமாகவே வந்து விட்டான். மணிப்பர்ஸை மேஜை மீது வைத்து விட்டு உட்கார்ந்தான். கைகால் சுத்தம் செய்துகொள்ள மறந்து விட்டான். அதே நேரத்தில் சரோஜா வந்தாள். அவளுடைய கையில் ஒரு கட்டு போடப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் ராமு திடுக்கிட்டான்.

"என்ன சரோஜா கையில்?"

"எனக்குத்தெரியும் நீங்கள் இப்படிக் கூச்சலிடுவீர்கள் என்று. அதெல்லாம் ஒன்றுமில்லே!"

"மறைக்காதே! சும்மா சொல்லு!"

"பெரிய காயம் ஒன்றுமில்லே. நான் பாடம் சொல்லிக் கொடுக்குமிடத்தில், கடைசிப் பையன் போக்கிரி என்று சொன்னே னல்லவா? அவன் கையிலிருந்த ஒரு இரும்புக் கம்பியால், அவனுடைய சகோதரியை அடிக்கச் சென்ருன். நான் போய் கையினுல் அவனேத் தடுத்தேன். ஓங்கிய அடி என் கைமீது விழுந்து விட்டது. சிறிது இரத்தம் வந்து விட்டது! அவ்வளவுதான்.

"சரோஜா! இதற்காகத்தான் நீ வேலேக்குப் போக வேண்டாம் என்று நான் முன்னமே சொன்னேன். என்னுல்தான் உனக்குக் கஷ்டம்!"

"அண்ணு! எனக்கு ஒன்றும் கஷ்டமில்லே. உடனே பஞ்சு, மருந்து எல்லாம் வாங்கி வந்து கட்டி விட்டார்கள். விடிவதற்குள் ஆறிவிடும்! ஆமாம். உங்களுடைய கைகள் ஏன் இவ்வளவு அழுக்காக இருக்கின்றன?"

ராமு இதைக் கேட்டதும் திடுக்கிட்டான். தன்னுடைய கைகளேப் பார்த்தான் அவன் முகம் வெளுத்தது.

"இதுவா? எங்கள் டாக்டரின் காரில் கோளாறு ஏற்பட்டதால் வழியில் நின்றுவிட்டது. அதைத் தள்ளி "ஸ்டார்ட்" செய்தோம். அதுதான் இப்படி அழுக்காகி விட்டது", என்று அசட்டுச் சிரிப்புடன் குளிக்கும் அறைக்குள் சென்ருன் ராமு.

ராமு திரும்பி வரும்போது சரோஜா மீண்டும் ஒரு கேள்வியை வீசினுள் அவனிடம். "அண்ணு, உண்மையாகவே நீங்கள் டாக்டரிடம்தான் வேலே செய்கிறீர்களா?"

"இதிலென்ன சந்தேகம் உனக்கு? அது சரி! இங்கே வா! நான் வைத்தியம் படிப்பதுதான் உனக்குத் தெரியுமே. கைக்கு நல்ல மருந்து போடுகிறேன்."

சரோஜா இதைக் கேட்டுத் திடுக்கிட்டாள். "உங்களுக்கு ஏன் இவ்வளவு பயம்? பேசாமல் இருங்கள். இந்தப் புண் நாளேயே ஆறிவிடும்," என்ருள் அசட்டுச் சிரிப்புடன்.

ஆனுல் ராமு அவளே விடுவதாக இல்லே. அவள் கையை இழுத்து, கட்டை அவிழ்த்தான். அவள் தலே குனிந்து நின்ருள். அவளுடைய கண்கள் கலங்கின. இரண்டு சொட்டுக் கண்ணீர் தரையில் விழுந்தது. ராமு கட்டைப் பிரித்ததும் திடுக்கிட்டான். கையின்

மறுபுறம் நெருப்பினுல் வெந்து போயிருந்தது. கட்டியிருந்த துணி யையும் பஞ்சையும் பார்த்தான் ராமு. நீ சொன்னது போல் காயம் சாதாரண மல்லவே! வெந்து கொப்புளமாகி யிருக்கிறதே? எனக்கு உண்மை தெரிந்துவிட்டது. நடந்த விஷயத்தை ஒளிக்காமல் சொல்'', என்ருன் ராமு.

சரோஜா கண்ணீர் விட்டபடி ராமுவின் முகத்தை ஏறெடுத்துப் பார்த்தாள். அவளுடைய முகத் திலே பாசமும் பரிவும் கலந்து நிற்பதைக் கண்டான் ராமு.

"அண்ணு! நீங்கள் வைத்தியப் படிப்பை முடித்து டாக்டர் ஆகி விட்டால், நான் டாக்டரின் தங்கை யாகி விடுவேன். என்னைத் தேடி வரன்கள் தாமாக வருவார்கள். இருவருடைய வாழ்வும் நன்ருக இருக்கும் என்று எண்ணினேன். உங்கள் படிப்புக்கு தடையேதும் நேராதபடி நான் சம்பாதிக்க நினைத் தேன். கற்ற தையல் தொழிலைக் கொண்டு, மாதர் சங்கத்தாரால் நடத்தப்படும் ஒரு தையல் கம்பெனி யில் ஐம்பது ரூபாய் சம்பளத்துக்கு வேலையில் அமர்ந்தேன். நேற்று ஒரு துணிக்குப் "பெட்டி" போடும் போது, தவறி என் கைமீது வைத்து விட்டாள் ஒரு பெண். அதனுல் கை வெந்து கொப்புளமாகிவிட்டது. உடனே அடுத்த கட்டிடத்தில் உள்ள ரைஸ் மில்லில் "முதல் உதவி"க்காக வைத்திருந்த பஞ்சு, மருந்து முதலியவற்றை வாங்கி வந்து எனக்குக் கட்டிவிட்டார்கள்! என்னை மன்னித்து விடுங்கள், அண்ணு! உங்களை ஏமாற்றியதற் காக என்னை மன்னித்து விடுங்கள்,' என்று கெஞ்சினுள் சரோஜா!

உடனே ராமு அவளுடைய கண்ணீரைத் துடைத்துவிட்டு, "சரோஜா, நீதான் என்னை மன் னிக்க வேண்டும். உனக்கு ஒரு கஷ்டமும் இல்லாமல் பாதுகாத்து கல்யாணம் செய்து வைக்கும்படி அப்பா சொல்லிச் சென்ருர். ஆனுல் அவர் வார்த்தையும் மீறி, உன்னை வேலை பார்க்க அனுமதித்தேன். அதனுல்தான் உனக்குக் கையிலே புண் ஏற்பட்டுவிட்டது. அதற்குத் தான் நீ என்னை மன்னிக்க வேண் டும். சரோஜா! உனக்கு ரைஸ் மில்லிலிருந்து மருந்தும், பஞ்சும், துணியும் கொடுத் தனுப்பியவன் நானேதான். இந்தத் துணியைப் பார்த்ததும் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அதனுல்தான் உன்னை மீண்டும் விசாரித்தேன். என் கை களில் அழுக்கு ஏற்பட்டது நான் ரைஸ் மில்லில் வேலை பார்த்து வருவதனுல்தான்'', என்ருன் ராமு. இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். அந்தப் பார்வையில்தான் எவ்வளவு பாசம்!

சந்தா விகிதம்

தனிப்பிரதி 25 ந. பை.

6 மாதச் சந்தா ரூ. 1.50

வருடச் சந்தா ரூ. 3.

32 இனிய மணம் கமழும்
302 ஜவ்வாது
3002 பத்திகள்
: தயாரிப்பவர்கள் :
S. V. செல்லக்கனி & கோ
மீனுக்ஷி கோயில் தெரு, மதுரை.

வளர்க கைத்தறி! வாழ்க கூட்டுறவு!!

ஜவஹர்புரம் தேவாங்க நெசவாளர் கூட்டுறவு
உற்பத்தி & விற்பனை சொஸைட்டி லிட்.,
ரெ. K. 1516.

100 நெ. கெட்டிச்சாய கைத்தறி சேலைகள் தயாரிப்பவர்கள்.
வேலாண்டிபாளையம் P.O., கோயமுத்தூர்.

புதுமையான டிசைன்கள்!
கண்ணைக் கவரும் கலர்கள்!!
உத்திரவாதமான கெட்டிச் சாயம்!!!

உடைக்கு உகந்தது!
விலையில் குறைந்தது!!
நாணயமான சரக்கு!!!

இவையனைத்திற்கும் பெயர்பெற்றது
எமது ஜவஹர் சேலைகள்.

இந்தியா, பர்மா, சிலோன் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்கிறோம்.

கோவை கைத்தறித் துணிப் போட்டியில் முதற் பரிசு பெற்றது.
தங்கள் தேவைக்கு எழுதவும்.

எமது சேலைகள் கிடைக்குமிடம்:—
R. S. புரம், காந்திபுரம் சேல்ஸ் எம்போரியங்களிலும்
மற்றும் எல்லா இடங்களிலுமுள்ள சேல்ஸ் எம்போரியங்களிலும் கிடைக்கும்.

குறிப்பு: ஆர்டர்களை உடனுக்குடன் கவனித்து அனுப்புகிறோம்.

S. மாரி செட்டியார், தலைவர்.

கோயமுத்தூர்
தனலட்சுமி சேலைகள்

உத்தரவாத
முள்ளவை

உழைப்பிலும் தரத்திலும் சிறந்தவை
தலைவர்: G. மருதாசலம்.

உழவுக்கும் தொழிலுக்கும்



வந்தனை செய்வோம்

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ்
பிரைவேட் லிட்.
மதுரை - திருச்சி - திருநெல்வேலி
புதுக்கோட்டை - சேலம் - கோயம்புத்தூர்

மதருஸ் ஆட்டோ ஸர்வீஸ் பிரைவேட் லிட்.
மதருஸ் — பெங்களூர்

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிட்.
மதுரை

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிட்.
மதருஸ்-6

டி.வி.எஸ்.
ஸ்தாபனங்கள்

தி மதராஸ் மோட்டார் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிட்.
மதருஸ்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்.
புதுக்கோட்டை — மதருஸ்

இந்தியா மோட்டார் பார்ட்ஸ் & ஆக்ஸஸரீஸ்
பிரைவேட் லிட்.
மதருஸ்-2

சுந்தரம்ஸ் பிரைவேட் லிட்.
மதுரை

சுந்தரம் பைனன்ஸ் பிரைவேட் லிட்.
மதருஸ்-2

சினிமா உலகிலே புதிதாகப் புகுந்து முன்னேறிக் கொண்டிருக்கும் இளம் நடிகை ஜெயகுமாரி, தனது வீடு வாங்கும் எண்ணத்தை தற்காலிகமாக சில காரணங்களால் ஒத்திப்போட வேண்டியிருந்தது.

எது எப்படியிருந்தாலும் அவள் ஒரு வாடகை பங்களாவில் குடி போயிருக்காவிட்டால், அவள் வாழ்க்கையில் அப்படிப்பட்ட ஒரு ரசமான சம்பவம் எதுவும் நடந்திருக்காது என்பது மட்டும் நிச்சயம்!

அங்கு குடி வந்த மாலை தனக்குச் சில துணிகள் வாங்குவதற்குச் சென்றாள் அவள். பிடித்தமான சில துணிகளை எடுத்துக் குறித்து, பணமும் கொடுத்து விட்டு, பிறகு தன் விட்டிற்கு கொடுத்தனுப்புமாறு கூறிவிட்டு வந்து விட்டாள் அவள். அன்றிரவே கடைச் சிறுவன் துணிகளைக் கொடுத்து விட்டுப்போய் விட்டான். இரவாக இருப்பதால் விடிந்ததும் பார்த்துக் கொள்ளலாம் என்று அவள் அதை வாங்கி பீரோவில் வைத்துப் பூட்டினாள். மறுநாள் காலை அவைகளைப் பிரித்துப் பார்த்ததும் அவளுக்கு அடக்க முடியாமல் சிரிப்பு வந்தது! அதில் 'பேண்ட், ஷர்ட்' துணிகள் அழகாக மடித்து வைக்கப்பட்டிருந்தது. அதில் 'ஜெயகுமார்' என்று ஒரு ஓரத்தில் குறிக்கப்பட்டிருந்தது.

'ஜெயகுமார்' யாராக இருக்கலாம் என்று யோசித்தாள். அவளுக்குத் தெரியவில்லை. அந்த சமயம் மாடிப்படியில் யாரோ ஏறி வரும் சப்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தாள். வேலைக்காரி கண்ணம்மா தான் அங்கே வேகமாக வந்தாள்.

"என்னடி அவசரம்? எதுக்கு இப்படி ஓடிவரே! படியெல்லாம் விரிசலாக இருக்குது! பார்த்து வா!" என்று கேலி செய்தாள் ஜெயகுமாரி.

"அம்மா! உங்களைப் பார்க்கணும்னு யாரோ வந்திருக்காங்க அம்மா! பக்கத்து வீட்டிலே குடியிருக்கிறவர் போலத் தோணுது!" என்றாள் கண்ணம்மா.

"பெயர் என்னவென்று சொன்னார்?"

"ஜெயகுமாராம்! ஒரு எழுத்தாளராம்!"

"ஓ.........ஜெயகுமாரா? போய் சீக்கிரம் அவரை உள்ளே வரச் சொல்லி உட்காரச்சொல்லு! நான் இதோ ஒரே நிமிடத்தில் வருகி றேன்!" என்று பரபரப்புடன் கூறிய ஜெயகுமாரி கண்ணாடி அரு கில் சென்று பவுடரை எடுத்து பூசிக்கொள்வதற்கு பதிலாக ஹேர் ஆயிலை எடுத்து கையில் ஊற்றிக் கொண்டு முகத்தில் பூசிக்கொள்ளப் போனாள்.

"அடடே! என்னம்மா இது? எண்ணெயைப் போய் பூசிக்கிறீங் களே!" என்று கண்ணம்மா கேட்ட போதுதான் அவளுக்குத் தன் தவறு புரிந்தது. 'களுக்' என்று ஒரு சினிமாச் சிரிப்பு சிரித்தாள் அவள்.

கண்ணம்மா சிரித்துக்கொண்டே அங்கிருந்து போய்விட்டாள். தனது அலங்காரத்திற்குப் பிறகு கடைக் காரச் சிறுவன் மாற்றிவிட்ட துணி களைக் கையில் எடுத்துக்கொண்டு கீழே இறங்கினாள் அவள். ஹாலில் நின்றிருந்த இளைஞனைக் கண்டதும்,

"வணக்கம், மிஸ்டர் ஜெயகுமார்! இந்தத் துணிகளெல்லாம் உங்களு டையதுதானே!" என்று கேட்டாள்.

அவனும் கையில் கொண்டு வந் திருந்த துணிப் பொட்டலத்தை அவளிடம் கொடுத்துக்கொண்டே,

"கடைப்பையன் நேற்று இரவே துணிகளைக் கொண்டுவந்து கொ டுத்தான். நான் அதை இப்போது தான் பிரித்துப் பார்த்தேன். மேலே எழுதியிருந்த பெயரைப் பார்த்த பிறகு உங்களுடையதுதான் என்று விளங்கிவிட்டது" என்றான்.

"ஏன் அப்படி மாற்றிவிட்டானோ தெரியவில்லை?"

"நீங்கள் உங்கள் கையில் அந்தத் துணிகளை அவனிடமிருந்து வாங்கி னீர்களா?"

"ஆமாம். எதற்குக் கேட்கிறீர் கள்?" என்றாள் அவள் வியப் போடு.

"அதுதான் என்னவென்று பார்த் தேன்! உங்கள் முகத்தை கண்ட துமே அவனுக்கு உலகமே மறந்து போயிருக்கும்!" என்றான் அவன் லேசாகச் சிரித்துக்கொண்டு.

நாணத்தால் அவள் முகம் சற்றே சிவந்தது.

"நீங்கள் ஒரு எழுத்தாளரென்று கேட்விப்பட்டேன்! என்ன பெயரில் கதை எழுதுகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"குமரன் என்ற பெயரில்"

"வளர்மதி பத்திரிகையிலே எழுதுகிறாரே அந்த 'குமரனா' நீங்கள்?" என்றாள் அவள் ஆச்சரி யத்துடன்.

"ஆமாம்" என்று தலையாட்டி னான் அவன்.

"அட! எனக்குத் தெரியாமல் போய்விட்டதே! உங்கள் சிறுகதை என்றால், எனக்குத் தனி பிரியம்! ஒரு கதையைக் கூட படிக்காமல் விட மாட்டேன்!" என்றாள் அவள்.

"எனக்குக் கூட நீங்கள் நடித்த படமென்றால் மிகவும் விருப்பம். அந்த படத்தை நான்கு முறையா வது பார்க்காமல் விடமாட்டேன்" என்றான் அவன்.

X X X

இப்படி ஆரம்பித்து இவர்கள் சந்திப்பு நாளொரு 'பீச்'சும் பொழு தொரு 'பார்க்'குமாக வளர்ந்தது.

சினிமா நடிகைகளைப் பற்றி சிறிது அகப்பட்டாலும் வெளியிடத் துடித் துக் கொண்டிருக்கும் சில பத்திரி கை நிருபர்களுக்கு இவ்விஷயம் தெரிந்தால் விட்டு விடுவார்களா? அவர்களுக்குத் திருப்தி அளிக்கும் வகையில் அவர்கள் சந்தித்த கதை யை விரிவாகவும் அழகாகவும் எழுதி முடித்து முடிவில், குமரன்—ஜெயகுமாரி' திருமணத்தை விரை விலேயே மகிழ்ச்சியுடன் எதிர்பார்க் கிறோம் என்றும் தெரிவித்து ஓய்ந்து போனார்கள்.

ஆனால் இடையில் நடந்த சம்ப வங்களோ.........

197689

வெகு நாளாகப் பூட்டிக் கிடந்த எதிர்பங்களாவில் அன்று ஒரு லாரி நிறையச் சாமான்கள் வந்து இறங்கின. அதை யடுத்து வந்த காரில் ஒரு குடும்பமே வந்து இறங்கியது. மாடியின் கைப்பிடியில் ஒய்யாரமாகச் சாய்ந்துகொண்டு எதிர் பங்களாவையே பார்த்துக் கொண்டிருந்தாள் ஜெயகுமாரி.

காரிலிருந்து முதலில் ஒரு வயதானவரும் அவரை யடுத்து நடுத்தர வயதுடைய ஒரு அம்மாளும் இறங்கினுர்கள். பின்பு துள்ளல் நடையுடன் இறங்கினுள் ஒரு மங்கை.

கொடி போன்ற உடல்; தனது சிவந்த நிறத்திற்கு ஏற்ப அவள் உடுத்தியிருந்த கறுப்பில் பூப் போட்ட ஸில்க் புடவை; அவள் முகத்தில் ஒளிர்ந்த அலாதி அழகு; எல்லாம் ஜெயகுமாரியை ஒரு கணம் கண்ணிமைக்காமல் பார்க்கச் செய்தது. அவளை அடுத்து இறங்கிய வாலிபன் அவளுடைய சகோதரனுக இருக்கவேண்டும்.

அந்த நாகரீக யுவதி சுற்றி ஒரு முறை பார்த்தபோது பக்கத்து வீட்டு மாடியைச் சிறிது நேரம் பார்த்ததை கவனித்து விட்டாள் ஜெயகுமாரி. திரும்பி பக்கத்து வீட்டு மாடியை கவனித்தாள். அங்கே......

அந்த எதிர் பங்களாவையே வேடிக்கை பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள் ஜெயகுமாரி.

அதே சமயம் காரிலிருந்து இறங்கிய எதிர் வீட்டு வாலிபன் அடிக்கடி பக்கத்து வீட்டு மாடியையே உற்று பார்ப்பதைக் கண்ட ஜெயகுமார் திரும்பி மாடியைப் பார்த்தான்.

அங்கே.........

அந்த எதிர் பங்களாவையே பார்த்தபடி ஒயிலாக நின்று கொண்டிருந்தாள் ஜெயகுமாரி. அவன் முகம் சுருங்கியது.

"சட்! இந்த ஆண்களே மோசமானவர்கள்! இவர் எதற்காக அப்படி அவளையே விழுங்கி விடுவதுபோல் பார்க்க வேண்டும்?" என்று முணுமுணுத்தபடி மாடியை விட்டு இறங்கினுள் ஜெயகுமாரி.

"பெண்களையே நம்பக்கூடாது! என்ன இருந்தாலும் நடிகை தானே!" என்று எண்ணமிட்டுக் கொண்டே மாடியை விட்டு இறங்கினுன் ஜெயகுமார்.

இருவர் மனத்திலும் சஞ்சலம் புகுந்தது. மறு நாள் காலையிலிருந்தே அவர்கள் சந்திப்பு பேச்சு எல்லாம் நின்றுவிட்டது. காரணம் இல்லாமல் இல்லை.

அன்றிரவு 'மோஹினி' ஸ்டுடியோவில் ஒரு 'கால்ஷீட்' இருக்கவே கண்ணுடி முன் நின்று தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்த ஜெயகுமாரி தற்செயலாக எதிர் பங்களாவை நோக்கினுள். பங்களாவின் கேட் அருகில் ஜெயகுமாரும் முதியவரும் நின்று பேசிக்கொண்டிருந்தனர்.

"சரிதான், தெரிந்தவர்கள்தான் போலிருக்கிறது! இனி மேல் அவளுடன் பேசுவதற்கு தடையென்ன இருக்கப் போகிறது?" என்று எண்ணிப் பெருமூச்சுவிட்ட ஜெயகுமாரி அந்த ஆத்திரத்தில் கையில் எடுத்த பௌடரை முகத்தில் அழுத்தித் தேய்த்துவிடவே 'நம நம' வென்று எரிய ஆரம்பித்தது—அவள் மனத்தைப் போல.

x x x

மறுநாள் காலை, வேலை யொன்றும் இல்லாமற் போகவே புத்தகம் ஒன்றைப் பிரித்தபடி ஸோபாவில் சாய்ந்திருந்தாள் ஜெயகுமாரி.

"வணக்கம்" என்ற குரல் கேட்டு தலை நிமிர்ந்தாள். எதிரே அந்த எதிர்வீட்டு இளைஞன் நின்றிருந்தான். இவன் எதற்காக வந்

ருக்கக்கூடும் என்று எண்ணிய டியே, [illegible]...

"வணக்கம்! வாருங்கள்!" என்று வரவேற்று அமரச் செய்தாள்.

"உங்களை யாரென்று அறிந்து கொள்ளலாமா?"

"நான் 'சினிமா உலகம்' பத்திரிகையின் நிருபர். முக்கியமாக புதிய நடிக நடிகைகளைப்பற்றி எழுதி வருகிறேன்" என்று ஆரம்பித்தான் அவன்.

ஜெயகுமாரி நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். அங்குமிங்கும்



தவழ்ந்த கூந்தலை நாட்டிய பாவனையில் லேசாக ஒதுக்கினாள்.

"..................உங்களைப்பற்றியும் எழுதவேண்டும் என்பது எங்கள் விருப்பம். உங்களைப் பற்றி எழுதுமாறு எங்களுக்கு நேயர்களிடமிருந்து நூற்றுக்கணக்கான கடிதங்கள் வருகின்றன. உங்களுக்கு ஆட்சேபனை எதுவும் இராது என்று எண்ணுகிறேன்" என்றான் அவன்.

ஜெயகுமாரியின் மனம் கர்வத்தால் நிறைந்தது.

"தடையொன்றுமில்லை! ஆனால் எனக்கு இப்போது சற்றுத் தலைவலியாக இருக்கிறது. நீங்கள் கேட்கப்போகும் கேள்விகளுக்கு பதில் கூறும் நிலையில் இல்லை. மன்னிக்கவும்" என்று கூறிய ஜெயகுமாரி உள்ளே செல்ல எழுந்து நின்று கொண்டாள்.

"அதனால் என்ன! பிறகு வருகிறேன். என்றைக்கு வரலாம் என்பதை தயை செய்து சொல்லுகிறீர்களா?"

"ஞாயிற்றுக்கிழமை வாருங்கள்"

"சரி வருகிறேன், வணக்கம்"

"வணக்கம்!" என்று பதிலுக்குக் கரம் குவித்து அவனை அனுப்புவதற்கும் அவனை முறைத்துப் பார்த்துக்கொண்டே ஜெயகுமார் அவள் வீட்டைக் கடந்து தன் வீட்டிற்குச் செல்வதற்கும் சரியாக இருந்தது. 'அவனுடன் இவளுக்கென்ன பேச்சு? சே! பெண்களையே நம்பக் கூடாது என்றார்களே, சரியாகத்தான் இருக்கிறது!' என்று முணுமுணுத்தபடி வீட்டினுள் நுழைந்து படாரென கதவைச் சாத்தினான்.

x x x

அன்று மாலை ஜெயகுமார் மறுபடியும் எதிர் வீட்டினுள் நுழைவதைத் தன் கண்களாலேயே கண்டாள் ஜெயகுமாரி. சிறிது நேரத்திற்கெல்லாம் வீணையுடன் குயிலைப் பழிக்கும் குரலும் சேர்ந்து கேட்ட இன்னிசை அவளுக்கு நாராசமாக இருந்தது. அந்த கீதம் அவள் காதுகளுக்கு கேட்கக்கூடாதென்று மாடிக்குவந்து விட்டாள். அப்போதும் லேசாகக் கேட்டது.

இசையைக் கேட்பதற்கு அவளுக்கு பொறுமையில்லாமல் போய் விட்டது. இன்னும் எதற்கு இந்த வீட்டில் இருந்து கொண்டு இந்த நாடகத்தை பார்த்துக் கொண்டிருக்க

வேண்டும் என்று பொருமினள் அவள்.
"கண்ணம்மா" என்று கூப்பிட்டாள்.
"ஏம்மா?" என்று கேட்டவாறு வந்தாள் கண்ணம்மா.
"கண்ணம்மா, இப்போது நமக்கு இதை விட்டால் வேறு நல்ல வீடே கிடைக்காதா?" என்று கேட்டாள்.
"ஏம்மா எதுக்கு கேட்கிறீங்க? இந்த வீட்டுக்கு என்ன, எவ்வளவு பெரிசா இருக்குது! அழகாகவும் இருக்குது! இன்னும்......"
"இரு! இரு! அதையெல்லாம் உன்னைக் கேட்கவில்லை! கேட்டதற்கு மட்டும் பதில் சொல்! வேறு நல்ல வீடு கிடைக்குமா, கிடைக்காதா?"
"ஏம்மா, கிடைக்காது! பக்கத்து தெருவிலே கூட ஒரு வீடு பூட்டிக் கிடக்குதாம்! கேட்டுச்சொல்கிறேன்" என்ருள் கண்ணம்மா.
"இப்போதே போய்க் கேட்டு வா!" என்று அவளை அனுப்பினள் ஜெயகுமாரி.
"தன்மேல் உயிரையே வைத்திருப்பது போல் கூறியதெல்லாம் வெறும் நடிப்புதானு? இவ்வளவு சிக்கிரம் எல்லாவற்றையும் மறந்து விட்டாரே!" என்று எண்ணிய போது அவள் கண்களில் லேசாக நீர் திரையிட்டது.
"வீடு மிகவும் நன்ருக இருக்கிறதம்மா! வீட்டின் சொந்தக்காரர் கூட எதிர் வீட்டிலேயே இருக்கிருங்க! எப்போது வேண்டுமானலும் போய் பார்க்கலாம்" என்று திரும்பி வந்த கண்ணம்மா கூறிய போதுதான் அவளுக்குச் சற்று ஆறுதலாக இருந்தது.

x x x

அன்று வேலையொன்றும் இல்லாததால் தினசரியைப் புரட்டிக் கொண்டிருந்த அவள் செருப்பு சப்தம் கேட்டு தலை நிமிர்ந்தாள். எதிரே எதிர் வீட்டு இளைஞன்தான் நின்றிருந்தான்.

"என்ன விஷயம்? உங்களை ஞாயிற்றுக்கிழமைதானே வரச் சொன்னேன்!" என்று கேட்டாள்.

"ஆமாம். ஆனல் ஆசிரியர், 'வெள்ளிக் கிழமைக்குள் எப்படியாவது எழுதப் பார்' என்று கூறி என்னை அனுப்பி விட்டார்." என்ருன் அவன்.

"சரி, நீங்கள் கேட்க வேண்டிய கேள்விகளை ஒரு காகிதத்தில்

எழுதிக் கொடுங்கள். அதற்கான பதிலை எழுதி வைக்கிறேன்." என்ருள் அவள்.

"சரி, அப்போது கேள்விகளை மாலை கொண்டு வருகிறேன். தயை செய்து எப்படியாவது எழுதி வைத்து விடுங்கள்! வருகிறேன்!" என்று கூறி விடை பெற்றுக் கொண்டு போய் விட்டாள்.

அவன்! ஜெயகுமாரியின் வீட்டில் இருந்து திரும்பி தன் வீட்டினுள் நுழையும் வரை ஜன்னல் வழியாகப்

பார்த்துக் கொண்டிருந்தான் ஜெய குமார்.

"உம். இதுவரை அவளைப் பற்றி ஏதேதோ எண்ணி விட்டேனே! பணக்காரனை அவனை விட்டுவிட்டு ஒரு எழுத்தாளனைப் போய் அவள் மணப்பாளா?" என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

ஏதோ ஒரு தீர்மானத்துடன் "கண்ணு" என்று உரக்கக் கூப்பிட்டான்.

சமையல் வேலையில் ஈடுபட்டிருந்த கண்ணன் அவன் குரல் கேட்டு கையில் வைத்திருந்த விசிறியோடு ஓடி வந்தான்.

"எதுக்கு கூப்பிட்டீங்க?"

"இதோ பார், கண்ணு நாம் நாளை மாலைக்குள் வேறு வீட்டில் இருக்க வேண்டும்!"

"இந்த வீட்டுக்கு என்னுங்க? ஏதாவது பேய் பிசாசு இருக்குதுன்னு யாராவதுசொல்லிவிட்டாங்களா என்ன?"

"பேயாவது! பிசாசாவது! அதெல்லாம் என்ன செய்துவிட முடியும்? இதை யெல்லாம் தோற்கடிக்க ஒரு 'மோகினி'தான் பக்கத்து வீட்டில்................" என்று கூறிக்கொண்டே வந்த ஜெய குமார் மேலே கூருமல் சட்டென்று நிறுத்தி விட்டான்.

கண்ணன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

"என்னடா, நான் சொன்னது புரிந்ததா? இப்போதே போய் நல்ல வீடு ஒன்றைப் பார்" என்று தீர்மானமாகக் கூறினான் ஜெயகுமார். தயங்கித் தயங்கி அங்கிருந்து அகன்றான் கண்ணன்.

அன்று மாலையே வேலைக்காரி கண்ணம்மாவுடன் புது வீட்டைப் பார்க்கப் புறப்பட்டாள் ஜெயகுமாரி.

வீடு மிகவும் பெரிதாகவும் அழகாகவும் இருந்தது. கண்ணம்மா தோட்டப் புறத்தைப் பார்க்க பின்புறம் சென்றிருந்தாள். மாடியையும் மாடியறையையும் பார்த்துவிட்டு மெதுவாக – ஒவ்வொரு படியையும் கடந்து கீழே இறங்கிக் கொண்டிருந்த ஜெயகுமாரியைத் தெருவில் கேட்ட செருப்பு சப்தம் திடுக்கிட வைத்தது. அதற்குப் பின் சிறிது நேரத்திற்கெல்லாம் உள்ளே நுழைந்த ஆளைக் கண்டதும் ஒரே யடியாய் திகைத்து நின்று விட்டாள்.

"அட! நீ எதற்கு இங்கே வந்தாய் மிஸ் ஜெயகுமாரி?" என்று கேட்டான் உள்ளே நுழைந்த ஜெய குமார் ஆச்சரியத்துடன்.

ஜெயகுமாரி முகத்தை திருப்பிக் கொண்டு புருவத்தைச் சுளித்தாள்.

"எதற்கென்று கேட்கிறீர்கள்? ஏன் உங்களைப் போன்றவர்களின் முகத்தில் விழிக்கக் கூடாதென்ற எண்ணத்தினால்தான்! நீங்கள் எதற்கு இங்கேயும் போட்டியாக வந்து நிற்கிறீர்கள்?"

அதைக் கேட்டதும் ஜெயகுமாருக்கு நாவும் மனமும் துடித்தன. "நானும் உன்னைப் போன்றவர்கள் கண்களில் படக்கூடாதென்றுதான் வேறு வீடு பார்க்கத் தீர்மானித்து விட்டேன். அந்த முட்டாள் கண்ணன் ஒன்றும் விசாரிக்காமல் என்னை இங்கு அனுப்பி விட்டான்".

"தான் திருடனாக இருப்பவன் மற்றவர்களை நம்பமாட்டான் என்ற உண்மையை நிரூபித்து விட்டீர்களே! அப்படி யென்ன என்னிடம் தவறு கண்டு விட்டீர்கள்? இப்படி யெல்லாம் பேசினால்......"

"கோபம்தானே வரப்போகிறது! உண்மையைக் கூறினால் எரிச்சலாகத்தானிருக்கும்! எதிர் வீட்டு இளைஞனின் சந்திப்பு எதுவரையில் இருக்கிறதோ?..." என்று கேலியாகக் கேட்டான் ஜெயகுமார்.

"உம். அதுவா! அவனுடைய சகோதரியுடன் நீங்கள் நடிக்கும் நாடகம் எதுவரையில் இருக்கிறதோ அது வரையில் இருக்கிறது! ஓ! இப்போதுதான் உங்களை நான் புரிந்துக்கொண்டேன். வருறேன்" என்று கூறிய ஜெயகுமாரி தெருப்

புறம் செல்லத் திரும்பினாள்.
'கல கல' வென்று சிரித்தான் ஜெயகுமார். திரும்பி முறைத்துப் பார்த்தாள் அவள்.

"பெண்களே மிகவும் சந்தேகப் பேர்வழிகள் என்று கூறுகிறார்களே, அது உண்மைதான் என்று எனக்கு இப்போதுதான் புரிகிறது!"

"ஏன் ஆண்கள் மட்டும் அதற்கு சளைத்தவர்களா என்ன ?"

"ஜெயகுமாரி, உண்மையிலேயே உனக்கு அந்த எதிர் வீட்டுப்பெண்ணைப்பற்றி ஒன்றுமே தெரியாதா ?"

"இனி மேல்தான் உங்களிடமிருந்து தெரிந்து கொள்ள வேண்டும்" என்று கோபத்துடன் கூறினாள் அவள்.

"அவளுக்கு மணமாகிவிட்டது!"
சட்டென்று திரும்பி அவனைப் பார்த்தாள். அவள் முகம் 'குப்' பென்று சிவந்தது.

"நீங்கள் கூறினீர்களே அந்த எதிர் வீட்டு இளைஞன் அவன் 'சினிமா உலகம்' நிருபர். என்னைப் பற்றி சில விவரங்கள் அறிய நடையாய் நடந்து கொண்டிருக்கிறான். இவ்வளவு தெரிந்தவர்களாக இருந்தும் இதை அவனிடமிருந்து தெரிந்து கொள்ளவில்லையே நீங்கள் !" என்று கேட்டுச் சிரித்தாள் அவள்,

"போகட்டும் ! இப்போது வீட்டு விஷயம் என்ன ஆவது ?" என்று கேட்டான் அவன்.

"என்ன செய்வது? எனக்கும் தெரியவில்லை !"

"எனக்கொன்று தோன்றுகிறது"

"என்ன ?" என்ற கேள்வி கண்களில் தொனிக்க, அவனை நிமிர்ந்து பார்த்தாள் அவள்

"இனி தனித்தனி வீடுகள் எதற்கு ?" என்று அவன் சிரித்துக் கொண்டே கேட்டதும் வர்ணம் பூசாமலேயே, அவள் கன்னங்களில் ரோஜா நிறம் ஏற தலையைத் தாழ்த்திக் கொண்டு புன்னகை பூத்தாள் ஜெயகுமாரி. ✲

Karim Watch Company

Head Office :- 53-A, Usman Road.
Branch :- 16/7, Srinivasa Road,
T. NAGAR - MADRAS-17.

Dealers in all kinds of Watches & Clocks.

Sales and service. Rates Moderate.
Delivery prompt.

பாண்டியன் லாட்ஜ்

பெஸ்ட் பிரியாணி சாப்பாடு
ஹோட்டல்

8. வெங்கலக்கடை தெரு,
மதுரை.

N. B: கோழிப்பிரியாணி,
கோழிச் சாப்ஸ்

புருச் சாப்ஸ்
தினசரி கிடைக்கும்.

சனிக்கிழமைகளில்
வான்கோழிப் பிரியாணி,
வான் கோழிச் சாப்ஸ்
கிடைக்கும்

Prop- P.K.S.S.

சிறுவர் பகுதி

சின்னப் பொண்ணு

ஜாய்ஸ் பொன்னையா

ஒரு ஊரிலே ஒரு அம்மா நாய் இருந்தது. அதற்கு நான்கு பிள்ளைகள் பிறந்தன. அவைகளில் மூன்று ஆண் குழந்தைகள். ஒன்று பெண்குழந்தை. பெண்குழந்தை சின்னதாக இருந்ததால் அதை, சின்னப் பொண்ணு, என்று செல்லமாய் அழைத்தது.

இந்தச் சின்னப் பொண்ணு, செல்லப் பொண்ணோடு மிகவும் சுட்டிப் பெண்ணும் கூட. அண்ணன்மார்கள் எல்லாம் அம்மா நாயைச் சுற்றிக் கொண்டிருக்கும் பொழுது இது மட்டும் எங்கேயாவது ஊரைச் சுற்றி விட்டு வரும். ஒரு நாள் அது இப்படி ஊரைச் சுற்றி விட்டு வந்த பொழுது அம்மா நாய்க்குக் கோபம் அதிகம் வந்து விட்டது, இவ்வளவு நேரம் எங்கே தொலைந்து போனாய்?'' என்று எரிந்து விழுந்தது. அதற்கு அந்தத் துடுக்குக்காரப் பொண்ணு, ''உங்களைப்போல் எச்சிலைகளை சுற்றிக்கொண்டு கிடக்காமல் ஜாலியாக ஊரை ஒரு சுற்று சுற்றி விட்டு வருகிறேன்'' என்று பதிலளித்தது. "ஊரை மட்டுமென்ன உலகத்தையே சுற்றி வருவாய்'' என்றது அம்மா நாய் கோபத்தில். ''நீ உலகத்தையே சுற்றுவாய்!'' என்று அம்மா நாய் சொன்னதை மட்டும், இந்த ரோஷக் காரச் சின்னப்பொண்ணுமறக்கவே இல்லை.

சில நாட்கள் கழித்து அந்த நாட்டில் ஜனநெருக்கடி ஏற்பட்டு விட்டது. அந்த ராஜா அங்குள்ள ஜனங்கள் குடியேறுவதற்கு வேறு ஒரு இடம் பார்க்கும்படி மந்திரிகளைக் கேட்டார். இந்த பூலோகத்தில் வேறு எந்த

நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கும் விடமாட்டார்கள், அதனால் சந்திர மண்டலத்திற்கே போய் விடலாமென்று மந்திரிகள் யோசனை சொன்னார்கள். ராஜாவும் அதை ஒப்புக்கொண்டு சந்திர மண்டலத்திற்குப் போவதற்கு வேண்டியவைகளைச் செய்யும்படி சொன்னார். வான வீதியைத் தாண்டி சந்திர மண்டலத்திற்குப் போகுமுன் பூமியைச் சுற்றிலுமுள்ள வான வீதி எப்படி இருக்கிறதென்பதைத் தெரிந்துவர பூமியைச் சுற்றி வரும் விமானமொன்று தயாரித்தார்கள்.

இந்த விமானத்தில் யார் முதலில் ஏறிப்போவது என்ற பிரச்னை வந்தது. ஆகாய மார்க்கத்தில் அவ்வளவு தூரம் இதுவரையில் யாரும் போகாததால் யாரும் அதில் பிரயாணம் பண்ண முன்னுக்கு வரவில்லை. இந்த விவரங்கள் சின்னப் பொண்ணு காதிலும் விழுந்தன. "நீ உலகத்தையும் சுற்றி வருவாய்", என்ற அம்மா நாயின் வார்த்தைகள் அதற்கு ஞாபகம் வந்தன. மறுகணம் அந்தவிமானத்தில் நான் போகிறேன்' என்று சின்னப் பொண்ணு போய் ஏறிக் கொண்டது. அதற்கு ஒரு வாரத்திற்கு வேண்டிய ஆகாரம், காற்று எல்லாம் அந்த விமானத்திலே வைத்தார்கள். சின்னப் பொண்ணை வழி அனுப்பக் கும்பல் கும்பலாக ஜனங்கள் வந்தார்கள். நிறைய போட்டோ எல்லாம் எடுத்தார்கள். அப்புறம் விமானம் சந்திரமண்டலப்பிரயாணத்தை ஆரம்பித்தது. சின்னப் பொண்ணு ஜாலியாக மேலே போய்க்கொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் சுமார் ஆயிரம் மைல்கள் உயரத்தில் சின்னப் பொண்ணு அந்த விமானத்தில் உலகத்தைச் சுற்றிக் கொண்டிருப்பதாக எல்லோரும் பேசிக் கொண்டார்கள். அத்தோடு அங்குள்ள கால நிலையினால் சின்னப் பொண்ணுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தைப் பற்றியும் பேசினார்கள். இவைகளை யெல்லாம் கேட்ட பொழுதுதான் அம்மா நாய்க்குப் பயம் ஏற்பட ஆரம்பித்து விட்டது. அப்புறம் ஒவ்வொரு இடத்திற்கும் போய் தன் பொண்ணு எப்படி இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பியது. சின்னப் பொண்ணு மூச்சு விடுவது ரேடியோவில் கேட்கிறதென்று சொன்னார்கள். ஆகவே அது ரேடியோக்கள் இருக்கிற இடங்களுக்கெல்லாம் சென்று உற்றுக் கேட்டது. ஆனல் அதற்கு அப்படி ஒன்றும் கேட்கவில்லை. ஒரு வாரம் கழித்து சின்னப் பொண்ணு மூச்சு விடுகிறது கேட்கிறதென்று சொன்னவர்களே இப்பொழுது கேட்கவில்லை என்று சொல்லிவிட்டார்கள். அம்மா நாய் அலறிக் கொண்டு ராஜாவிடம் ஓடினது. கறுப்பு உடை தரித்து துக்கத்தில் மூழ்கி இருந்த ராஜா, "உலகத்தைச் சுற்றின சின்னப் பொண்ணு இப்பொழுது ஆண்டவனைச் சுற்றுகிருள்" என்று கண்ணீர் பெருக்கினார்.

அம்மா நாய் கதறிக் கதறியழுதது. தாய் சொல் கேளாத 'சின்னப் பொண்ணு' இக் கதிக்குள்ளானது, ஆச்சரியமில்லை அல்லவா?

O

சாய்ந்தாடு . . . . .

சாய்ந்தா டம்மா சாய்ந்தாடு ;
தங்கக் கிளியே சாய்ந்தாடு ;
வாய்ந்த அமுதே சாய்ந்தாடு ;
வளரும் கொடியே சாய்ந்தாடு.

சோலைக் குயிலே சாய்ந்தாடு ;
தோகை மயிலே சாய்ந்தாடு ;
கோலப் பிறையே சாய்ந்தாடு ;
கோமள வல்லி சாய்ந்தாடு

முல்லை மலரே சாய்ந்தாடு ;
முத்தின் ஒளியே சாய்ந்தாடு ;
வெல்லப் பாகே சாய்ந்தாடு ;
வீணை இசையே சாய்ந்தாடு,

பேசும் யாழே சாய்ந்தாடு ;
பிள்ளைக் கனியே சாய்ந்தாடு ;
வீசும் மணமே சாய்ந்தாடு;
விரும்பி நீயும் சாய்ந்தாடு,

தே. ப. பெருமாள்.

வளர்க கைத்தறி ! வாழ்க அவர் சமுதாயம் !

பசவேஸ்வரர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சொஸைட்டி லிட்.

No. K. 1587

சுக்கிரவாரப்பேட்டை :: கோயமுத்தூர்.

தலைவர் : G. E. சின்னதுரை, B.Sc., M.C.

துணைத்தலைவர் : M. மருதாசலம் செட்டியார்

எங்களிடம் 100 நெ. நூலினால்
கண்கவரும் கலர்களில்
தயாரிக்கப்பட்ட எமது
"பசவேஸ்வரர்-
-சேலைகளையே"
வாங்குங்கள்.

எல்லா கோ-ஆப்டெக்ஸ் எம்போரியங்களிலும்
எமது ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

M. N. பொன்னுசாமி செட்டியார் Secretary.

1. 'அறிவுச்செல்வம்'

தொகுத்தவர் : எஸ். குமரேசன்
பதிப்பாளர் : எஸ். எம். ஜெகந்நாதன், நாகர் கோவில்—விலை ரூ 3.

356 பக்கங்கள் கொண்ட இப் புத்தகம் ஒரு அறிவுக் களஞ்சியமாக விளங்குகின்றது. எப் பக்கத்தைப் புரட்டிப் பார்த்தாலும் உலக அறிஞர்களின் பொன்மொழிகள் காணக்கிடக்கின்றன. மிகவும் பயன் தரும் புத்தகம். இவ்வரிய புத்தகத்தை பிரசுரித்திருக்கும் திரு. எஸ். குமரேசன், திரு. எஸ். எம். ஜெகந்நாதன் நமது பாராட்டுக்கு உரியவர்கள்.

x z x

2. 'ஊமைச்சி காதல்'

ஆசிரியர் : காலஞ்சென்ற எம். ஜே. ராமலிங்கம் (ராலி)

ஔவைநூலகம் 4/141 பிராட்வே, சென்னை-1. விலை ரூ 1-50.

ராலி அவர்களின் பத்து சிறு கதைகளின் தொகுப்புத்தான் இப் புத்தகம். அவைகளில் சிறந்த கதையான "ஊமைச்சி காதல்" என்ற கதையின் பெயர்தான் இந்நூலின் பெயராக விளங்குகின்றது. கதாசிரியர் கையாண்டிருக்கும் பாத்திரங்கள் எல்லாம் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் காணப்படுகிறவர்களே. அவர்களின் வாழ்க்கைச் கோர்வையென்று சொல்வதற்கில்லாமல் ஆசிரியரின் எழுத்து வன்மையில் சம்பவங்கள் நம் உள்ளத்தை உலுக்கி விடுகின்றன. அது மட்டுமல்ல, அவருடைய ஹாஸ்யம் படிப்பவர்களுக்கு ஒரு சிறந்த "டானிக்". கவர்ச்சியான அட்டைப் படத்துடன் விளங்கும் இப் புத்தகத்தின் விலை ரூ 1-50, அதிகமில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

x x x

3. 'புது உலகம்'

சென்னை அரசாங்க செய்தித்துறை வெளியீடு. விலை 15 காசுகள். நாட்டின் நலனுக்காகத் தீட்டப்பட்டிருக்கும் ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகளைக் குறித்து திரு. ச. து. சு. யோகி, திரு. எஸ். டி. சுந்தரம், திரு. என். எஸ். சிதம்பரம் ஆகிய கவிஞர்கள் பாடியுள்ள பாடல்களின் தொகுப்பே இச் சிறுநூல். பாமர மக்களின் உள்ளத்தைக் கவரும் வண்ணம் பாடல்கள் அமைந்திருக்கின்றன. புது சமுதாயத்தை மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் புதுமைக் கருத்துக்கள் எளிய நடையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீ கணேஷ் மூவிடோனின்

மகாதேவி

• தமிழ் நாட்டு சினிமா உலகச் சிற்பிகள் பெரும்பாலும் 'பழமை விரும்பிகள்' என்பதற்கு மற்றோர் அசைக்க முடியாத அத்தாட்சி, மகாதேவி. இடை இடையே பாலை வனத்தில் பார்க்கும் 'ஓயஸிஸ்' போல ஓரிரு படங்கள் வருகின்றன என்பதை நான் மறுக்கவில்லை.

அது போன்ற பசுஞ் சோலையாக 'மகாதேவி' இருப்பாள் என்று எண்ணிச் சென்ற எனக்கு கானல் நீரான ஏமாற்றமே பரிசாகக் கிடைத்தது.

கதை சரித்திரத்தோடு சம்பந்தம் கொண்ட ராஜா—ராணிக் கதை... அல்லது அரசியலைப் பின்னணியாகக் கொண்ட தளபதி கருணாகரனின் வரலாறு......அவனுடைய பேராசைப் பேயாட்ட சரித்திரம்...

சோழப் பேரரசின் தளபதிகளாகிய வல்லபனும், கருணாகரனும், வேதநாயகமும் சாளுக்கிய நாட்டை வென்று அரசரையும் இளவரசி மகாதேவியையும் (அவளுடைய பத்து நிமிஷ 'ஸ்டன்டி'ற்குப் பிறகுதான்!) சிறைப்படுத்துகின்றனர். குற்றவாளிக் கூண்டில் இளவரசியின் வாதங்கள் அவர்கள் உயிரைக் காப்பாற்றுகின்றன; அவர்கள் சோழ அரண்மனையிலே தங்கியும் விடுகின்றார்கள்; மகாதேவியின் கழுத்துக்கு மாலை சூட்ட வாள் போட்டி ஒன்று நடக்கின்றது.......... விருப்பமில்லாமல் கலந்து கொண்ட வல்லபன் வாகை சூடுகிறான்...... அதிலிருந்து தொடர்ந்து கருணாகரனின் சூழ்ச்சிகள்...;(கத்தி... விஷம்...பாம்பு கலந்தவைதான்!) இறுதியிலே அவனது வீழ்ச்சி. வழக்கம் போல, கதாநாயகனின் வெற்றி! ஒரே ஒரு புதுமை...... காதலில் ஆரம்பித்துக் கல்யாணம்

நடக்காமல், கல்யாணத்திற்குப் பிறகே 'மகாதேவி'யைக் காதலிக்கின்றான் வல்லபன்!

கவிஞர் கண்ணதாசன் கதை, வசனகர்த்தா; திறமையைக் காட்டப் பல சந்தர்ப்பங்கள் கதையிலே வருகின்றன; 'ஓரளவு' பயன் படுத்தியும் இருக்கிறார்......முத்துப் புலவர் வாயிலாகத் தழுவல்களைத் தாக்கும்போது, கதையே தழுவல் என்பதை மறந்துவிட்டார் போலும்! மங்கம்மா, வேதநாயகம் என்ற பெயர்கள் சோழர் காலத்தவையா? என்பது ஆராய்ச்சிக்குரியது.

எம். ஜி. ஆர்.—சாவித்திரி முதன் முறையாக ஜோடி சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். என்ற பெயருக்கே வரும் ரசிகர்களை அவர் ஏமாற்றவில்லை... வாள் வீச்சையும், வாய் வீச்சையும் தான் குறிப்பிடுகின்றேன்!

சாவித்திரியின் கண் வீச்சுக்கும் நிறைய இடம் இருக்கின்றது...... ஆனால் அனாவசியமாக அதிகமாக நடனமாட வைத்துவிட்டார்கள். அரசபரம்பரை உடுப்பு சாவித்திரியை பத்து வருடங்களுக்கு முந்திய கதாநாயகியைப் போலச் செய்துவிட்டது...... சிறையிலே வந்து கைதியாக இருக்கையில்தான் 'அப்பாடா' என்று பெருமூச்சு விடுகின்றோம்...

வீரப்பா, தனக்கு இந்த வில்லன் வேடம் பொருத்தம் என்பதை நிரூபிக்கும் வகையில் செய்துள்ளார். எம். என். ராஜம், மிகவும் முன்னேறி இருப்பது கண்கூடு. சிறையில் மங்கம்மாவின் குழந்தையை, மகாதேவியினுடையது என்று எண்ணிக் கருணாகரன் கொலை செய்யும் கட்டம் பாடலின் தரத்தாலும், நடிகர்களின் சிறந்த ஒத்துழைப்பாலும் பிரமாதமாக அமைந்து விட்டது.

சந்திரபாபு உணர்ச்சிகளை 'பளிச்' என்று கண்ணாடி போலப் பிரதிபலிக்கச் செய்கிறார். 'முத்துப் புலவர்' பாகம் தமிழ்ப் புலவர்களுக்கு ஓர் இழுக்கு... கதையிலே அந்த பாகத்தை வெட்டி விட்டால், 2000' கச்சா பிலிம் மிச்சப்பட்டிருக்கும்!

மாஸ்டர் முரளி உள்ளத்தை தொடும்வகையில் நடித்திருக்கிறான். 'சிங்காரப் புன்னகை' என்ற பாடல் நன்றாக இருக்கிறது.

விளம்பரம் பிரமாதமாக இருப்பதைப்போல, சரக்கு 'மகாதேவி' யில் இல்லை... ஏலக் கடையில் 'மெர்க்குரி' ஒளியில் எடுத்த புடவை மாதிரி...

—ஆர். எஸ். எஸ்.

★ நாட்டியம் ★

ரஞ்சன் பி.ஏ.எம்.லிட்.

புராண பூர்வம்:—இந்திய நிருத்தியக்கலை எவ்வாறு தோன்றியது என்பது பற்றிப் பல கருத்துக்கள் இருந்து வருகின்றன. துரதிருஷ்டவசமாக இவைகளை விளக்கும் பிரமாணமுள்ள நூல் ஒன்றும் காணப்படவில்லை. கிடைத்துள்ள நூல்களில் பரத முனிவரே முதலாசிரியராக ஒப்புக் கொள்ளப்படுகிருர். பரத முனிவருடைய நிருத்திய இலக்கணங்களை கவனிக்கும் பொழுது, இக்கலை அவருடைய காலத்திலேயே உன்னத நிலையை அடைந்திருந்தது என்பது தெரிய வருகிறது. எனவே, பரத முனிவருக்கு ஆயிரம் வருஷங்களுக்கு முன்பாகவே இக்கலை தோன்றியிருக்க வேண்டும். 'நாட்டிய சாஸ்திரம்' (பரதர்) ஏற்பட்ட காலத்தில் நன்ருக மலர்ந்து முழுமையடைந்து பழுத்து விட்டது என்று கூற வேண்டியிருக்கிறது. பழைய வடமொழி இலக்கியங்களில் ஆங்காங்குக் கிடைக்கும் குறிப்புகள் மூலமாகவும் வேத காலத்திற்கு முன்பாகவே இக்கலை தோன்றிற்று என்று முடிவு கட்டலாம். 'நிருத்யமாண: 'அம்ருத' (ருக்கு 5.33.5) 'நர்த்தனுய கர்மாணி காத்ர விக்ஷேபாயா' (ருக்கு 7.20.22.) என்ற வாக்கியங்கள் வேத காலத்து முனிவர்களுக்கு நிருத்தியத்தில் பழக்கமிருந்ததை உறுதிப்படுத்துகின்றன. இருந்த போதிலும் அக்காலத்தில் ஸமுதாயத்தில் இதற்கு என்ன இடம் தரப்பட்டது என்பது விளக்கமாக அறியக்கூட வில்லை. குறிப்பாக நிருத்திய உற்பத்தியை 'அபிநய தர்பண'மும் (பரதர்) வெளியிடுகின்றனர். "ஆதியில் பிரம்மாருக் வேதத்திலிருந்து பாட்டியத்தையும் (ஓதுவதையும்), யஜுர் வேதத்திலிருந்து அபிநயத்தையும், ஸாம வேதத்திலிருந்து வாய்ப் பாட்டையும், அதர்வ வேதத்திலிருந்து ரஸங்களையும் எடுத்து இவைகளை ஒரு கலையாகத் தொகுத்தார். அதை முதன் முதலாகப் பரத முனிவருக்கு உபதேசித்தார். நாட்டிய வேதத்தைப் பயின்ற பரதமுனிவர், கந்தர்வர்களையும் 'அப்ஸரஸ்' என்ற தேவ மாதர்களையும் உடன் கொண்டு சிவபெருமான் முன்பாக நிருத்தம், நாட்டியம், நிருத்தியம் ஆகிய இவைகளை அரங்கேற்னுர். கைலயம்பதி இது கண்டு மனம் மகிழ்ந்து, தன் கணங்களின் மூலம் நிருத்தியதை நன்கு பயிலப் பரதருக்கு வரமளித்து, கணத் தலைவரான 'தண்டு'வின் மூலமாக அதைக் கற்பித்தார். அம்மட்டிலுமல்லாமல், பார்வதியின் மூலமாக 'லஸ்யத்'தையும் சிவபெருமான் அருளினுல் பரதர் கற்றுக்கொண்டார். தண்டு முனிவர் மூலமாக முனிவர்களும் தாண்டவத்தையும் கற்றுக் கொண்டனர். பாணுசுரனுடைய மகள் உஷை என்பவளுக்கு, பார்வதி லஸ்யத்தைக் கற்பித்தாள். உஷை துவாரகையிலுள்ள பெண்களுக்கும், அவர்கள் ஸௌராஷ்டிரா தேசத்து மாதர்களுக்கும் கற்பிக்க, இவ்வாறு எல்லா தேசத்து ஜனங்களிடையிலும் இது பரவியது. பரதர் தாம் கற்றவைகளை ஒருங்கு சேர்த்து, சாஸ்திரமாக முனிவர்களுக்கும் மற்றவர்களுக்கும் போதித்தார்.

பரத நாட்டியம் இரண்டாவது நூற்ருண்டைச் சேர்ந்தது என்றும் கி.மு. மூன்ருவது நூற்ருண்டிலேயே எழுதப்பட்டது என்றும் ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். எனவே இன்றைக்குச் சுமார் இரண்டாயிரம்

ஆண்டுகளுக்கு முன்பான நூல் இது என்று உறுதிட்டன் கூறலாம். 'அபிநய தர்பணம்' பரத முனிவரைக் குறிப்பிடுவதால், நாட்டிய சாஸ்திரத்திற்குப் பிற்பட்டது என்பது மட்டிலும் உறுதியாகும். இதன் இலக்கணத்தை எழுதிய பரதர், இது நான்கு புருஷார்த்தங்களாகிய தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்பவைகளைத் தருவதோடு மனோதிடம், பாக்கியம், சாதுர்யம், வள்ளாண்மை, சுகம் இவைகளைக் கொடுத்து, மனநோய், அடிமைத்தனம், துன்பம் இவைகளையும் நீக்குகின்றது என்று கூறுகிறார். இக்கலைதரும் இன்பம், தபோதனர்கள் தவத்தால் அடையும் பரமானந்தத்திற்கு ஈடானது என்கிறார். இல்லையேல் நாரதர் போன்ற ஞானிகளை இது கவர்ந்திருக்க முடியுமா? இம்மாதிரியாக, பரத முனிவர் இத்துறையில் சிறந்த கரை கண்ட பண்டிதராக இருந்தார் என்று அறிகிறோம். ஆசாரிய பரதருக்கு முற்பட்ட இலக்கியம் ஒன்றும் கிடைக்கவில்லை. முன்பு குறிப்பிட்டது போல ருக் வேதத்தில் மட்டிலும் நிருத்தியம் இருந்தற்குரிய குறிப்புகள் கிடைக்கின்றன. ருக் வேதம் எழுதப்பட்ட காலம் சுமார் நாலாயிரம் வருஷங்களுக்கு முன்பு என்பது ஆராய்ச்சியாளர்களின் அபிப்பிராயம். அந்தக் காலத்திலேயே இந்திய நாகரீகம் உன்னத நிலையில் இருந்ததென்று சரித்திரம் கூறுகிறது; ருக் வேதம் வீணை, குழல், மிருதங்கம், டமரு, பேரி முதலிய இசைக் கருவிகளையும் குறிப்பிடுகிறது. ஆகவே நாட்டியமும், இசையும் அந்தக் காலத்திலேயே செல்வாக்குடன் இருந்திருக்க வேண்டும்.

அன்பே தெய்வம்

ஆர். என். ஆர். பிக்சர்ஸ் தயாரித்த 'அன்பே தெய்வம்' டிசம்பர் 6-ந் தேதி தமிழ் நாடெங்கும் காட்சியளிக்கப் போகிறது.

ஒரு உத்தம மனைவியின் மனப் பண்பையும், ஆபத்தில் உதவும் அவள் சிநேகிதி சுசிலாவின் பெருந்தன்மையும் சித்தரித்துக் காட்டி அன்பே தெய்வம் என்று போதிக்கும் கதை அமைப்பைக் கொண்டு ஸ்ரீரஞ்சனி, சந்த்யா, சூர்யகலா, அங்கமுத்து, பேபி உமா, எம். கே. ராதா, நகேந்திர ராவ், வி. கோபால கிருஷ்ணன், பி. டி. சம்பந்தம் இவர்களின் நடிப்பையும், ஈ.வி. சரோஜாவின் எழில் குலுங்கும் நடனத்தையும் அளிக்கும்ஒரு கலை விருந்து.

ஜாதகத்தின் வெற்றிக்குப் பின் R. நாகேந்திர ராவ் தமது இரண்டாவது தயாரிப்பான அன்பே தெய்வத்தையும் டைரக்ஷன் செய்துள்ளார்.

பீடி சக்கரவர்த்தி
கு.பி.சொக்கலால்
ராம்சேட் பீடி
TRADE MARK
REGISTERED
RAMSAIT
BEEDI
கு.பி.சொக்கலால்
ராம்சேட்
பீடி
INDIA No.5901
முக்கூடல்
CEYLON No.5929
By
RAJAN & Co. SVKS.

யார் தவறு?

விமலா ரமணி

சாவித்திரி :

சமூகத்தின் சவுக்கடிக்குப் பயந்து நொந்து கொள்பவன் தவறு செய்கிறான்? தன்னைப் பிடிக்க வரும் புலியினிடமிருந்து தப்பிக்கக் குழியில் விழும் மான் தவறு செய்கிறது? தவத்தை விட்டு மேனகையின் எழிலில் சிக்கிய விஸ்வாமித்திரர் தவறு செய்தார்? இல்லை-இல்லவே இல்லை. சூழ்நிலையின் தவறுதான்!

இதோ நான் இருக்கிறேன். இதற்கொரு உதாரணமாய் வாழ்விலே நான் கண்டதெல்லாம் ஒரே போராட்டங்கள்! அவற்றினால் மதியிழந்து நான் மாய்ந்து விடவில்லை. சமூகம் எனக்கென்று ஒதுக்கிய கரடுமுரடான முள் பாதையைச் செப்பனிட்டேன். வேலி அமைத்தேன். இன்று எனக்குச் சமூகம் அழிக்கும்மரியாதையில் பத்தில் ஒரு பங்கு அன்று அளித்ததா? என்று? நான் ஏழை சாவித்திரியாக இருந்த போது.........? பணக்காரக் கணவனால் கைவிடப்பட்ட ஏழை சாவித்திரி! அன்றும் நான் தவறியவள் தான்! இன்றும் தவறியவள் தான். ஆனால் அன்று நான் ஏழை-இன்று பணக்காரி!

கண்ணாடியில் என் உருவத்தைப் பார்த்துக் கொண்டேன். போஷாக்கினால் 'தள தள' வென்றிருந்தாலும் வயதின் சாயை என் முகத்தில் பிரதிபலிக்காமல் இல்லை!

எதிரில் என் மகள் நளினாவின் படம் என்னைப் பார்த்துச் சிரித்தது! இன்று அவளைப் பலரும் பெண் கேட்டு வருகின்றனர். ஆனால் அவள் மட்டும் ஏழை சாவித்திரியின் மகளாகப் பிறந்து, அந்த சாவித்திரியும் வாழ்க்கையில் தவறியவளாக இருந்தால் ......? ஆனால் நானோ இன்று பிரபலப் பாடகி சௌதாமினியின் மகள்! அவளும் பெரிய பணக்கார முதலாளியான ரவியின் ரத்தத்திலே ஊறிய அன்பு மகள்!

நான் சௌதாமினியாக மாறியது இந்தப் பத்து வருடங்களில் தான். நான் சாவித்திரியாக இருந்த போது......... ஏழ்மைக் குடியில் வாழ்ந்த ஒரே குற்றத்தைத் தவிர வேறு எந்தவிதமான குற்றமும் கிடையாது என்னிடம். எனக்கும் உணர்ச்சி என்று ஒன்று இருந்தது; உள்ளம் இருந்தது. அதில் கற்பனைகள் ஊற்று எடுத்தன. என் எதிர் காலக் கணவனைப் பற்றி ஏதேதோ கோட்டைகள் கட்டினேன். அது கற்பனையாகவே போனது!

என் 'கற்பனைக் கணவரின்' அம்சங்கள் என் வீட்டின் எதிரில் குடியிருந்த ரவீந்திரனிடத்தில் இருந்தது. அவர்

அழகு அன்பு, பண்பு யாவும் நான் கனவுக் கணவரிடம் கண்டவை; என்னை அறியாமல் அவர் மீதுபாசம் பிறந்தது. பிறந்த பாசம் காதலாக மாற எவ்வளவு நாட்களாகும்? மணந்தால் அவரையே மணப்பது! இல்லையேல் மரணம் என்று முடிவு கட்டுமளவு கோழையாகி விட வில்லை நான். இவரைப் போல் தான் என் கணவர் இருக்க வேண்டுமெனத் தீர்மானித்தேன் நான். ஆனால் ரவி ஒரு சாதாரண உத்தியோகஸ்தர் பணம் இல்லை அவரிடம்; இது தான் எங்கள் வாழ்க்கை இணைவதற்குத் தடை போட்டது!

நல்ல, பெரிய பணக்கார இடத்தில் என்னை நிச்சயம் செய்திருப்பதாக என் தந்தை அறிவித்தபோது அழுது விட்டேன் நான். என் அழகிற்காக என் ஏழ்மையையும் பொருட்படுத்தாமல் அந்த மகானுபாவன் என்னை மணக்கச் சம்மதித்தாராம்!

பணம்! அது யாருக்கு வேண்டும்? மன அமைதி தானே முக்கியம். நான் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் கல்யாணம், நிச்சயப் பட்டு விட்டது!

ஒரு பெண் இவ்வுலகில் ஆண் துணையின்றி வாழ முடியாது. எனவே நானும் மணக்கச் சம்மதித்தேன். மணந்து கொண்டபின் பெண்களுக்குக் கணவனே தெய்வம். இதை நான் மறுக்கவும் இல்லை; மறக்கவும் இல்லை. ஆனால் என் ரவியை என்னால் மறக்கவே முடியவில்லை. சமூகத்தில் அலைகள் மாறி மாறி வந்து கொண்டிருப்பதைப் போல் என் நெஞ்சிலே வந்து கொண்டே யிருந்தது. கல்யாணத்தின் முதல் நாளிலிருந்து என் மனச்சாட்சியின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் நான் அழுதேன். அழுது கொண்டே யிருந்தேன். ரவி என்னைப் பற்றி என்ன எண்ணுவார்? நான் அவரை ஏமாற்றி விட்டதாகத் தானே நினைப்பார்!

ரவீந்திரன்:

எனக்கு இப்போது வயது நாற்பது, தலையில் முளைத்துக் கொண்டிருக்கும் ஓரே வெள்ளிக் கேசங்கள் நான் முதியவனாகிக் கொண்டு வருகிறேன் என்பதைக் கூறுகின்றன. எனது கடந்த வாழ்வின் ஏடுகளை சாவித்திரி இப்போது புரட்டுகிறாள். இதோ அதன் தொடர்ச்சி—

சாவித்திரி—அழகின் பிம்பம் அவள்! தினம் காலை பேப்பர் படித்துக் கொண்டு என் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருக்கையில் மஞ்சள் பூசிய முகத்துடன், மருண்ட பார்வையுடனும் என்னைப் பார்ப்பாள்; களங்கமில்லா வெள்ளை உள்ளம் படைத்தவள். நாங்கள் இருவரும் மனப் பூர்வமாக நேசித்தோம். ஆனால் அவள் மாற்றான் ஒருவனின் மனைவியாகப் போகிறாள் இன்னும் சில தினங்களில் என்று ஒருநாள் கேள்விப் பட்ட நான் துடித்து விட்டேன். அவள் தந்தைக்கு அடங்கிய சிறு பெண்! அவள் என்ன செய்வாள்? அழுது அழுது அவள் கண்கள் சிவந்திருக்கின்றன என்று செய்தி எட்டியது என் காதிற்கு!

கல்யாணத்திற்கு முதலில் என் ஞாபகார்த்தமாகப் பரிசு ஒன்றைக் கொடுத்து விட்டு அந்த ஊரை விட்டே ஓடி விடவேண்டும் என்று தீர்மானித்தேன் நான். அவள் மற்றவனின் மனைவியாவதை என் கண்ணால் காண்பதா?

அன்று அந்தப் பரிசை—ஆம். அது ஒரு தங்கச்செயின்—அவளிடம் சேர்த்தபோது தேம்பினாள் அவள்!

"அழாதே. வாழ்க்கையில் எல்லாமே நாம் எதிர் பார்த்தபடி நடந்துவிடுகிறதா என்ன? கலங்காதே. இந்தா, எனது அன்பளிப்பு. உன் வாழ்வு வளமாக நான் ஆண்டவனை வேண்டுகிறேன்", என்று கூறினேன் நான்.

உணர்ச்சி பல இருவர் உள்ளங்களிலும் கொந்தளித்தன. உணர்ச்சி வெறியில் நடக்கக் கூடாதது ஏதாவது நடந்துவிடப் போகிறதே என்று எண்ணிய நான் வேகமாக அவ்விடத்தை விட்டு அகன்றேன். சாவித்திரி விசும்பும் ஒலி மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. என் வாழ்க்கைச் சிறு கதையில் சாவித்திரியின் பாகம் முடிவடைந்து விட்டது என்று நினைத்தேன். ஆனால் அது ஒரு பெரும் தொடர் கதையாக மாறும் என்று கண்டேனா நான்!

சாவித்திரி :

என் கதை தொடர் கதை மட்டுமல்ல; முடிவே இல்லா ஒரு முழு நீள சரித்திரம். கல்யாணத் தன்று ரவியின் பரிசு என் கழுத்திலே மின்னியது! பொல்லாதவர். ஊரை விட்டுப் போய் விட்டாரே. ஏன் என் உள்ளத்தை விட்டுப் போகவில்லை? ஆம்; தன் நினைவு எனக்குக் காயாமல் பசுமையாக இருக்க வேண்டு மென்று தானே இந்தச் சங்கிலியை எனக்கு அன்பளிப்பாக அளித்தார். இது உபகாரமா? உபத்திரவமா?

கணவன் வீடு சென்ற போதும் சங்கிலி கழுத்துடனேயே இருந்தது. அதை என்றும் கழட்ட மாட்டேன் நான். ரவியின் பரிசாவது என் உடலோடு ஒட்டி உறவாடட்டும் என்று நினைத்தேன் நான்.

என் கணவனை உங்களுக்கு அறிமுகம் செய்யவேண்டாமா? அழகர் தான்! ஆனால் ஆணவம் மிகுந்தவர். பண்பு உடையவர் என்று அவரிடம் அன்பு கொண்டவர்கள் அவரைப் பற்றிக் கூறுகின்றனர்; பாசம் உடையவர் என்று அவரிடம் நேசம் பூண்டவர்கள் சொல்கிறார்கள். ஆனால் ....அவரிடம் நான் கண்டது அன்போ-பண்போ-பாசமோ-ஒன்றும் இல்லை!

திருத்தி விடலாம் அவரை என்று கனவு கண்டேன் ஒரு காலத்தில். ஆனால் நாளடைவில் கடவுளே வந்து திருத்தினாலும், திருந்தாத 'உத்தமர்' என்று கண்டு கொண்டேன்.

என் அழகிற்காகத் தான் அவர் என்னை மணப்பதாகக் கூறியது கட்டுக் கதை! பெயருக்காகத் தான் என்னை மணந்து கொண்டார்! ஆனால் நான் அவரைத் தெய்வமாகப் போற்றி வந்தேன். என்னை அவர் வெறுத்தார்! என்னை என்றல்-என் உடலை அல்ல! உள்ளத்தை! பல இரவுகள் வராமல் இருந்தாலும் அது பற்றிக் காரணம் கேட்கவில்லை நான். அவரைப் பற்றி உலாவிய கதைகளைக் கேட்டிருக்கிறேன் நான். எனவே, அவர் சந்தோஷம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு குடும்பம் நடத்தப் பாடுபட்டேன். ரவியை அறவே மறந்துவிட்டேன் எனலாம். என் தலை விதியை நினைத்து அழவே எனக்கு நேரம் சரியாக இருந்தது. ரவியை மணந்திருந்தால் எவ்வளவோ சந்தோஷமாய் இருந்திருப்போம் என்று சில சில சமயம் எண்ணுமல் இல்லை. ஆனால் அத்தகைய நினைவு தலை தூக்கும் போது அதை நான் அமுக்கி விடுவது வழக்கம்.

வேசி வீடு செல்லும் பாசம் பிடித்த என் கணவரை வெறுக்கவில்லை நான். ஆனால் அவர் அன்பிற்காகத் தான் என் உள்ளம் ஏங்கித் தவம் கிடந்தது. சூரியனுக்காக வாடும் தாமரையைப் பற்றி இரவிக்கு என்ன தெரியும்? அவன் தனது கடமையைச் செய்ய வருகிறனே அன்றி, கமலத்தின் கண்ணீரைத் துடைக்கவா செய்கிறன்? அப்படித் தாமரையின் மீது அவனுக்கு அன்பிருந்தால் தன் உண்மையான கதிர் கரங்களின் மூலம் நடுப் பகலில் அதை வாட்டுவானா? இது நான் கண்ட உண்மை!

அவர் உடற் பசிக்கு நான் மருந்தாக விளங்கினேனே அன்றி, அவர் உள்ளத்திற்கும், என் உள்ளத்திற்கும் யாதொரு சம்பந்தமும்

கிடையாது! புலிக்கு ஆகாரம் கிடைக்கும் போது புலிக்குத் தெரியுமா அந்த மானின் துடிப்பு?

நாளடவில் என் கணவரின் செய்கை எனக்கு வெறுப்பூட்டியது. பணம் என்று கொண்டுவந்து கொடுத்தார்களே! அந்தப் பணம் படுத்தும் பாட்டைப் பார்த்தீர்களா? அந்தப் பணம் இப்போது வேசியின் வீட்டிலே மாசு படிந்து கிடக்கிறது. சொத்து, சுகம், நகை எல்லாம் பறி போய் விட்டது; நாங்கள் குடியிருக்கும் அந்த ஒரே ஒரு மாடி வீட்டைத் தவிர! ஆனால் ரவியின் அன்பளிப்பு மட்டும் என் கழுத்திலேயே இருந்தது!

டென அறுந்தது! ஒரு பாதி என் கையிலே! மற்றொரு பாதி அவர் கையிலே! கோபமாகப் பேனாக் கத்தி ஒன்றை என் நெற்றி மீது வீசி எறிந்த அவர் கிடைத்தது போதும் என்று வெளியேறினார், வீட்டை விட்டு 'அவள்' வீடு செல்லும் நோக்கத்துடன்! என் நெற்றியில் இரத்தம் வழிந்தது!

ரவீந்திரன்:

நான் மீண்டும் சாவித்திரியின் வாழ்வில் குறுக்கிட்டேன். அன்று ஊரை விட்டு ஓடிய நான் சொந்தமாக ஒரு பத்திரிகை ஆரம்பித்தேன், கடன்வாங்கி. என் உள்ளக் குமுறல்களை வெளியிட இது ஒரு நல்ல சாதகமாய் இருந்தது. என் அதிர்ஷ்டமோ அல்லது கடவுள் செயலோ என் பத்திரிகையான "சாவித்திரி" க்கு அதிகக் கிராக்கி ஏற்பட்டது! ஆம். அவள் நினைவிலே எழுந்த பெயர் தான் அது. என் பெயரை 'அமரன்' என்று மாற்றிக் கொண்டு கதை எழுதி வந்தேன் நான். 'அமரன்' யார் என்பதை அறியாத உலகம், ஏன், சுற்றத்தார் உள்பட யாவரும் அவனைப் போற்றினர்.

அன்று ஒரு நாள்:

விற்பதற்கு ஒன்றும் இல்லை. ரவியின் பரிசு அவர் கண்ணிலே பட்டது. கேட்டார் அதை. மறுத்தேன் நான்! பலாத்காரமாக என் கழுத்திலிருந்து பற்றினார் அவர். நான் போராடினேன். ரவி அளித்த பரிசு ஊசலாடிக் கொண்டிருந்தது என் கைக்கும், அவர் கைக்குமாக! கடைசியில் பட்

நான் ஒரு தொடர் கதை எழுதி வந்தேன். அதற்காகக் கிராமத்தின் இனிமையான காட்சி சிலவற்றைக் கண்டு களிக்க வேண்டியிருந்தது. எனவே நான் அந்தக் கிராமத்திற்குச்சென்றேன். எங்கு தங்குவது என்று எண்ணமிட்டபோது என் எதிரில் ஒருவர் வேகமாகப் போனார். அவரை விசாரிக்கலாம் என்று எண்ணி அவரை நெருங்கினேன்.

அவர் கையில் ......ஆ! சாவித்திரிக்கு நான் அளித்த அன்பளிப்பான அந்தச் சங்கிலி மெருகழிந்து பாதி அறுந்து தொங்கிக் கொண்டிருந்தது. சே! — அந்தச் சங்கிலி தான் என்பதற்கு என்ன அத்தாட்சி! அது போல் எவ்வளவோ இருக்கலாம்.

நான் அதை உற்று நோக்குவதை அந்த மனிதரும் கவனித்திருக்க வேண்டும். உடனே, அதை அவர் தன் சட்டைப் பையில் பத்திரப் படுத்தினார்.

''இரண்டு மாதம் தங்க இடம் வேண்டும். இங்கு ஏதாவது வீடு கிடைக்குமா?'', என்று கேட்டேன் நான்.

அவர் ஒரு நிமிடம் யோசித்து விட்டு, ''நேரே போய் இடதுபுறம் திரும்புங்கள். அங்கு நமது மாடி விடு இருக்கும். தெற்குப் பார்த்த விடு. ஓரத்துவீடு. மாடி மிகப் பெரிய இடம். அந்த வீட்டின் எஜமானன்தான் நான். நானும், என் மனைவியும் தான் அங்கிருக்கிறோம். கீழேயே எங்களுக்குப் போதுமான இடமிருக்கிறது. நீங்கள் மாடியில் தங்கலாம். முதலில் வீட்டைப் போய்ப் பாருங்கள். நான் மாலை வருகிறேன். பிறகு பேசிக் கொள்ளலாம்'', என்று கூறிய அவர் வேகமாகப் பறந்தார் எங்கோ!

அவர் அவசரம் எனக்கு வியப்பை அளித்தாலும் அவர் கூறிய வீட்டைப் பார்க்கலாம் என்று போனேன் நான். வாசற் கதவு சாத்தப் பட்டிருந்தது. உள்ளே யாரோ விசும்பும் ஒலி கேட்டது.

மெதுவாகக் கதவைத் தட்டினேன் நான். யாரோ கதவைத் திறக்க எழுந்து வரும் ஓசை கேட்டது! கதவைத் திறந்த அந்த உருவத்தைக் கண்டு பெண்ணா, பேயா என்று நான் பயந்து விட்டேன். தலை கலைந்திருந்தது; நெற்றியில் இரத்தம் வழிந்துகொண்டிருந்தது! கண்களில் கண்ணீர் ஆறுகப் பெருகிக் கொண்டிருந்தது.

உற்று நோக்கினேன் நான். அது யார் என்று அறிந்து என் இரத்தம் உறைந்தது. சாவித்திரி! என் அன்பு சாவித்திரியா? கழுத்தைச் சுற்றி என்ன தடம்? ஒரு பாதிச் செயின் அவள் கையில் ஊசலாடிக் கொண்டிருந்தது! என் அன்புப் பரிசின் அலங்கோலத்தைக் காண முடியவில்லை என்னால்!... ''சாவித்திரி''...அலறினேன் நான்!

சாவித்திரி:

நெற்றியிலே ஆறுக வடிந்தது இரத்தம். அவருடன் போராடியதின் காரணமாக என் கழுத்து வலித்தது. கண்கள் கண்ணீரைச் சொரிந்தன. அவருக்கு என்னை அடிக்க உரிமை உண்டு. அதைப் பற்றிக் கூட நான் வருந்தவில்லை. ஆனல் அறுத்த சங்கிலியுடன் அவசரமாகச் சென்று விட்டாரே தனது அராகஜச் செயலைப் பற்றிக் கூட வருந்தாமல்......என்று தான் என் உள்ளம் விம்மியது;

சே! என்ன வாழ்வு! பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு. அதை மீறினல்.........

யாரோ வாசற் கதவை இடித்தார்கள். தட்டியவர்களின் மீது எரிச்சல் தான் வந்தது எனக்கு! ஆனல் கதவைத் திறந்தவுடன்......ரவி!... கண்ணமூச்சிக் காட்டி விட்டு அன்று காற்றோடு மறைந்தாரே அவரா! என் உள்ளத்தின் ஓரத்திலே ஒண்டிக் கிடந்த அவர் சற்றுமுன் என் கணவரின் அருசையான செய்கையினல் என் உள்ளம் முழுவதும்

வியாபித்து நின்ருர்! அவர்— இன்று...என் எதிரே!

என் மெய் சிலிர்த்தது. அவர் முகத்திலே படிந்திருந்த கலவரத்தை நன்கு உணர்ந்தேன் நான். அவர் மார்பிலே என் தலையைப் பதித்து அழவேண்டும் போலத் தோன்றியது எனக்கு. ஆனல் நான் என்னை அடக்கிக் கொண்டேன். காரணம்...? 'பண்பு' என்னிடம் முழுவதும் வற்றி விடவில்லை. நெற்றியின் இரத்தத்தைத் துடைத்தேன். பலவந்தமான ஒரு புன்சிரிப்பை முகத்தில் வரவழைத்துக் கொண்டு, "யார்? ரவியா? வாருங்கள். ஏது! இவ்வளவு தூரம்?" என்றேன்.

அழுகையின் எதிரொலி என் குரலிலே கலந்து என் வார்த்தைகளின் ஸ்பஷ்டத்தைக் கலைத்தது.

"வேகமாக ஓடி வந்தேன். முற்றத்தில் நீட்டிக் கொண்டிருந்த மூங்கில் என் நெற்றியைப் பதம் பார்த்து விட்டது. அவ்வளவுதான்", என்று நான் என் கணவரின் செய்கைக்குப் போலிப் போர்வை ஒன்று போர்த்தினேன்.

ரவீந்திரன் :

அன்று சாவித்திரி ஆடிய நாடகத்தில் வெற்றி தனக்கு என்று எண்ணியிருக்கிருள் அவள்! எனக்குத் தெரியாதா? நான் இங்கு வந்து கிட்டதட்ட ஒரு மாதமாகிறது. தினம் தினம் நடக்கும் சண்டை, பூசல், அடி, உதை, விசும்பல் இவை எனக்குச் சகஜமாகி விட்டன! சாவித்திரியின் பொறுமையைக் கண்டு திகைத்தேன். தப்பித் தவறிக் கூடத் தன் கணவனைப் பற்றிக் குறைவாகக் கூறிவிடமாட்டாள் என்னிடம்! பேசுவதே கிடையாது அவள் என்னிடம்!

அன்று வழக்கம் போல் சண்டைக்குப் பிறகு சாவித்திரியின் கணவன் வெளியேறினன். தினம் கேட்கும் சாவித்திரியின் விசும்பல் அன்று கேட்கவில்லை. நிசப்தம் எனக்குப் பயங்கரச் செய்தி ஒன்று கூறியது. மெதுவாகக் கீழே இறங்கினேன் நான். அங்கே நான் கண்ட காட்சி!

சாவித்திரி தூக்குப் போட்டுக் கொள்ள முயற்சி செய்து கொண்டிருந்தாள். "சாவித்திரி" என்று கத்திக் கொண்டே ஒரே பாய்ச்சலில் கீழே விழப் போன அவளைத் தாங்கிக் கொண்டேன். "என்னை வாழ விடாவிட்டாலும், சாகவும்விட மாட்டீர்களா?", என்ருள் அவள்.

"சாவித்திரி, இதோ பார். நான் உன்னை வாழ வைக்கிறேன். சொல்வதைக் கேள். தற்கொலை கோழைத்தனம்", என்றேன்.

என்னை அவள் உற்றுப் பார்த்தாள்.

"என்னை வாழ வைக்க உங்களால் முடியுமா?"

சிறிது திணறிய நான், "முடியும் சாவித்திரி", என்றேன். "சரி நீங்கள் போங்கள்", என்ருள்.

மாடியேறினேன் நான்! என் உள்ளம் கேட்டது! "அவளை வாழ வைப்பதாகக் கூறிவிட்டாயே! எப்படி? சாவித்திரியும், அவள் கணவனும் வாழ்வது இந்த ஜென்மத்தில் இல்லை! பின் எப்படி? அவள் மாற்ருன் மனைவி! உன்னல் என்ன செய்ய முடியும்?"

எனக்கு மூளை குழம்பியது. பொழுதும் புலர்ந்தது. சாவித்திரி என் எதிரில் நின்ருள், நான் கண் விழித்த போது! அவள் பழைய சாவித்திரியாகக் காட்சியளிக்கவில்லை. மரணத்தை எதிர் நோக்கிச் செல்லும் வீராங்கனையைப் போல் தோன்றினள் அவள். கண்ணிமையில் உலகத்தை அலட்சியாகப் பார்க்கும் ஒரு பாவனை.

"வாருங்கள் போகலாம்", என்ருள் அவள்.

"எங்கே?",என்றேன் நான் திடுக்கிட்டவனுக.

"இரவு முழுவதும் நான் யோசித்துப் பார்த்து விட்டேன். உலகம் நல்லவர்களுக்கு அளிக்கும் பெயர்களையும், கெட்டவர்களுக்கு அளிக்கும்

பெயர்களையும் கண் கூடாகக் கண்டு விட்டேன் நான். அந்த உலகத்திற்கே ஒரு சவால் விடத் துணிந்து விட்டேன். சாக இருந்த எனக்கு வாழ வழி காட்டினீர்கள். நீங்கள் என் பழைய நண்பர். என் நலனில் கருத்துக் கொண்டவர். உங்களுக்கு ஒரு சகோதரி இருந்தால் அவளுக்கு உதவி செய்ய மாட்டீர்களா? என் தந்தையும் இறந்து விட்டார்! இனி நீங்கள்தான் துணை. நம் பழைய ஏடுகளைச் சுட்டிக் காட்டாதீர்கள். அப்போது பழகியதைப் போல் நாம் பழக வேண்டாம். நான் உங்களுடன் வரத் தயார்; தாரமாக அல்ல, தங்கையாக. என் கணவர் என்னைத் தேடாமலிருக்க ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன்; அது போதும் அவருக்கு''.

சாவித்திரி கூறியதைக் கேட்டேன் நான். உண்மை அதில் நிறைய இடம் பெற்றிருந்தது. அன்றே அவ்வீட்டை விட்டு வெளிக் கிளம்பினோம். சாவித்திரியின் அஞ்சா நெஞ்சம் எனக்கு வியப்பை ஊட்டியது. அதற்குக் காரணம் அவள் வாழ்க்கையில் கண்ட வெறுப்பு!

சாவித்திரி :

நான் இங்கு வந்து கிட்டதட்ட பதினைந்து நாட்களாகி விட்டன. சிறுவீடு. ரவி வருவார். போவார். எழுதுவார். பிறகு சிறிது பேசுவார். அவருக்குத் தேவையான பணிவிடைகள் செய்து வந்தேன். இரவில் அவர் அடுத்த அறையில் உறங்குவார்; அவர் நெடுநேரம் வரை உறக்கம் வராமல் புரளும் சப்தம் கேட்கும். அவர் கதாசிரியர். ஏதாவது கற்பனை செய்து கொண்டிருப்பார். எனக்கு ஏன் இந்தப் பாழும் தூக்கம் வந்து தொலைய மறுக்கிறது? எனக்கு என்ன குறை இப்போது?

கஷ்டத்தைவிட்டுத் தான் சுகத்தை நாடிவிட்டேனே! ரவி! உத்தமர்! என்னை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார். முன்பு அவர் கண்களில் கண்ட காதல் வெள்ளம் எங்கு போய் மண்டி விட்டது? கடவுளைக் காணும் பக்தன் நிலை போல் இருந்தது அவர் நிலை! என்னோடு பேசுவார். ஆனால் காதல் சம்பந்தமான பேச்சு வந்தால் தலை குனிந்து கொள்வார்! பைத்தியம் மாதிரிப் பேசுகிறேனே! நான் தானே அவரிடம் தங்கை முறையோடுப் பழகச் சொன்னேன்!

அன்று ரவி தன் ரூமில் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். வாராமல் கலைந்து கிடந்த கேசம் அவர் முன் நெற்றியை அழகு படுத்தியது! அப்போது நான் அவரைப் பார்த்தப் பார்வையில் சகோதரப் பாசமா இடம் பெற்றிருந்தது? இல்லை... இருக்கவும் முடியாது! சே! என்ன குரங்குப் புத்தி! வேண்டாத எண்ணம் பல இடம் பெற்றது என் உள்ளத்திலே!

மன அமைதியை நாடி கோவிலுக்குச் சென்றேன் நான்! திரும்பி வரும் போது யாரோ என்னைப் பற்றிப் பேசினார்கள். அந்தப் பேச்சு...
"எங்கோ கிடந்த அனாதைப் பிண்டம். கணவனுடன் வாழத் தெரியாமல் ஓடி வந்து விட்டது யாருடனோ! இன்னும் எங்கெங்கே ஓடப் போகிறதோ?''

ஓடி வந்தவள்! நானா ஓடி வந்தவள்? சே - என் தூய்மைக்கு இந்த சமூகம் அளிக்கும் பரிசா இது? என் பொறுமைக்குக் கிடைக்கும்

சன்மானமா இது! ஓடி வந்தவளாம். நான் ஓடக் காரணம் என்ன என்பதை உலகத்தார் உணர்வார்களா? ஓட விரட்டியது யார் என்பதை வெட்டிப் பேச்சுப் பேசும் வீணர்கள் அறிவார்களா? எனக்குத் தலை சுற்றியது; வீட்டை நோக்கி ஓடி வந்தேன் நான்!

ரவீந்திரன்:

வெளியே இருந்து வந்த நான் சாவித்திரியின் நிலை கண்டு திடுக்கிட்டேன்! மயங்கிக் கிடந்தாள் அவள். அந்த நிலையிலும் அவள் அழகு மட்டும் உறங்கவில்லை! டாக்டரை அழைத்து வந்தேன். அவர் கூறிய தகவல் அதிசயமாக இருந்தது. சாவித்திரி இன்னும் ஏழு மாதத்தில் தாயாகப் போகிறாள்! அவள் கணவன் அவளுக்குக் கொடுத்த ஒரே பரிசு இது தான்! வாழ்க்கையில் கணவன் மனைவி சண்டைப் பிடித்துக் கொண்டு குடும்பம் நடத்தினாலும் அவர்களுக்குக் குழந்தை பிறப்பதற்கு யாதொரு தடையும் இல்லை!

அவள் ஒரு புரியாப் புதிராகக் காட்சியளித்தாள்!

ஒரு நாள்:

அவள் மனம் விட்டு இனிமையாகப் பேசிக் கொண்டிருந்தாள். அந்தச் சாரத்தின் குளிர்ச்சியில் என்னை மறந்த நான் அன்பொழுக "சாவி" என்று செல்லமாகக் கூப்பிட்டேன். அவள் என்னைப் பார்த்தாள்!

"என்னால் உங்களுக்கு ரொம்பக் கஷ்டம். எனக்காக நீங்கள் தினம் தினம் மனச் சாட்சியுடன் போராட வேண்டி இருக்கிறதல்லவா? இதோ தங்களது இந்த டயரி என்னிடம் கூறியது கதை", என்றாள் நிதானமாக.

குழப்பத்துடன் அவள் முகத்தைப் பார்த்தேன் நான். "உங்களை ஏங்க வைக்கப் போவதில்லை; என்னையும் நான் ஏமாற்றிக் கொள்ளப் போவதில்லை. உங்களை மணக்கத் தீர்மானித்து விட்டேன்!", என்றாள் அவள்!

சாவித்திரி இனித் தாய்! அவளுக்கு வேண்டிய பணிவிடைகள் செய்தேன் நான்! இந்த உதவிகள் மூலமாக எங்களிடையே மீண்டும் பாசம் வளர்ந்தது. அன்பு பெருகியது.

'அருண்' பிறந்தான். அவன் மழலை எனக்கு ஆனந்த மூட்டியது. ஆனால் சாவித்திரி ...?

சாவித்திரி:

ஆம். ஆராய்ந்து பார்த்து தான் நான் . இம்முடிவிற்கு வந்தேன். என்னை உலகம் ஏசும். கவலை இல்லை. ஆனால் என் சொந்த வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்பவர்களுக்குத்தான் தெரியும் என் உண்மையான நிலை. என் கணவர் என் மீது அன்பு கொண்டிருந்தால்

என் வாழ்க்கை இப்படியாக இருக்குமா? அல்லது ரவி என் வாழ்வில் குறுக்கிடாமல்இருந்தால் என் கதை அன்றே முடிந்திருக்கும் !

ஆனால்.... விதி வலியது. ரவியும் கொடியவனாகி விட்டால் இன்னொரு கவியைத் தேடிப் போவேனா என்று கேட்காதீர். மனிதர்கள் உணர்ச்சிகளுக்கு அடிமையானவர்கள். அந்த உணர்ச்சியில் தாறுமாறாக ஏதாவது செய்வதைவிட நேர் வழியில் நடந்தால் என்ன? நானும் எல்லோரையும் போல் கணவனுடன் நல்லறம் நடத்த விரும்பினேன். அதற்கு அவர் இடம் கொடுக்கவில்லை. இடம் கிடைத்த இடத்தில் ஒதுங்குவது தானே மனித ஆசை !

எனவே நான் தீர்மானித்து விட்டேன் ரவியை மணப்பதாக. நாங்கள் பழைய காதலர்கள். ஒருவரை ஒருவர் கண்டு புரிந்து கொண்டவர்கள். நான் ஒரு குழந்தைக்குத் தாயான பின்பும் கூட ரவி என்னை வெறுக்கவில்லை ! ஒரு வருட காலமாகத் தூய்மையாக வாழ்ந்து பார்த்தோம். அப்போது உலகம் ஒன்றும் என் தலையில் கிரீடத்தைச் சுமத்த வில்லை ! நான் தூய்மையாக வாழ்ந்த காலத்திலேயே அது என்னைக் களங்கப் படுத்தியது ! நான் களங்க மற்றவள் என்பதை நிரூபிக்க என்ன அத்தாட்சி இருக்கிறது எனக்குக் கடவுளைத் தவிர !

நானும், ரவியும் மணம் புரிந்துக் கொண்டோம்! மங்களமான வாழ்வு மேற்கொண்டோம். மீண்டும் என் வாழ்வில் வஸந்தம் வந்தது. என் அழகு ரஸிக்கப்பட்டது. என் மீது அன்பு மழை பொழிந்தார் ரவி. எனது குழந்தையான அருண் மீது அளவற்ற பாசம் வைத்தார். என் குரலின் இனிமையை உலகிற்குக் காட்ட விழைந்தார் அவர். சங்கீதம் கற்றேன். சௌதாமினியானேன் ! கச்சேரிகள் பல செய்தேன். முதலில் என் கச்சேரியை வெறுத்து வந்தனர் மக்கள்! ஏனெனில் 'ஓடி வந்தவள்' அல்லவா நான் !

ஆனால் மதுவைச் சுவைக்காத வண்டு உண்டா? என் இனிமையான சங்கீதத்தில் என் களங்கத்தை மறந்தனர் மக்கள். பணம் குவிந்தது ! கலைமகளும், திருமகளும் என் இல்லத்தில் நடன மாடினர். எனக்கும், ரவிக்கும் நளினா பிறந்தாள்.

வருடங்கள் பல உருண்டோடின, என் மாஜிக் கணவர் என்ன வானார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று—அவர் என்னைத் தேடி வரவில்லை !

இன்று நான் பணக்காரி! பல லட்சம் பெறுமான சொத்துக்களுக்கு அதிகாரி! இன்று என் மகளைப் பெண் கேட்டுப் பலர் வருகின்றனர்! அன்று என்னைத் தூற்றியவர்கள் இன்று போற்றுகிறார்கள்! ஏன்? என் பணத்திற்காக. நான் 'ஓடி வந்தவள்' என்று அன்று ஓலமிட்டவர்கள் இன்று என்னை அவர்கள் வீட்டிற்கு விருந்துண்ண அழைக்கிறார்கள் !

மனைவியை விட்டு மாற்றாளிடம் இன்பம் கண்ட என் கணவர்! கணவனைக் கூடிய மட்டும் திருத்த முயன்று தோல்வியின் தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் ரவியை நாடி இழந்த வாழ்வினும் பன் மடங்கு இன்ப வாழ்வு பெற்றநான்! சிறகொடிந்து வந்த பறவைக்கு அன்னமிட்டு, அன்பூட்டியது ரவி! ஏழையான சாவித்திரியை 'ஓடி வந்தவள்' என்று ஏசி, பணக்காரியான சௌதாமினியைப் போற்றிய சமூகம்!—இதில் தவறு செய்தவர் யார்?

நீடித்து உழைக்கும்

பாத்திரங்கள்

எங்களிடத்தில் அலுமினியம், கண்ணாடி சாமான்கள், பீங்கான், எனமல் தினுசுகள், விளக்குகள், ஊறுகாய் ஜாடி, புட்டி, கார்க்கு, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் பலவித மான சாமான்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

சு. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவினிங் பஜார், பி.டி. மதராஸ்.

S. SANTHOSA NADAR & SON

1/4, EVENING BAZAR .... PT. MADRAS.

BAROOL

கிளை ஆபீஸ்: 23, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3
37, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

For Complete Range of Cotton Spinning Plant

TEXTOOL

CARDING ENGINES

DRAWING FRAMES

FLY FRMES

RING SPINNING FRAMES

REELING MACHINES

BUNDLING PRESS

TEXTOOL DIESEL ENGINES

For Agricultural purposes.

★

ENQUIRIES SOLICITED

TEXTOOL COMPANY LIMITED

Post Box No. 221, COIMBATORE (South India)

Telephone: 409 & 1409 Telegrams: 'TEXTOOLCO''

தொடர் நாவல்:



கு. ப. சேது அம்மாள்

அத்தியாயம் 5.
சிப்பியில் முத்து

தூங்க முயன்றான் துரை.

ஆனால் தூக்கம் வருவதற்குப் பதிலாக வள்ளி வந்து நின்றாள் அவன் நினைவில்!

கடைசல் பிடித்தது போன்ற குற்றங் குறையற்ற உடலமைப்பும் அழகு மலர்ந்த முகமும் அவன் நெஞ்சை அள்ளின! கற்றை கற்றையான கருங் குழல் சுருண்டு நெற்றியிலே புரள, வெள்ளை விழிகளில் குறுகுறுவெனச் சுழன்று வரும் கரு விழிகள்! செவ்விய இதழ்களுக்கிடையில், பளிச்சென்று ஒளிரும் பல் வரிசை தெரிய மலரும் புன்னகை!

அட! பார்க்கப் போனால் ஒரு குடியானவப் பெண்!

ஜன சமுத்திரமான பட்டணத்தில் லட்சக் கணக்கான பெண்களைப் பார்த்திருக்கிறேன். ரூபம், குரூபம் எல்லாம் பார்த்திருக்கிறேன். இப்படிப் பட்ட தீர்ந்த வடிவமுள்ள சுந்தராங்கி அங்கே தென்படக் காணோம்! நாகரிகத்தின் வாடையே இன்னதென்றறியாத கிராமச் சூழ்நிலையில் வளர்ந்த பெண், அவளுடைய பருவச் செருக்கு, நடக்கும் நடை, பார்க்கும் பார்வையெல்லாம் ராணுவக் குதிரை போலல்லவா இருக்கிறது!

அடடா! சிப்பியில் முத்து விளைவதைப் போல, குப்பைத் தொட்டியில் வளரும் குருகத்தி போல, ஏழை உழவன் வயிற்றில் இந்த எழிலரசி பிறந்திருக்கிறாள்!

ஆஹா! பொன்னும், மணியும், பட்டும், பகட்டுமுள்ள பெண்களிடம் என் மனம் ஈடுபடவில்லை — அதாவது எந்தப் பெண்ணுடைய உடலழகும், என் கண்களைக் கவ்வியதில்லை!

வள்ளி! முதற் பார்வையிலேயே என் உள்ளத்தை அபகரித்துக் கொள்ள, நான் எப்போது வருவேன் என்று காத்திருந்தாயா? உன் சுகுமார மேனி அறுதல் கந்தலான ஆடையைப் புனைந்துள்ளது! என் வீட்டில் வாசல் கூட்டி, சாணி தெளித்துச் சாக்கடை கழுவி வயிறு வளர்க்கிறாய்!

என் உள்ளம் விரும்பித் தேடிய பெண் இங்கேயா— எங்கெங்கோ என் கண்கள் துழாவிய வடிவழகு — இந்த ஊரில் என் வீட்டில் பணி செய்து கொண்டிருக்கிறதா?

அட தெய்வமே! முதற் பார்வையிலேயே என் மனதில் இடம் பெற்ற வள்ளி, என் மனமோகினி! நீ எங்கு பிறந்தால் என்ன? உன் உடலும், கள்ளமற்ற உள்ளமும் என் உயிரை ஈர்க்கின்றன! நீ தான் என்...

இந்த மாதிரி இன்ப நினைவுகளில் மனதைச் சுழலவிட்டு, அதன் சுழற்சியிலேயே லயித்துத் தன்னை மறந்திருந்தான் துரை.

வாசல் திண்ணையில் படுக்கையைப் போட்டுக் கொண்டு படுத்த சிவராமய்யர், படுத்துப் பத்து நிமிஷத்திற் கெல்லாம் குறட்டை விட ஆரம்பித்து விட்டார். அவருடைய மனைவி அன்னம்மாள் கொஞ்ச நேரம் எண்ணங்களுடன் போராடி விட்டு நித்திராதேவியின் கையில் சிக்கினாள்.

சிந்தனைக்கு ஈடு கொடுத்துக் கொண்டு இரவு பூராவும் கண் விழித்தவள் கமலம் ஒருத்தி தான்.

கமலம் அந்த வீட்டுக்கு மூத்த பெண். அவளுக்குப் பிறகு சிவராமய்யர். அவருக்குத் தங்கை ஒருத்தி. வழி வழியாக சாஸ்திர, சம்பிரதாயங்களை, ஆசாரத்தோடு கையாண்டு வரும் பரம்பரை.

அந்தக் குடும்பத்தில் கமலம் ஐந்தாவது வயதிலேயே வைதவ்விய மடைந்து விட்டவள். புருஷனுடைய முகமே தெரியாது. புகுந்த வீடு என்று அவள் போய் அறியாள். ஆயினும், அறுபதும் கற்ற அனுபவசாலி கமலம்.

தனது நிலைமையை உணர்ந்து தக்காருக்குத் தக்கபடி நடந்து கொண்டு அன்றிலிருந்து இன்று வரையில் அந்த வீட்டில் அவள் வைத்தது தான் சட்டம்.

சிவராமய்யரும், தாய்க்குப் பிறகு தமக்கையை அந்த ஸ்தானத்தில் வைத்து மிகவும் கண்ணியமாக நடத்தினர். கமலமும் சுயநலம் கருதாமல் கடுத்த முகம் காட்டாமல் எல்லோருக்கும் உபகாரியாக,ஒத்தாசையாக இருப்பவள். பிறந்த நாளிலிருந்து வாசற்படி தாண்டாமல் அந்தக் குடும்பத்தின் வாழ்வும், கீர்த்தியுமே தனதாக கொண்டு செயலாற்றி வருகிறவள், துரையினுடைய திமிர் தண்டித் தனமான போக்கைக் கண்டு மருண்டாள். அந்த மருட்சியில் விடிய விடிய அவளுக்கு தூக்கமே வரவில்லை.

கோழி கூவியது!

பக்கத்து வீட்டில் சாணி தெளிக்கும் சத்தம் கேட்டதும், இறைவனுடைய பெயரைத் துதித்தவாறு படுக்கையை விட்டு எழுந்து, பாயைச் சுருட்டிக் கொண்டு போய் வைத்துவிட்டுக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு மாட்டுத் தொழுவத்தில் புகுந்தாள் கமலம்.

கன்றோடு கூடிய பசுவை வலம் வந்து வணங்கி விட்டு, புது ஜலமும் சாணமும்

கொண்டு வந்து வாசலில் தெளித்து விட்டு முற்றத்திலிருந்த துளசி மாடத்தை மெழுகிக் கோலமிட்டாள்.

கமலத்தின் குரல் கேட்டுத் தாழ்வாரத்தில் படுத்திருந்த அன்னம்மாள் துயிலெழுந்து, "அடடா, பொழுதே விடிந்து விட்டதா?", என்று கூறி பரபரப்புடன் எழுந்து சென்று பல் துலக்கிக் கொண்டு வந்து அடுப்பைப் பற்ற வைத்து விட்டு மாடு கறக்கக் கொட்டிலுக்குச் சென்ருள்.

முற்றத்தில் ஈயப்பாத்திரங்களேயும், கற்சட்டிகளேயும் தேய்த்துக் கொண்டிருந்தாள் கமலம். வேலைக்காரிக்காகப் போடப்பட்ட பத்துப் பாத்திரங்களே எடுக்க வந்தாள் வள்ளி.

கமலம் அவளே நிமிர்ந்து பார்த்து, "பழங்களெல்லாம் என்னமாக இருந்ததடீ வள்ளி?", என்று ஏதோ தான் கொடுத்து, சாப்பிடச் சொன்னவள் போல சுவாதீனத்தோடு கேட்டுவிட்டு அவள் முகம் எப்படி மாறுகிறது என்பதை ஓரக் கண்ணுல் கூர்ந்து கவனித்தாள்.

அவள் பார்த்தது போலவே வள்ளியின் முகம் விகாரமடைந்து அசடு வழிந்ததைக் கண்டாள் கமலம்.

என்ன பதில் சொல்லுவது என்று ஒரு நிமிஷம் திணறிஞள் வள்ளி.

'திருட்டுச் சிறுக்கி; ஆடு திருடின கள்ளன் போல விழிக்கிறதைப் பார்', என்று மனதில் நினைத்துக் கொண்டு, "என்னடீ, கேட்கிறேன், பதிலேக் காணேம். நீ தின்னவேயில்லேயா?", என்று கேட்டாள்.

"பழமா, நான் தின்னவில்லேயே", என்ருள் வள்ளி.

"ஏதடி அதிசயம்! நேற்று மெனக்கட்டு உன் வீடு தேடிக் கொண்டு வந்து கொடுத்தானே துரை......"

"நான் வீட்டுக்குப் போன போது பெட்டி மேலே நாலு வாழைப் பழமும், இரண்டு ஆரஞ்சியும் இருந்தது. அது நம்ம ஐயரு கொடுத்தது என்றும் தெரியாது. நான் தின்னவுமில்லே", என்று ஒருவிதமாகப் பதில் கூறித் தப்பித்துக் கொள்ளப் பார்த்தாள் வள்ளி.

கமலம் அவ்வளவு இலகுவில் விட்டுவிடுவாளா?

"ஏன் கந்தப்பன் சொல்லவில்லேயா உன்னிடம் ஒன்றும்?", என்று கேட்டாள்.

"இல்லம்மா. நேற்று விருந்தாளி இரண்டு பேர் வந்து விடவே அவர்களோடு பேசிக் கொண்டிருந்து விட்டார். இல்லாத போனல், "சின்னய்யர் கொண்டு வந்து கொடுத்தார். சாப்பிடு வள்ளியம்மா; என்று சொல்லியிருப்பாரே!", என்ருள் வள்ளி பொருத்தமாக!

அப்பொழுதும் கூட கமலத்திற்குச் சந்தேகம் தான். மேலும் அதைப்பற்றித் தூண்டிக் கேட்க இயலாமல் துரை எழுந்து இறங்கி வந்து கொண்டிருந்ததால் பேசாமலிருந்து விட்டாள்.

வள்ளி பாத்திரங்களுடன் கிணற்றங் கரைக்குச் சென்ருள். துரையும் பல் தேய்க்கக் கொல்லேப் பக்கம் சென்ருன்.

கறந்த பாலுடன் உள்ளே வந்தாள் அன்னம்மாள். அலம்பிய கற்சட்டி ஈயப் பாத்திரங்களுடன் உள்ளே வந்த கமலம்,

"என்னவோ, அந்தக் குட்டியை அப்பாவிப் பெண் என்றாயே; நீதான் அப்பாவி, அது சரியான வித்தாரக் கள்ளியாக்கும் !", என்றாள் நொடிப்புடன்.

"என்ன சங்கதி ?", என்று திடுக்கிட்டுக் கேட்டாள் அன்னம்மாள்.

"பழமா ! ஐயரா ! கொடுத்தாரா! எனக்கு ஒன்றுமே தெரியாதே !, என்று முழுப் பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்கப் பார்க்கிறாள் அவள்".

"நிஜமாகவே தெரியாதோ என்ன அவதியோ! நேற்று அஸ்தமிக்கிற வரையில் இங்கே தானே இருந்தது ? தெரியாம லிருந்தாலு மிருக்கும்!".

"நாசமாகப் போனாய்! வயசு நாற்பத்தைந்தாகித் தலையில் கூட நரை கண்டு விட்டது; மாட்டுப் பெண் வரப்போகிறாள் இதோ ! இன்னமும் உனக்கு ஆள் நிதானம் அறியத் தெரியவில்லையே! 'ஏனடீ, பழம் எப்படியடி இருந்தது ?', என்று கேட்ட பொழுது அவள் விழித்த விழியை யல்லவா பார்க்க வேண்டும் ! மனசிலே எவ்வளவு ஆழம் பாய்ந்த கள்ளம் அதிலே இருந்தது தெரியுமா ? என்னைப் பைத்தியக்காரி என்று தீர்மானித்துவிட்டாள் என்பது அவள் சொன்னதிலிருந்து தெரிந்தது...".

ஈரக்காலை உதறி உதறிக் கொண்டு உள்ளே நுழைந்த சிவராமய்யர் விபூதி யெடுத்து நெற்றியில் பூசிக் கொண்டே, "என்ன அக்கா, நேற்றில் இருந்து ஒரே கசமுசலாகக் கிடக்கிறது வீடு! பிள்ளை வரவில்லை வரவில்லை என்று...".

"அடேய் சிவா, நம்ம அன்னம்மாள் சாட்சாத் அன்னபூர்ணிதான்! அவள் அதிருஷ்டம் தான் நூறு வேலி நிலம் முந்நூறு வேலி யாச்சு. வீட்டிலுள்ளவர்களுக்கும், வருகிறவர்கள் போகிறவர்களெல்லாம் அன்னத்தைப் போல உண்டோ என்று போற்றிப் புகழும்படி பெயரெடுத்து விட்டாள். ஆனால், ஆள் நிதானம் துளிக்கூட அறியத் தெரியவில்லையேடா சிவா ?", என்று கவலையுடன் சொன்னாள் கமலம்.

"நீ இருக்கிற வரையிலும் எங்களுக்கு அந்தக் கவலை எதற்கு அக்கா ?".

"என்னை என்ன கல்லாலே கட்டி, சாந்தாலே மெழுகி யிருக்கிறதா சிவா? நாளைக்கு ஊரான் பெண்ணை வைத்து ஆண்டு ஆகவேண்டுமே,இப்படி வெள்ளைச் சோளமாக இருந்தால் ?".

"அந்தக் கவலை அப்புறம் அக்கா! இப்போது நடக்க வேண்டியதைப் பேசு", என்றார் சிவராமய்யர்.

"ஆகட்டும், சாவகாசமாகச் சொல்லுகிறேன் !", என்று அர்த்தத்தோடு சொன்னாள் கமலம், கொல்லைப் பக்கம் பார்த்தவாறு !

அத்தியாயம் 6.

ரோசமும் சமாதானமும்

கொல்லைப் பக்கம் சென்ற துரை, அங்கே தண்ணீர் இழுத்துக் கொண்டிருந்த வள்ளி யருகில் சென்று, "வள்ளி, அந்த

கருப்பு சொம்பில் கொஞ்சம் ஜலம் விடேன்", என்ருன்.

வள்ளி மிரள விழித்தாள். பயத்துடன் உட்புறம் குனிந்து பார்த்தாள். அதை கண்ட துரை, "பரவாயில்லே விடு. நான் பட்டணத்திலே இருந்த ஆசாமி. எனக்கு நீ தொட்ட ஜலம் தேவலே, விடு" என்ருன்.

இதேதடா தர்ம சங்கடமாக வந்து சேர்ந்ததே என்று சுற்று முற்றும் பார்த்து விட்டுச் சட்டென்று சொம்பில் ஜலத்தைவிட்டாள் வள்ளி பரபரப்புடன்.

பிறகு மிகவும் தணிந்த குரலில், ஆனுல் கோபத்துடன், "அம்மா என்னைப் பழம் நன்ருக இருந்ததா என்று

கேட்கிறார்களே; அங்கே ஏன் அப்படிச் சொல்லணும்? நானல்லவா இப்ப அகப்பட்டுக் கொண்டேன்'' என்று கேட்டாள்.

துரையின் முகம் சிவந்தது. குரலில் கடுமை தெறிக்க, "ஓகோ! துப்பு அறிகிறார்களோ, சாமர்த்தியமாகக் கேள்வி கேட்டு! வள்ளி நீ ஒன்றுக்கும் பயப்படாதே கேட்டால், 'ஆமாம், கொடுத்தார், சாப்பிட்டேன்', என்று சொல்லு'', என்று கூறிவிட்டு சொம்பை எடுத்துக் கொண்டு தோப்புப் பக்கம் சென்றான்.

வள்ளியும் மனக்கலக்கத்துடன் அன்று காலையில் வேலைகளை முடித்து விட்டு வீட்டுக்குச்



சென்று தகப்பனிடம் எல்லாச் சங்கதிகளையும் சொன்னாள்.

''ஆமாம், அந்தப் பெரியம்மா லேசுப்பட்டவங்க இல்லே. நய மாகப் பேசி, வாய் வார்த்தையைக் கொடுத்து, வயிற்று சங்கதியை வாங்குகிறதிலே முதல் நெம்பரு!'', என்றான் கந்தப்பன்.

வள்ளி ரோசம் பொங்க, ''என்ன இருக்கிறது இங்கே பிரமாத சங்கதி? மண்ணாங்கட்டி! ஏதோ ஒரு நல்ல பண்டம் வாங்கி வந்தார்கள். கொடுக்க வேணும் என்று கொடுத்தார்கள். அதைச் 'சொல்லாதே' என்று ஏன் சொல்ல வேணும் என்றுதான் நான் கேட்கிறேன்! அதனாலல்லவா நான்...,''

''அடபோ! என்னவோ சமயம் அப்படி நேர்ந்திருக்கும்! இதற்கெல்லாம் கண், மூக்கு வைத்துப் பேசக் கூடாது. அவர்கள் வீட்டில் வேலை செய்து வயிறு வளர்க்கிறோம். மேலே கீழே தான் இருக்கும்'', என்று சமாதானம் சொன்னான் கந்தப்பன்.

வள்ளியும் அலுப்புடன், ''அதெல்லாம் சரிதான் அப்பா! வேலை எவ்வளவு செய்யச் சொன்னாலும் செய்கிறேன். உடம்பிலே இருக்கிற உயிரும் உதிரமும், அவர்கள் வீட்டு உப்பைத் தின்று ஊறினது; உழைக்க வேண்டியது தான். 'தில்லு முல்லு' என்று பேர் வாங்கிறதானால்...''

''அடடா! ஒண்ணுமில்லாததுக்கு ஏனிப்படி மனசைப் போட்டு அலட்டிக் கெள்ளுகிறாய் வள்ளியம்மா? சின்னய்யருக்கு...''.

''என்ன மாமா, சுகம்தானா? எப்படியிருக்கிறது உடம்பு?'', என்று குரலைத் தொடர்ந்து உள்ளே வந்தான் நாகலிங்கம்.

''இருக்கிறது எப்பவும் போலத்தான்!''

''என்ன சமாசாரம், மகளைத் தட்டி அடக்கப் பார்க்கிறீர்களே...''.

''ஒண்ணுமில்லே! சின்னப் பிள்ளைகள் விவகாரம்...''.

''என்ன, என்ன?'', என்றான் நாகலிங்கம் பரபரப்புடன்.

''ஒன்றுமில்லே, பட்டணத்திலிருந்து ஐயர் மகன் வந்திருக்கிறார். ஏதோ பழம் வாங்கி வந்தார்களாம். எல்லாவற்றிலும் இரண்டிரண்டுவைத்து, ஏதோ வளர்த்த கிழவனுச்சே என்று கொண்டு வந்து கொடுத்தது. அதைக் கொடுத்ததைச்சொல்ல வேணும் என்று சொல்லிவிட்டுப் போனார். இதோ பார் வள்ளியம்மா, நாருக்கு இந்தப் பழத்திலே இரண்டு கொடு'', என்று நடுவில் சொல்லிவிட்டு, கந்தப்பன் பழத்தை எட்டியெடுக்க முயன்ற போது, ''ஏதுக்கு மாமா இதெல்லாம்? நீங்க உடம்பு சுகமில்லாதவர்கள் சாப்பிடுவதா?'', என்று மறுத்தான் நாகலிங்கம்.

''அவர் நம் கிட்ட வாங்கிக் கொள்வாரா, அப்பா? நாம் ஏழை...'',என்று மேலே ஏதோ தொடரப் போன வள்ளியை இடைமறித்து,

''இதோ பார் வள்ளியம்மா, விஷமமாகத்தான் பேசுகிறாயே, அதை ஒரு அளவோடு பேசக் கூடாதா?'', என்று வேடிக்கையாகக் கேட்டான் நாகலிங்கம்.

"பழம் சாப்பிடுகிறது இருக்கட்டும் மாமா! புதிதாக ஏதோ மகளுக்குப் புத்திமதி சொல்லிக் கொண்டிருந்தீர்களே; என்ன சங்கதி என்றுதான் கேட்டேன்!", என்று விஷயத்திற்கு வந்தான் நாகலிங்கம்.

"அதா! முதலிலிருந்தே சொல்லி விடுகிறேன்! நேற்று சாயந்திரம் துரை இங்கே வந்து இந்தப் பழங்களைக் கொடுத்து விட்டு ராத்திரி வீட்டுக்குப் போனதும் அங்கே என்ன நடந்ததோ தெரியவில்லை; காலையில் வள்ளியம்மா வேலைக்குப் போனதும், "ஏண்டி, பழம் சாப்பிட்டுப் பாத்தியா, எப்படி இருந்தது? என்று கேட்டார்களாம்".

"யாரு?", என்று சுவாரசியமாகக் கேட்டான் நாகலிங்கம்.

"வேறே யாரு! பெரியம்மா தான்! சின்னம்மா இருக்கிறார்களே—ஐயர் சம்சாரம். அந்தம்மாளுக்கு இவ்வளவு கேள்வியெல்லாம் கேட்கத் தெரியாது!", என்று ஆத்திரத்துடன் சொன்னாள் வள்ளி.

'ஓ! ஐயருடைய அக்காளா! சரிதான் சரிதான்! அந்தம்மாள் கேள்வி கேட்டு விட்டு நீ என்ன பதில் சொல்லப் போகிறாய் என்றுபார்த்தார்களாக்கும்!'

"ஆமாம்!".

"நீ கிடந்து விழித்திருப்பாய் திரு திருவென்று!"

"பின்னே! இவர் நான் இங்கே வந்ததாக, இதெல்லாம் கொடுத்ததாக வீட்டுக்குத் தெரிய வேண்டாம்", என்று சொல்லிவிட்டுப் போயிருக்கும் போது நான் நொடிப் பொழுது பதில் சொல்ல முடியாமல் தவித்த தவிப்பைப் பார்த்து விட்டு அந்தம்மா என்னைக் கேட்ட கேள்வியிலே இருந்த ஒரு நினைப்பு இருந்ததே—இது தான் என் மனதைச் சுட்டுவிட்டது மச்சான்! வயிறு இல்லாட்டி...",என்று ஏதோ துடுக்காகச் சொல்ல வந்தவளை இடை மறித்துக் கந்தப்பன் கோபத்துடன், "என்ன புத்தி கெட்டத் தனமாகப் பேசுகிறாய் வள்ளியம்மா? என்ன ஆகி விட்டது இப்போது?", என்று உரத்த குரலில் அதட்டினான் மகளை.

என்ன ஆகி யிருக்கிறது என்பதைப் பற்றி விஸ்தரித்துச் சொல்லி விளங்க வைக்க வேண்டும் தகப்பனுக்கு என்று ஆத்திரம் வள்ளிக்கு. நாகலிங்கம் ஒருவன் மத்தியில் இடறு கட்டையாக இருந்ததால் தன் ஆத்திரத்தைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு துடிதுடிப்புடன் உருட்டி விழித்துக் கொண்டு நின்றாள் வள்ளி!

அவளுடைய முகத்தில் இழையோடும் உணர்ச்சிகளிலிருந்தே—என்ன நிகழ்ந்திருந்திருந்தால்—அவள் அவ்வளவு கொதிப்படைவாள் என்பதை கணித்தறிந்து கொண்டுவிட்டு, நிதானமான குரலில், "மாமா, நீங்களோ அந்த நாளைய மனிதர். உங்களுக்கு வெளுத்த தெல்லாம் பால். கவடு, சூது தெரியாமல் உங்கள் காலத்தையும் ஓட்டி விட்டீர்கள். ஆகி விட்டது. இன்னும் கொஞ்ச நாள்தான். நீங்கள் பார்த்த அந்த நாளே வேறு; இந்த நாளே வேறு மாமா!......" என்று உள்ளே குமைவும்

டாக்டர்:—எல்லோருக்கும் கழுத்து வலியா ? ஏன்......என்ன செஞ்சிங்க?

நோயாளிகள்:—ரஷிய சந்திரனை பார்த்தோமுங்க...!

வெளியே வேடிக்கையுமாகப் பேசினுன் நாகலிங்கம்.

"அடே, நீ என்னடா! அந்த நாளும், இந்த நாளும் ரொம்ப கண்டவன்! உங்களைப் போலெல்லாம் நாலு எழுத்துப் படிக்காத போனுலும் கூட, குட்டிச் சுவருக்கு ஆனமாதிரி, எனக்கு ஆன வயசுக்கு, நான் எவ்வளவைப் பார்த்து, கேட்டு, அனுபவித்திருப்பேன்? எனக்கா நீ கதை சொல்லுகிருய்?", என்று அடித்துப் பேசினுன் கந்தப்பன்.

ஆனுல் கந்தப்பன் குரலிலிருந்த தாட்டிகமும், களங்கமின்மையும் அவன் மனதிலில்லை. அங்கே, 'குறு குறுப்பு' இருக்கத்தானிருந்தது.

இதற்குள்ளாக கந்தப்பனுடைய கட்டளைப்படி நாகலிங்கத்திற்காக ஒரு ஆரஞ்சுப் பழத்தை எடுத்து உரித்து அவனருகில் வைத்தாள் வள்ளி.

அதில் ஒரு சுளையை எடுத்துக் கொண்டு, "எனக்குப் போதும் மாமா, இதை நீங்கள் சாப்பிடுங்கள்", என்று கந்தப்பனிடம் வைத்து விட்டு எழுந்தான் நாகலிங்கம்.

"இந்தா நாகலிங்கம், வீட்டுக்குத்தானே போகிருய்?", என்று கேட்டான் கந்தப்பன்.

"ஆம் மாமா! என்ன வேணும்?"

"இந்தா, இந்தப் பழத்தை ஒரு கடிதாசியில் சுற்றிக் கொடு. பூங்காவனமாவது சாப்பிடட்டும்", என்ருன் கந்தப்பன்.

"வேண்டாம், வேண்டாம், நீங்கள் சாப்பிடுங்கள் மாமா!", என்று கூறிவிட்டு அவன் எழுந்ததும்......

"உள்ளதைத் தான் சொல்லுகிறேன் மச்சான்! இப்போது வடிக்க அரிசியில்லை. உங்கள் வீட்டுக்குத்தான் கடனுக்கு வர வேண்டும்? நீங்கள் பழம் சாப்பிட மறுத்தீர்களே என்று நான் கடனுக்கு வராமல் இருக்க முடியாது!"

"சரி, சரி, இன்றைக்கு ஏதோ வள்ளியம்மாள் மனசு சரியாக இல்லை! பேச்சு, கோணல் மாணலாகப் போகிறது! நான் வீட்டுக்குப் போய் பூங்காவனத்திடம் அரிசி கொடுத்தனுப்புகிறேன்", என்று கூறிவிட்டு எழுந்து விடைபெற்றுக் கொண்டான் நாகலிங்கம். (தொடரும்)

போன் : 203 தந்தி : "TRANSPORT"

சண்முகம் டிரான்ஸ்போர்ட்
பஸ் & லாரி சர்வீஸ்

அருப்புக்கோட்டை



எங்களுடைய லாரிகள் கீழ்க்கண்ட ஊர்களுக்கு தினசரி போய் வந்து கொண்டிருக்கின்றன.

1. அருப்புக்கோட்டை To ராஜபாளையம்
2. அருப்புக்கோட்டை To தூத்துக்குடி
3. விருதுநகர் To பெருநாழி
4. விருதுநகர் To கடலாடி (Via) முதுகுளத்தூர்
5. மதுரை To சாயல்குடி
6. மதுரை To அருப்புக்கோட்டை

பொதுஜனங்களும் வியாபாரிகளும் எங்களை ஆதரிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

போன் : 512 - பிராஞ்சு: மதுரை - தந்தி : "TRANSPORT"

Telegrams : 'PIONEER' Coimbatore.

Telephones : 160, 361.

THE COIMBATORE PIONEER MILLS LTD.,

P. B. NO. 4.

PEELAMEDU :: COIMBATORE

FOUNDER PARTNERS:

Messrs. P. S. G. & SONS.

No. of Spindles 27,226

Manufacturing 60's, 80's and 100's Combed Yarn

Staff Employed : 41.

Labourers Employed 934.

—:o:—

'B' Mills, Perianaickenpalayam

No. of Ring Spindles ... 22,000

Manufacturing 20's to 40's Yarn.

Staff Employed: 6.

Labourers Employed 320.

Practical Training Being Given to :

DIPLOMA STUDENTS IN :

L.T.M., L.M.E., L.E.E.,

புன்னாகவராளி

இரா. சுப்ரமணியம்
செயின்ட் சேவியர்ஸ் காலேஜ், பாளையங்கோட்டை

ஆக்ரா நகரம் முழுவதுமே அன்று ஆனந்தத்தில் மூழ்கிக் கிடந்தது. மக்களுடைய மனத்தில் தனிப்பட்டதொரு மகிழ்ச்சி. திருப்தி நிலவிய முக விலாசத்துடன் அவர்கள் வளைய வந்தனர். காரணம்......? நாற்பது தினங்கள் அனுஷ்டித்த விரதத்தைப் பூர்த்தி செய்து அல்லாவின் அருளுக்குப் பாத்திரமாகப் போகிறோம்என்ற பெருமிதம் எல்லோர் உள்ளத்திலும் துள்ளி விளையாடியது. அந்த நல்ல நாளிலே ஷாயின் ஷா அக்பர் பாதுஷா ஆக்ராவிற்கு விஜயம் செய்கிறார் என்றால் மக்களுடைய உற்சாகத்திற்குக் கேட்பானேன்?



பாரத நாட்டின் பெரும் பகுதியில், முகலாயர்ஆட்சி வேரூன்றிச் செழித்தோங்கி வளர்ந்து நின்ற காலம் அது. பேரரசர் பாபர் ஸ்தாபித்த முகலாய ஆட்சியில் அக்பர் தனிப்பட்டதொரு சிறப்புடன் ஆட்சி பீடமேறினார். அவருடைய நேர்மையான ஆட்சிக்கு அவருடைய சிறந்த பண்பு மெருகிட வேற்றுமை எதுவுமின்றி அவர் மக்களை நடத்தியதால் அனைவரும் அவரைத் தெய்வம் போல வழிபட்டனர். உயர்ந்த கொள்கைகளை லட்சியமாகக் கொண்டு இந்து முஸ்லீம் வேற்றுமையை அறவே ஒழிக்கப் பாடுபட்டு வந்த அக்பர் பாதுஷாவின் பண்பை யார்தான் புகழ மாட்டார்கள்?

இத்தகைய சிறப்புப் பெற்ற பாதுஷா முஸ்லீம்களின் மகிழ்ச்சித் திருநாளான ரம்ஸான் பண்டிகையன்று ஆக்ராவிற்கு விஜயம் செய்வதால் திரள் திரளாக மக்கள், தங்களை உயிராக எண்ணி, உய்யத் தாங்கும் உடலென்ன மன்னர் அக்பர் பாதுஷாவை, உற்சாகமாக வரவேற்பதில் ஈடுபட்டிருந்தனர். தெருவெங்கினும் தோரணங்கள்! இல்லங்களெங்கும் மலர்க்குவியல்கள். அருங்குணங்களமைந்த அக்பர் பாதுஷாவின் பவனியைப் பார்த்துப் பரவசமாவதற்காக மக்கள் ஆங்காங்கே குழுமி நின்றனர்.

"தளபதி! ......ஆக்ரா மக்களது வரவேற்பிலும் அன்பிலிருந்தும் விடுபட்டு டில்லி திரும்பவே இயலாது போலிருக்கிறதே......" ஆம்! பாதுஷாவே இந்த அன்பு வெள்ளத்தில் திணறித் திண்டாடித்தான் போனார்.

"ஜஹாம் பனாஹ்...... சக்கரவர்த்திக்கு வரவேற்பளிக்கக் கூடிய பாக்கியத்தை அளித்ததற்காகவே, ஆக்ராவாசியினர் தங்களுக்கு நன்றி

தெரிவிக்க விரும்புகிறார்கள் ; அவர்களுடைய அன்பை....'' மேலும் தொடர எண்ணினார் அக்பர் பாதுஷாவின் அந்தரங்கத் தளபதி அகமது கான்.

பாதுஷா இடைமறித்தார்; அவருடைய இதழ்க் கடையில் சிறு புன்முறுவல் நெளிந்தோடியது.

"அது போகட்டும். இதோ பார், இந்த இயற்கை அன்னையின் திருமுக எழில் என்னைப் பெரிதும் ஈர்க்கிறது. அதோ, சல சல, வென்று பாயும் ஆற்றின் அழகைக் கவனி. இந்தப் பால் பொழியும் வெண்ணிலவில் யமுனை ஆற்றில் படகிலே சிறிது தூரம் சென்று வந்தால் எவ்

தட்டும்படி செய்து கொண்டிருந்தது. சுருங்கக்கூறின், அந்த நள்ளிரவில் யமுனை யாற்றங்கரையில் இயற்கையன்னை அழகுத் தாண்டவம் செய்து எழில் பரப்பி நின்றாள்.

ரசனை மிகுந்த உள்ளத்தோடு, இயற்கையின் தெய்வீக அழகிலே மயங்கி அமர்ந்திருந்தார் அக்பர் பாதுஷா. யமுனை ஆற்றின் தெளிந்த நீரைக் கிழித்துக்கொண்டு முன்னேறிக் கொண்டிருந்தது படகு. கலையின் அடங்காத வெறி கொண்ட கலைஞனைப்போல, என்றும் திருப்தி அடையாத ரஸிகனைப் போல, இயற்கையின் அழகைப் பருகிக் கொண்டிருந்தார் பாதுஷா.

வளவு இன்பமாக இருக்கும்!.. என்ன யோசிக்கிறாய், அகமது ...?''

"அதற்கென்ன ஆலம்பனாஹ், தங்கள் சித்தப்படி உலவ இதோ ஏற்பாடுகளைச் செய்கிறேன் .....''

பாதுஷாவின் வருகையால் ஏற்பட்ட மக்களது கோஷம் கடலொலியை வென்றது. அந்த ஆனந்த ஒலியோடு போட்டியிட்டு ஒலித்துக் கொண்டிருந்தது யமுனை ஆற்றின் பிரவாகம். விண்ணையாளும் வெண்ணிலவின் ஒளி வெள்ளம், சுருண்டோடும் அலைகளின் இடை இடையே தங்கக் கட்டிகள் மிதக்கின்றனவோ என்றதொரு பிரமை

படகு நிற்காமல் எவ்விதத் தடங்கலுமின்றிச் சென்று கொண்டிருந்தது. மேலும் ..... மேலும்...... போய்க் கொண்டே இருந்தது. இவ்வுலக நினைவே அற்று விட்டவரைப் போலக் காணப்பட்டார் சக்கரவர்த்தி.

திடீரென்று—

"அகமது .....'' கூப்பிட்டு நிறுத்தினார் பாதுஷா.

"என்ன.........ஆலம்பனாஹ்? '' அடங்காத வியப்புடன் அவரருகில் வந்து நின்றான் அகமது கான்.

"இதோ....சற்றுக் கூர்ந்து கவனி.....''

அவர் சுட்டிக் காட்டிய திசையில் திரும்பி நோக்கினான் அகமது. எதிர்க் கரையில் பயங்கரமான மரங்கள் நெருக்கமாக வளர்ந்த காடு மண்டிக் கிடந்தது. அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

''ஜஹாம் பனாஹ்,.. அங்கே.....''

''உஷ்......''

சட்டென்று பாதுஷாவின் கட்டளைக்குப் பணிந்து இன்னும் கூர்ந்து கவனித்தான் தளபதி.

இதென்ன அதிசயம்! அந்த அடர்ந்த காட்டினிடையே யிருந்து ஆம், இனிமையான வேய்ங் குழலின் இசை!

படகிலிருந்த அனைவரும் ஒரு நிமிட காலம் தம்மை மறந்து நின்றனர்.

சுகமான மென் காற்றினிடையே இன்ப அலைகளை வீசிப் பரப்பி வந்தது சுளைவயான குழலின் கீதம்! அடடா....., அந்த இன்னிசை அனைவரது இதயத்தையும் நெகிழச் செய்தது! அதுவும் முகம்மதியர்களுக்குப் பிடித்தமான, மனத்தை விகசிக்கச் செய்யும் மால்கோஷ் ராகம்.

ஒரு நிமிஷம்...இரண்டு நிமிஷம்... மூன்று ... நான்கு ... ஐந்து... நேரம் சென்று கொண்டே யிருந்தது. ஒருவராவது ஆடவோ அசையவோ இல்லை. பாதுஷாவின் உடலில் ஒரு விதமான புல்லரிப்பு.

அகமதுகான் தான் முதலில் மெல்லிய குரலில் பேசினான். ''ஜஹாம்பனாஹ்... இத்தகைய குழலின் கீதத்தைப் பாதுஷா இதுவரையில் கேட்டிருக்க முடியாது. இவன் யாரென்று .....''

''தெரியும்....'' பாதுஷாவின் வாயசைந்தது.

அகமதுகானின் கண்கள் வியப்பால் விரிந்தன.

''என்ன, ஷா-இன்-ஷா. .அவன் யாரென்று பாதுஷாவுக்குத் தெரியுமா....?''

''ஆமாம், அவன் ஒரு கலைஞன்!''

மிக்க வியப்புடன் பாதுஷாவை ஏறிட்டு நோக்கினான் தளபதி. மெதுவாக அவனை நிமிர்ந்து பார்த்து இலேசாகச் சிரித்தார் அக்பர் சக்கரவர்த்தி. அந்தச் சிரிப்பில் தவழ்ந்த பாவத்தை அகமது புரிந்து கொண்டானோ, என்னமோ?

''தளபதி கடவுள் சிலரைச், சிருஷ்டி செய்யும் போதே கலைத் தேவியின் அருளையும் கூடப் பூரணமாக அளித்து விடுகிறார். படைப்பிலேயே கலையம்சத்துடன் பிறக்கும் கலைஞனது தனிச்சிறப்பை என்னவென்று சொல்வது.....!'' அரண்மனையில் அந்தரங்கத் தளபதியுடன் வார்த்தையாடிக் கொண்டிருந்தார் அக்பர் பாதுஷா.

''ஆமாம், ஜஹாம் பனாஹ். தாங்கள் கூறுவது முற்றிலும் உண்மை. நேற்றிரவு அனுபவித்தோமே குழலிசை. அதை இசைத்தவனின் ஞாபகம் தான் வருகிறது, ஆலம் பனாஹ். அவன் ஒரு பிறவிக் கலைஞனாகத்தான் இருக்க வேண்டும்! .,...''

''அகமது, சரியாகச் சொன்னாய். அவனை எண்ணிக் கொண்டு தான் நானும் அப்படிச் சொன்னேன். அந்தக் கலைஞன் இல்லாத நமது அரசவை சிறிதும்சோபிக்காது.தளபதி, அவனை எப்படியாவது டில்லிக்கு அழைத்துக் கொண்டு சென்று விட வேண்டும்''. உலகத்தில் நல்லதை

யெல்லாம் கொள்ளவேண்டும் என்றஆசை யாரைத்தான் விட்டது. அக்பர் சக்கரவர்த்தியும் அதற்கு விலக்கில்லை என்பதை மெய்ப்பித்தது அவரது பேச்சு.

''ஆனால், பிரபோ, அவன் யாரென்றே நமக்குத் தெரியாதே....''

''யாராயிருந்தால் என்ன? இன்று இரவு வீரர்கள் சிலருடன் நீ செல். அக்கலைஞனைப் பலவந்தம் செய்யாது, உற்சாகப்படுத்தி பணிவுடன் அழைத்து வரவேண்டும். உனது சக்கரவர்த்தியின் உள்ளத்தில் எழுந்த கலை உணர்ச்சியின் ஆவலைத் தணிக்கும் பெரும் பொறுப்பை உன்னிடம் ஒப்புவிக்கிறேன். பொறுப்பு மிகவும் பக்குவமாக நிறைவேற்றப்பட வேண்டியது. என்ன, செய்வாயா.....அகமது..?''

''ஆஹா, ஆலம்பனாஹ் தங்கள் சித்தம்......''

முந்தைய இரவைப் போலவே அன்றும் யமுனையாற்றங் கரையில் உல்லாசப் படகில் அக்பர் பாதுஷா அமர்ந்திருந்தார். அன்றும் இனிமையான குழலிசையின் நாதம்! அகமதுகானும், அவனுடன் இன்னும் சில வீரர்களும் அடர்ந்த காட்டினிடையே குழல் மூலம் அமுதம் பரப்பும் கலைஞனைத் தேடி அடி மேல் அடி வைத்து அந்த நள்ளிரவில், மெல்ல நடந்து சென்றனர்.

இன்று—

நேற்றிருந்த மந்தகாசம் எங்கே...?

குழலின் மெல்லிசையில் விவரிக்க இயலாத பயங்கரம் நிலவுகிறதே! உள்ளத்தைச் சிலிர்க்கச் செய்யும் உணர்ச்சியின் சாயலோ அது! ஆம், அந்தக் குழலினின்று வெளி வந்து காற்றிலே கலந்தது புன்னாக வராளி.

அந்த நள்ளிரவில் பாதுஷாவின் செவிகளில் எப்படியோ சென்று ஒலித்தது புன்னாகவராளி ராகம். எங்கிருந்தோ ஒரு பயங்கரம் வந்து சூழ்ந்து கொண்டது. ஓய்வு பெற எண்ணினதே போல, திங்களும், மேகக் கற்றை யொன்றின் இடையே ஒதுங்கியது. எங்கும் அந்தகாரம்!

இசையின் வேகம் அதிகரித்தது. வேகம் அதிகரிக்க, அதிகரிக்க அதன் உணர்ச்சியும் வலுத்தது. பாதுஷாவின் உள்ளத்திலே எல்லையற்ற பீதி புகுந்தது போன்றதொரு பிரமை!

ஆஹா, இசையின் சிறப்பே தனி! நவரஸங்களில் எதைத்தான் விட்டு விடுகிறது! அவை எல்லாவற்றின் பாவங்களையும் கலைஞன் எவ்வளவு எளிதில் படம் பிடித்துக் காட்டி விடுகிறான்! 'பயானகம்' என்னும் ரஸத்தை நம் உணர்வாக்க, புன்னாகவராளியை விடச் சிறந்த கருவி அக்குழலாதும் கலைஞனுக்கு எப்படிக் கிடைக்க முடியும்? இழைக்கின்ற விதி அந்தக் கலைஞனை எங்கே இழுத்துச் செல்லுகின்றதோ!

ஒரு நிமிட காலம் பாதுஷாவின் உடல் முழுவதும் சிலிர்த்தது. ஆம், பாரத நாட்டின் புகழ் பெற்ற வீரப் பேரரசன் அக்பர் ஷா-யின்-ஷாவின் உடலில் அந்த 'பயானகம்' என்னும் உணர்ச்சியைத் தன் அனுபவ பூர்வமாக ரஸிக்கச் செய்வதில் வெற்றி பெற்று விட்டான் அந்த உண்மைக் கலைஞன். அவன் யாரோ...?

''ஹா...'' என்ற தொரு சப்தம் குழலிசை வந்த திக்கிலிருந்து கேட்டது.

சில விநாடிகள் பொறுத்து அகமதுகானும் மற்றும் சில வீரர்களும் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்த உடலொன்றைக் கொண்டு வந்து, பாதுஷாவின் முன்னிலையில் கிடத்தினார்கள். கூட வந்திருந்த அரண்மனை வைத்தியர் உடனே கவனிக்கலானார்.

பாதுஷா அந்த உடலைக் கூர்ந்து நோக்கினார். நீண்ட தாடியும், உடல் முழுவதும் கொண்ட சுருக்கங்க

ளோடு இருந்த அந்த உருவத்தைப் பரிவோடு ஆராய்ந்தார். அந்த இறுதி நிலையிலும் கூட முகத்தில் கலைச் சிறப்புக்கே உரியதொரு மெருகு; ஆம், இன்னும் அவியவில்லை.

பாதுஷா நிமிர்ந்து அகமதுகானை நோக்கினார்.

அவனும் குறிப்பறிந்து கொண்டு பேச ஆரம்பித்தான்.

"ஷா-இன்-ஷா, சிறு தவறு ஒன்று நேர்ந்து விட்டது. மன்னிக்க வேண்டும். இந்தக் கலைஞன் தன்னை மறந்து கண்களை மூடிய நிலையில் புன்னாகவராளியை ஊதிக் கொண்டிருந்தான். இவனுடைய இசை

197689

யின் வன்மையில் லயித்து ஒரு நாகப் பாம்பு இவன் முன் படமெடுத்து ஆடிக் கொண்டிருந்தது. வரப்போகும் ஆபத்தின் உணர்ச்சியே அற்றவனாக இசையிலே ஆழ்ந்து கிடந்தான் போலும்! நிலைமை மீறிச் செல்லும் முன்பாக, அக்கலைஞனைச் சர்ப்பம் தீண்டிவிடக் கூடாதே என்ற படபடப்பில், அதன் மீது கத்தியை வீசி யெறிந்தேன். ஆனால், :குறி தவறி இக்கலைஞரின் காலில் சென்று பாய்ந்தது அக் கொடிய ஆயுதம்."

பாதுஷாவின் கண்களில் காணப்பட்ட சோக பாவத்தைக் கண்டு திகைத்தான். மேலே மெதுவாகத் தொடர்ந்தான் தளபதி.

"திடீரென்று தாக்கப்பட்டதின் பயனாக நிலை தடுமாறி, இவனது குழலிசைக்குத் தடையேற்பட்டது. மறு நிமிஷம், ஆலம்பனாஹ், அந்த நாகம் கட்டுக்கடங்காத கோபத்துடன் சீறி, மின் வெட்டும் நேரத்தில் அவனைத் தீண்டிவிட்டு 'சரசர' வென்று புதருக்குள் சென்று மறைந்து விட்டது". 'சட்'டென்று பேச்சை நிறுத்தினான் முகமது.

மெதுவாக மீண்டும் குனிந்து அந்த முதியவனின் முகத்தை உற்று நோக்கினார் பாதுஷா. வைத்தியரின் முகத்தில் ஒளி இல்லை. பாதுஷாவின் கண்களிலிருந்து இரு சொட்டுக் கண்ணீர்த் துளிகள் அக்கலைஞனுக்குக் கடைசி மரியாதை செலுத்தும் வகையில் உருண்டோடி வழிந்தன.

"கலைத் தேவியின் பூரண அருளைப் பெற்ற இந்தக் கலைஞனின் உயிருக்கே என்னை யறியாது தீங்கிழைத்து விட்டேனே, எனக்கு மன்னிப்பேது...?" என்று ஈனஸ்வரத்தில் வெளிவந்த சக்கரவர்த்தியின் சோகக் குரல், அப்பிரதேச முழுவதையும் துன்ப மயமாக்கிக் கொண்டு, இருளின் கருமையோடு இழைந்து ஒலித்தது.

P.R.A & SONS
TINNEVELLY DISTRICT
INDIA (MUKKUDAL P.O.) REGD No. 6444
அசல் ராமகிருஷ்ண மார்க்
TRADE MARK
REGD NO 6444
பீடி கம்பெனி முக்கூடல்
RAMAKRISHNA MARK BEEDI

Telegrams : 'RANGAVILAS' Telephone : 17 & 817

SRI RANGA VILAS GINNING, SPINNING & WEAVING MILLS LIMITED.

(Incorporated in 1922)

PEELAMEDU P. O. COIMBATORE

SPINDLES	: :	36,368
LOOMS	: :	88

SPINNERS OF:

Superior kinds of yarn from 2^s to 80^s counts

&

WEAVERS OF:

Grey Gada and Dhoties.

Managing Partner:—

G. N. VENKATAPATHY.

போன் : 151 தந்தி : VESSELS

குறைந்த விலையில் சிறந்த பாத்திரங்கள்

எவர் சில்வர் பாத்திரம், எவர் சில்வர் தகடு,
பித்தளை, செம்புப் பாத்திரம், பித்தளை,
செம்புத் தகடுகள் உத்திரவாதத்
துடன் கிடைக்கும்.

★

பெ. சீ. சீ. சுந்தரம்மாள் அன் கோ.,

பாத்திர வியாபாரம்

28, வெங்கலக் கடைத் தெரு,

மதுரை.

எங்கள் 40 குச்சி கோபுரம் மார்க், சிம்கோ லைட் மார்க், சிம்கோ சைகிள் மார்க், மைனர் சைஸ் சீனா லேடி மார்க் 60 வேட்டை சிங்கம் மார்க் தீப்பெட்டிகள்.

கடற்கரை குளிர்ப்பிரதேசங்களுக்கும், மற்றும் மலபார் மழைக்கும் உகந்தது.

சிறந்த விதமான சரக்கு உற்பத்தி !

சிறப்பான பொதுஜன ஆதரவு !

தினம் குடிசைத் தொழிலாகத் தயாராகும் 3300 குரோஸ்கள் தீப்பெட்டிகளும் எங்களுடைய டெப்போக்களிலேயே செலவாகின்றன.

சிம்கோ :: :: சிவகாசி S. I.

போன் : **63** — தந்தி : ***SIMCO***

நிமிஷக் கதை

மூளைக்குப் பணம்!

"ரஞ்சனி"

மைசூரிலிருந்து ஊட்டிக்குக் கந்தசாமி கௌண்டர் தன் காரில் சென்று கொண்டிருந்தார். கௌண்டர் ஒரு மைனர் பேர்வழி. புதிதாக வாங்கிய காரைத் தானே ஓட்டிக் கொண்டு போவதில் ஒரு தனி சந்தோஷம். அவருடன் அவர் இளம் மனைவி, முதிர்ந்த தாயார், குழந்தை, மச்சினியும்தான்.

கார் மனோவேகமாக அடர்ந்த காட்டுக்கு நடுவேயுள்ள பரந்த ரஸ்தாவில் சென்று கொண்டிருந்தது. இருபுறமும் உயர்ந்த மரங்கள். மலைப் பிரதேசம், குளு குளு வென்று காற்று. எங்கும் பசுமை. அதிகமான மனித சஞ்சாரம் கிடையாது.

நமது கௌண்டர் ஒரு லோபி. பணம் இருந்து என்ன பிரயோஜனம்? எச்சில் கையால் காக்கையை ஓட்ட மாட்டார்!

திடீரென புது வண்டி, 'குப்குப் பட்பட்' என்றது. 'புஸ்' என்று நின்று விட்டது. 'கிரீச்' என்று பிரேக்கை அமுத்தினார் கௌண்டர்.

காரின் முன் பாகத்தைத் திறந்து தனக்குத் தெரிந்த வரையில் ஏதோ சிகிச்சை செய்தார். ஒன்றும் பலிக்கவில்லை. அவர் சில்க் சட்டைதான் அழுக்கானது மிச்சம். கவலை கொண்டார் முதலில். வேளை இருட்ட ஆரம்பித்துவிட்டது. திகில் அடைந்து விட்டார்.

அப்போது யாராவது காரை ஓட வைத்து விட்டால் நூறு ரூபாய் கொடுத்திருப்பார்.

திடீரென ஒரு ஒட்டைக்கார் வந்து நின்றது. ட்ரைவர் மட்டும் தான் அதில். அவன் இறங்கினான்.

"ஐம்பது ரூபாய் கொடுத்தால் ஓட வைத்து விடுகிறேன். அட்வான்ஸாகக் கொடுக்கணும்," என்றான்.

"சரி" என்றார்—ஐம்பது ரூபாய் மிச்சம் என்ற சமாதானத்துடன் பணத்தையும் கொடுத்தார்.

ட்ரைவர் என்ன செய்தான்? கொரடாவை எடுத்தான். "டக்டக்" என்று தட்டினான். கார் உயிர் பெற்று விட்டது.

"என்ன டிரைவர், 'டக்டக்' என்று தட்டினதற்கா, ஐம்பது ரூபாய்?" என்றார் ஏமாற்றத்துடன்.

"இல்லிங்க. 'டக்டக்" என்று தட்டினதற்காக ஒரு ரூபாய்தான். ஆனால், எங்கே தட்டுவது என்பதற்கு நாற்பத்தொன்பது ரூபாய்" என்று சொல்லி 'விர்' எனப் பறந்து விட்டான்.

அதற்குள் அவர் மனைவி, 'என்னுங்க! நான் வேறே நம்ம தெய்வத்துக்கு நூறு ரூபாய் உண்டியலிலே போடறேன்னு வேண்டிக்கிட்டேனுங்க!' என்றாள். ★

கட்டிட வேலைகளுக்கெல்லாம்
திட்டமாக குறிக்க வேண்டியது..



சூலம் மார்க்
சங்கர் பிராண்ட்
போர்ட்லண்ட்
ஸி மெ ண் ட்

திடத்திலும், தரத்திலும், தேர்ந்தது

சர்க்கார் சோதனைச்சாலையின் நற்சாட்சி பத்திரம் பெற்றது

இந்தியா ஸிமெண்ட்ஸ் லிட்
தொழிற்சாலை: சங்கர் நகர், திருநெல்வேலி ஜில்லா
ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: 11/12. செகெண்ட் லைன் பீச், மதராஸ்-1

சென்னை: காசினோ, பிரபாத், சரஸ்வதியில்

Regd No. M. 6928 PUTHUMAI

தந்தி: 'ஜுவல்லர்ஸ்' போன்: 49

பவுன், தங்கம், வெள்ளி
வைர நகைகளுக்கு

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

திருச்சிராப்பள்ளி

கிளைகள்: சென்னை, காயல்பட்டணம்,
யாழ்ப்பாணம் & கொழும்பு.

Edited and Published by K. T. Kosalram and Printed by G. Rengiah, Manager, Mohan Ram Press, at 283-A, T. H. Road, Madras-5.